www.tamilarangam.net

அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 19-08-1994

உள்ளே...


- . எழுதமுடியாத காவியங்கள் - கரும்புலிகள் தொடர்பான சிறப்புக் கட்டுரை.
- . "எமது மண்ணுக்கே திரும்ப வரவேண்டும்".
- . தமிழீழ உட்கட்டுமானம்.
- . அவநம்பிக்கையின் அடிப்படையில் பிறந்த...
- . சிறுகதை - தீர்வு.

= இன்னும் பல சிறப்பம்சங்களுடன்...


# மன்னார் - மட்டக்களப்பு - திருமலையில் புலிகளின் வெற்றிகரமான தாக்குதல்கள்

## தமிழீழத்தில் சிறீலங்காவின் இறைமை செல்லுபடியாகாது

பலாலி முகாம் தாக்குதலை அடுத்து, ஒரு வாரம் கழித்து நான்கு நாட்களுக்குள் திருகோணமலை, கதிரவெளி இராணுவ முகாம்களும் மன்னார் பொலிஸ் காவல் நிலை ஒன்றும் மட்டக்களப்பில் இராணுவ முகாம் ஒன்றும் விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்டு பெரும் சேதத்திற்குள்ளாக்கப்பட்டன. இத்தாக்குதல்கள், "பயங்கரவாதத்தை கிழக்கில் ஒழித்துவிட்டோம்; ஐ. தே. கவை மீண்டும் வெற்றிபெறச் செய்தால், வடக்கிலுள்ள பயங்கரவாதத்தையும் விரைவில் ஒழித்துவிடுவேன்" என்று முழக்கமிட்ட டி. பி. விஜேதுங்கவிற்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளன.

தமிழீழமெங்கும் சிறீலங்காவின் இறைமை செல்லுபடியாகாது என்பதை நிருபிக்குமாற்போல், மன்னார் -மட்டக்களப்பு -திருமலைப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் மீது, வெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

மன்னார், கட்டிடப்பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் இயங்கி வந்த சிறீலங்காப் பொலிஸ் நிலையத்தை, விடுதலைப் புலிகள் முற்றாகத் தகர்த்தெறிந்துள்ளனர். பல மணிநேரமாகக் கட்டிடம் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்ததாக, அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதலில் இரண்டு பொலிஸ் நிலையப் பொறுப்பாளர்கள் உட்பட, 11 பொலிசார் உயிரிழந்ததாகவும் நாலுபேர் காயமடைந்ததாகவும் சிறீலங்கா அறிவித்தபோதிலும், சேத எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடும் என மன்னார்ச் செய்திகள் தெரிவிக்கின்றன. பேருந்து ஒன்றில் வந்த விடுதலைப் புலிகளே இதனைச் செய்ததாக, சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றன. பயணிகள் பேருந்து என நினைத்து, சோதனையிடுவதற்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

## மக்களின் உரிமைக்காகப் போராடுபவர்களுடன் நாம்

– யாழ். ஆயர்

## தமிழருடைய பாதுகாவலர்களாக விடுதலைப்புலிகள்

- பி.பி.சி. செய்திமுகவர்

"நாங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தருகின்றோம் என்பதல்ல; ஆனால் அவர்கள் எப்பொழுதுமே மக்களின் உரிமைக்காகக் குரல் எழுப்பி வருகின்றனர். எனவே நாங்கள் அவர்களுடன் இனங்காணப்படுவதாக இருக்கலாம்" என யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த பி. பி. சி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னிக்கு வழங்கிய பேட்டியின்போதே தெரிவித்துள்ளார்.

திருப்பலி ஆராதனை ஒன்றின் பின், ஆயரைச் சந்தித்த ஜோர்ஜ் ஆர்னி அவர்கள் கத்தோலிக்க மதபீடம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குகின்றதா? எனக் கேள்வி எழுப்பி

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# பலாலி முகாமுக்குள் ஊடுருவித் தாக்குதல்

# அமெரிக்காவில் கட்டப்பட்ட உலங்குவானூர்தி தகர்ப்பு

## 2 மணி நேரம் துணிகரச்சண்டை

சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் வடமாகாண அரண் முகாமான பலாலி முகாமுக்குள் ஆவணி 2 ஆம் திகதி அதிகாலை 2.30 மணியளவில் ஊடுருவித் தாக்கிய விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளுக்கும் இடையில் இரு மணிநேரச் சண்டை நடந்துள்ளதாக சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் அறிவித்துள்ளது.

இத்தாக்குதலின்போது, விமானங்கள் நிறுத்தப்படும் பகுதிக்குள் திடீரென வெடிச்சத்தம் கேட்டதெனவும், பலத்த பாதுகாப்புடன் இருந்த இப்பகுதிக்குள் எவ்விதம் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் நடந்ததென சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் அதிர்ந்துபோயுள்ளன எனவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வெடித்துச் சிதறிய உலங்குவானூர்தி

இத்தாக்குதலில், அமெரிக்காவில் கட்டப்பட்ட உலங்குவானூர்தி ஒன்று, விடுதலைப் புலிகளின் தகர்ப்புக்கு இலக்காகி வெடித்துச் சிதறியுள்ளது எனவும், சிறீலங்கா விமானப்படை அணியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும் சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் ஒப்புக்கொண்டுள்ளன. அதே வேளை ஊர்ஜிதமற்ற செய்திகளின்படி, பலாலி விமானங்கள் நிறுத்தும் பகுதி பலத்த சேதத்துக்குள்ளாகின எனவும், மேலும் ஒரு விமானமும் சேதத்துக்குள்ளாகி இருக்கலாம் எனவும் தெரியவருகின்றது.

### கடல் வழியாக ஊடுருவித் தாக்குதல்

சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் தலைமையகச் செயற்பாட்டு முதன்மை அலுவலர் பிரிகேடியர் ஜி. பி. கலதுங்கா, சிறீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு அளித்த தகவலில், கடல் வழியாக அதிகாலை 2.30 மணியளவில் தற்கொலை அணி ஒன்று ஊடுருவல் செய்திருக்கலாம் எனத் தாம் நம்புவதாகக் கூறியுள்ளார்.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# பிரதமர், அமைச்சர்கள் தெரிவு சிறீலங்கா ஜனாதிபதியின் கையில்!

## தேர்தல் வெறும் கண்கட்டு வித்தையே

சிறீலங்காவின் அரசியல் சாசனத்தின் பிரிவு 43 (உ), சிறீலங்காப் பாராளுமன்றத்தின் நம்பிக்கையை யார் கூடுதலாகப் பெறுகின்றாரோ, அந்த உறுப்பினரையே ஜனாதிபதி பிரதம மந்திரியாக நியமித்தல் வேண்டும் எனக்கூறுகின்றது.

அவ்வாறே சிறீலங்காவின் அரசியலமைப்பு 4 ஆம் பிரிவுப்படி, குடியரசின் அரசாங்கத்தை நெறிப்படுத்துவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பாக்கப்பட்ட ஒரு அமைச்சரவை இருத்தல் வேண்டும். ஜனாதிபதி அமைச்சரவையின் மூத்த உறுப்பினராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அமைச்சரவையின்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# ஐ.நா. உடன்படிக்கைகளை பின்பற்றுமாறு சிறீலங்காவிடம் வேண்டுகோள்

"குடியியல், அரசியல் உரிமைகள் சம்மந்தமான சர்வதேச உடன்படிக்கையை இலங்கை 1980 இல் ஏற்றுக்கொண்டது. ஆனால் உடன்படிக்கையின் தன்னிட்டமான மூலப்படியில், இலங்கை கையொப்பமிட்டிருந்தால், தனிப்பட்டவர்கள் தம் உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதாக, சுதந்திரமாக இயங்கும் மனித உரிமைகள் குழுவுக்கு விண்ணப்பம் செய்யக்கூடியதாயிருக்கும்.

சித்திரவதை மற்றும் கொடிய இழிவான அல்லது மனிதத்தன்மையற்ற முறையில் நடத்துதல் அல்லது தண்டித்தல் ஆகியவற்றுக்கு எதிரான ஐக்கியநாடுகள் உடன்படிக்கையில்,. இலங்கை இவ்வாண்டு சனவரியில் கையொப்பமிட்டு, அதனை ஏற்றுக்கொண்டது. ஆனால் 21 ஆம், 22 ஆம் உறுப்புக்களின் கீழ் செய்யவேண்டிய பிரகடனத்தை இலங்கை செய்யத் தவறிவிட்டது. அவ்வாறு செய்திருந்தால், இந்த உடன்படிக்கையின் படி பிற அரசுகள், கட்சிகள் அல்லது தனிப்பட்டவர்கள் சர்வதேச விண்ணப்பம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தென்னிலங்கைப் பயங்கரவாதம்

சிறீலங்காப் பாராளுமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியது முதல், 3000 இற்கும் மேற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக சிறீலங்காப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. இவற்றில் அமைச்சர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட, ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் தாராளமாகப் பங்கேற்றுள்ளதை சான்றுகள் வெளிப்படுத்துகின்றன. இந்தத் தென்னிலங்கைப் பயங்கரவாதமானது, சில உண்மைகளை உலகுக்கு மீண்டும் தெளிவாக்கியுள்ளது.

1. பிரித்தானியர் ஆட்சிக் காலத்திற்குப் பின்னரான, இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றில், 1956 ஆம் ஆண்டு காலி முகத்திடல் சத்தியாக்கிரகம் முதல், தமிழ்த் தேசிய உணர்வை மழுங்கடிப்பதற்கான ஆயுதமாக, அரச பயங்கரவாதம் என்பது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 1958 ஆம் ஆண்டு இனக்கலவரம், 1960 இல் சத்தியாக்கிரகிகள் மீதான ஆயுதப்படைப் பிரயோகம், 1965 இல் தமிழ் மொழி விசேட சட்டமூலம் நிறைவேற்றப்பட்டபொழுது இடம்பெற்ற சம்பவங்கள், 1970 முதல் 1977 வரையிலான காலப்பகுதியில் பொலிசாரை இராணுவமாகத் தமிழ்ப் பகுதிகளில் பயன்படுத்தியமை என்பன, இந்த அரச பயங்கரவாதத்தின் தமிழர்களுக்கெதிரான திட்டமிட்ட வளர்ச்சிகளாகக் காணப்படுகின்றன. நிராயுதபாணிகளாக நின்ற தமிழ் மக்கள் 1972 இல் அரசியலமைப்பு புறக்கணிப்பின் மூலம் சர்வதேசச் சட்ட நியதிகளுக்கேற்ப அரசற்ற நாட்டினமாகப் பரிணாமம் அடைந்ததின் பின்னர், 1974 இல் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளும் 1983 இன் இன அழிப்பு நடவடிக்கைகளும் தமிழ் மக்களுக்கு ஆயுத எதிர்ப்பு ஒன்றின் தேவையை உணர்த்தியது. எனவே, தமக்கென ஒரு தேசியப் பாதுகாப்பை உருவாக்கவேண்டிய இயல்பான தூண்டுதலுக்கு இலக்காகி, ஆயுத எதிர்ப்பைக் கைக்கொண்டனர். அதன் பின்னர், தென்னிலங்கைப் பயங்கரவாதம் இனப்படுகொலைகளுடன் கூடிய இராணுவ ஒடுக்குமுறையாக, தமிழ் மக்கள்மீது பிரயோகிக்கப்படுவதும், அதனைத் தடுத்து நிறுத்தும் தமிழ் மக்களின் சக்தியாக, தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் மக்கள் அமைப்புத் திகழ்வதுடன், தமிழர் தாயகத்தின் மீட்கப்பட்ட பிரதேசங்களில், விடுதலைப் புலிகளின் தலைமையிலான தமிழீழ மக்களின் அரசுநோக்கிய அரசு செயற்படுவதும், தென்னிலங்கைப் பயங்கரவாதம் தோற்றுவித்த வரலாற்று விளைவுகள் ஆகும்.

2. சிங்கள மக்களைப் பொறுத்தவரை, பௌத்த அமுக்கக் குழுக்களும், சிங்கள அரசாங்கங்களும் பேரினவாத உணர்வை வளர்ப்பதற்குப் பயன்படுத்திய, 'பயங்கரவாதம்' என்னும் ஆயுதத்தை, காலகட்டத்தில் சிங்கள மக்களுக்கு மேல், தமது பதவி வெறியை நிலைநாட்டுவதற்கான மேலாண்மை ஊடகமாகப் பயன்படுத்தத் தொடங்கினர். இதுவே 1970 இல் 20, 000 சிங்கள இளைஞர்களின் மரணத்துக்கும், பின்னர் ஐ. தே. கவின் காலத்தில் 60, 000 இற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களின் உயிர்க் கொலைகளுக்கும் காரணமாயிற்று. சூரியகந்த எலும்புக்கூடுகள் முதல், சொத்தி உபாலி கும்பலகளின் மனித வதைகள்வரை இது தொடர்கதையாயிற்று. இதன் வளர்ச்சிக் கட்டத்தையே தென்னிலங்கைத் தேர்தல் வன்முறைகளாக இன்று உலகம் காண்கின்றது.

3. சொந்தச் சிங்கள மக்களிடையே இத்தகைய பயங்கரவாதச் செயல்களை பதவிப் போட்டிக்காக அனுமதிக்கும் சிறீலங்கா அரசாங்கமும் சிங்களக் கட்சிகளும், தமது பேரினவாத நோக்கில், எத்தகைய பயங்கரவாதத்தை தமிழர்கள் மேல் கட்டவிழ்த்து விட்டனர் -விடுகின்றனர் என்பதை நாம் கூறத் தேவையில்லை. இதனைத் தடுத்து, தமிழினத்தை தென்னிலங்கைப் பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாக்கவே, தமிழீழம் தனியான ஒரு நாடாகவும், சிங்களம் தனியான ஒரு நாடாகவும் திகழவேண்டும் என்பதும், இருநாட்டினரும் இலங்கைத் தீவின் தொடர்ச்சியான நாட்டினங்கள் என்ற வகையில், இருதேசிய இனங்களுக்கு இடையிலும் ஒற்றுமை ஏற்படவேண்டும் என்பதும் இன்றைய தேவையாக உள்ளதெனக் கருதுகின்றோம். ■

# ஐ.நா. மனித உரிமைகள் உப ஆணைக்குழுவுக்கு மகஜர்கள்

சிறுபான்மையினரை இன ஒதுக்கல் செய்வதிலிருந்து பாதுகாத்து, அவர்களது உரிமைகளைப் பேணுவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின், மனித உரிமைகள் உப ஆணைக்குழுவின் 46 ஆவது அமர்வு ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ளது.

இந்த உப ஆணைக்குழுவுக்கு, கலிபோர்ணியாவில் உள்ள மனிதாயச் சட்டங்கள் தொடர்பான திட்டங்கள் அமைப்பு (Humanitarian Law Project) சர்வதேசத் தமிழர் ஒன்றியத்தின் சுவிட்சலாந்துக் கிளை, (International Federation of Tamils, Swiss Section), சர்வதேசக் கல்வி அபிவிருத்தி அமைப்பு (International Educational Devolopment ), சர்வதேச ஒப்பந்தங்கள் சபை (International Treaty Council), தொழிலாளர் ஒன்றியங்களின் பேரவை (Federation of Workers Union), மக்களது விடுதலைக்கும் உரிமைகளுக்குமான சர்வதேச அமைப்பு (International League for the Right and Liberation of Peoples -Permanent Representation at the UNO), ஆகியன சிறீலங்காவின் மனித உரிமை மீறல்கள் குறித்து விளக்கமான மகஜர்களைத் தாக்கல் செய்துள்ளன.

இவற்றுள் ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தரப் பிரதிநிதித்துவ அமைப்பான, மக்களது விடுதலைக்கும் உரிமைகளுக்குமான சர்வதேச அமைப்பு, தனது மகஜரில், "மக்களது விடுதலைக்கும் உரிமைகளுக்குமான சர்வதேச அமைப்பான நாம், சிறீலங்காவில் நிலவும் நிலைமைகள் குறித்து முன் அவதானங்களை மேற்கொண்டு வருகின்றோம். சிறீலங்காவில் நடைபெறும் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களும், 'தொடரும் ஆயுதப் போராட்டமும் எமக்கு ஆழ்ந்த கவலையைத் தருகின்றது. 1983 முதல் வருடா வருடம் எமது அமைப்பு, சிறீலங்கா குறித்து கவனமான பகுப்பாய்வு ஒன்றைச் செய்து, கூட்டுமொத்தமான வன்முறைகளையும், அதனால் மக்களுக்கு ஏற்பட்டுவரும் துன்பங்களையும் நிறுத்துவதற்கு ஏற்ற செயல்களைச் செய்யும்படி, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு வேண்டுகோள் விடுத்து வருகின்றோம்.

சிறீலங்காவில் ஆயுதப் போராட்டமும் மனித உரிமைகளின் நிலைமைகளும் மிகவேகமாக மோசமடைந்துவருகின்றன. மனித உரிமை அமைப்புக்களின் அண்மைக்கால அறிக்கைகள், சிறீலங்கா அரசாங்கத்தை இந்தத் துயரநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி கேட்கின்றன. இந்த அமைப்பானது, சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறி, நீதி விசாரணை எதுவும் இல்லாத கொலைகளைச் செய்பவர்களையும், காணாமல் போகின்றவர்கள் பற்றிய விடயங்களையும், ஏனைய மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணைகளையும் நடத்தாது இருப்பதை மிகவேதனையுடன் இந்த உப ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றது. சிறீலங்கா அரசாங்கம் தனது பாதுகாப்புப் படைகளால் ஏற்படுத்தப்படும் மனித உரிமை மீறல்களை விசாரணை எதுவும் செய்யாது, மூடிமறைத்து விடுவதினால், இவைகளை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய எவ்வித அறிகுறிகளையும் காணமுடியாது உள்ளது.

1993 யூன் 1 ஆம் திகதி முதல், 31 டிசம்பர் வரை, 15,000 தமிழர்கள் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளதாக சிறீலங்கா அரசாங்கமே ஏற்றுக்கொண்டுள்ளமை, ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைதாவதை உறுதிசெய்துள்ளது. நம்பிக்கைக்குரிய தகவல்களின்படி, சிறீலங்கா இராணுவமும் அதனுடன் இயங்கும் ஆயுதக் குழுக்களும் ஆட்களைக் கடத்திச்சென்று, இரகசியமான இடங்களில் சிறைவைப்பது தெரியவந்துள்ளது. இன அடிப்படையில் இனப்பாகுபாட்டை உறுதிசெய்யக்கூடிய சுற்றிவளைப்புக்களில் கைது செய்யப்படுபவர்கள் பொலிஸ் நிலையங்களிலும், இராணுவ முகாம்களிலும், மனிதாயம் அற்ற முறையில் துன்புறுத்தப்படுவதை, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமை அமைப்புக்கள் பதிவுசெய்துள்ளன. எமது தாழ்மையான கருத்து என்னவென்றால், சிறீலங்காவில் நடைபெறும் யுத்தமும் சிவில் யுத்தத்திற்கான நிலைமைகளும் முடிவுக்குக் கொண்டுவரப்படும் வரை, மனித உரிமை விடயத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படுவது என்பது நடக்க முடியாத ஒன்று என்பதே. சிவில் யுத்தம்தான் பன்முனைப்பட்ட வழிகளில் மனித உரிமை மீறல்களை வளர்ப்பதுடன், கசப்புணர்வுகளையும் கோப உணர்ச்சிகளையும் ஊக்குவிக்கின்றது. அரசாங்கம் இராணுவத் தீர்வை முன்வைப்பதினால், தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகள் தொடர்கின்றன. முற்றுகையிட்டுத் தேடுதல், மக்கள் வாழும் பிரதேசங்களில் வான்வழித் தாக்குதல்களை நடாத்துதல், இராணுவ முகாம்களிலிருந்து இனப்பாகுபாடான முறையில் குண்டுவீச்சுக்களையும் எறிகணை வீச்சுக்களையும் நடாத்துதல், உலங்குவானூர்திகள், மிகையொலித்தாரை விமானங்கள், புக்காரா விமானங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி, பொதுமக்கள் மேல் குண்டுவீசுதல் போன்ற இராணுவ நடவடிக்கைகள் தொடர்கின்றன. இத்தகைய மிருகத்தனமான முற்றுகைகள், பழிவாங்கும் நடவடிக்கைகளால் மனித உரிமை மீறல்களும் வன்முறைகளும் அதிகரிக்கும் சாத்தியமே காணப்படுகின்றது. மக்களது உரிமைகளுக்கும் விடுதலைக்குமான எமது அமைப்பானது, மனித உரிமைகள் உப ஆணைக்குழு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், பத்து ஆண்டுகளாக சிறீலங்கா மனித உரிமைகளையோ, மனித உயிர்களையோ மதிக்காது நடாத்திவரும் இச்செயல்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றது", எனத் தெரிவித்துள்ளது. ■

# பூநகரித் தாக்குதலுக்கு துணை நின்ற 13 கரும்புலிகளுக்கு நினைவுக்கற்கள்

கடந்த வருடம் நவம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று, தமிழீழ விடுதலை புலிகளினால் மேற்கொள்ளப்பட்டு, சரித்திர நிகழ் வாகிவிட்ட பூநகரித் தளமீதான 'தவளை' இராணுவ நடவடிக்கையின்போது, அத்தாக்குதலுக்குப் பக்கத் துணையாகி, பலாலி இராணுவத் தளத்தினுள் கரும்புலிகளாகப் புகுந்து, சிறீலங்கா இராணுவத்திற்குப் பேரிழப்பை ஏற்படுத்தியதுடன், எதிரிக்குப் பேரதிர்ச்சியையும், உளப்பாதிப்பையும் ஏற்படுத்தி, பூநகரி வெற்றிக்கு பெரும் பங்காற்றி, வீரச்சாவடைந்த 13 கரும்புலிகள் நினைவாக நடுகற்கள் நாட்டப்பட்டன.

இக்கரும்புலிகளில், யாழ். மாவட்டத்தில் வசிக்கும் குடும்பங்களான கரும்புலிகள் கப்டன் செந்தமிழ்நம்பி, கப்டன் ஐயனார், லெப். வீரமணி, லெப். செங்கண்ணன், லெப். நல்லதம்பி, லெப். கண்ணன் ஆகிய ஆறு மாவீரர்களின் வீடுகளுக்கு அந்தந்த மாவீரர்களது உருவப் படங்கள் இராணுவ அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு வழங்கப்பட்டன.

பின்னர், இந்த ஆறு மாவீரர்களது உருவப்படங்களும் அவரவர் வீடுகளில் இருந்தும், கரும்புலிக் கப்டன் சீராளனின் உருவப்படம் மன்னார் தொடர்பகத்திலிருந்தும், கரும்புலிகள் கப்டன் மதிநிலவன், கப்டன் கரிகாலன் ஆகிய இருவரின் உருவப்படங்களும் திருமலைத் தொடர்பகத்திலிருந்தும், மேஜர் தொண்டமான், மேஜர் கலையழகன், கப்டன் சிவலோகன், லெப். ஜீவரஞ்சன் ஆகிய நால்வரின் உருவப்படங்களும் மட்டு. -அம்பாறைத் தொடர்பகத்திலிருந்தும், அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் பதின்மூன்று கரும்புலிகளது உருவப்படங்களும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அஞ்சலிக் கூட்டமும் தொடர்ந்து நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் ஊர்திபவனியாகக் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு கப்டன் செந்தமிழ்நம்பி, கப்டன் மதிநிலவன், மேஜர் கலையழகன், கப்டன் ஐயனார், லெப். வீரமணி, லெப். செங்கண்ணன், லெப். ஜீவரஞ்சன், மேஜர் தொண்டமான், கப்டன். சிவலோகநாதன், லெப். நல்லதம்பி ஆகிய 10 கரும்புலிகளினது நினைவுக் கற்களும் இறுதி இராணுவ மரியாதையுடன் நாட்டப்பட்டன.

வடமராட்சி கிழக்கில், கடற்புலிகளின் அரசியல் துறையினரால் இப்பதின்மூன்று கரும்புலிகளின் உருவப்படங்களும் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, எல்லங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் கரும்புலி லெப். கண்ணன் அவர்களுக்கு நினைவுக்கல் நாட்டப்பட்டது.

மேற்படி மாவீரர்களில், கரும்புலி கப்டன் சீராளனின் நினைவுக்கல் மன்னார் மாவீரர் துயிலும் இல்லத்திலும், கரும்புலி கப்டன் கரிகாலனின் நினைவுக்கல் முல்லை மாவட்ட மாவீரர் துயிலும் இல்லத்திலும் நாட்டப்பட்டன. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குளங்கள், வாய்க்கால்கள் புனரமைக்கப்படுகின்றன

கிளிநொச்சி, பூநகரி ஆகிய பிரதேசங்களில் உள்ள பழுதடைந்த குளங்கள், வாய்க்கால்கள் என்பன தேசநிர்மாணிகளால் புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் வெள்ளத்தால் சேதமடைந்த பல்லவராயன்கட்டுக் குளத்தின் ஒரு பகுதிக்கு மண்போடப்பட்டதுடன், குளக்கட்டும் வலுவூட்டப்பட்டுள்ளது. அவ்வாறே பாதிக்கப்பட்ட நாகபடுவான் குளம் மேலும் பாதிக்கப்படாதவாறு மீள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மேலும் பண்டுவெட்டிக் குளக்கட்டின் சேதமான பகுதிகள் புனரமைக்கப்பட்டு, பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட்டதுடன், குளத்தின் அணைக்கட்டில் வாகனம் செல்லக்கூடியவாறும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இரணைமடுவிலிருந்து வயலுக்குப் பாய்ச்சும் மீதி நீரை இடையில் தேக்கிக், குளக்கட்டு ஒன்று கிளிநொச்சியில் நையாறு ஏ.பி. திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டங்களில் பங்குபற்றிய நூற்றிமுப்பத்தைந்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் நேரடி வேலைவாய்ப்புக்களைப் பெற்றதுடன், இதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் மேட்டு நிலத்திற்கு நீர் கிடைக்கக்கூடியதாகவும், கால்நடை வளர்ப்பு நன்நீர் மீன்பிடி என்பன மேற்கொள்ளக்கூடியதாகவும் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ■

# "சீதனக் கொடுமை நீடிப்பின், எதிர்காலச் சந்ததி தூற்றும்"

## ■ சீதன ஒழிப்புக் கருத்தரங்கில் உரை

"சீதனம் பெண்ணை விலை பேசுகின்ற பொருளாக மாறிவிட்டது. சீதனம் பெண்ணுக்குப் பாதுகாப்பற்றது. எமது மண்ணில் சீதனக் கொடுமை நிலைக்க நாம் அனுமதிக்க முடியாது. அனுமதிப்போமேயானால், எம்மை எதிர்காலச் சந்ததி தூற்றும்".

இவ்வாறு புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றலில், மகளிர் அரசியற் துறையைச் சேர்ந்த செல்வி லோகா தலைமையில் நடைபெற்ற சீதன ஒழிப்புப் பிரச்சாரக் கருத்தரங்கில், வடமராட்சிக் கோட்ட மகளிர் பொறுப்பாளர் செல்வி மலையரசி தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "எமது மண்ணில் சீதனக் கொடுமையை நிலைக்க விடாமல், தடுக்கும் நடவடிக்கையில் நாங்கள் கிராம ரீதியாக மக்கள் அபிப்பிராயங்களையும், ஆதரவுகளையும் அறியும் நோக்கில் பிரச்சாரக் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றோம்.

இன்று இந்தச் சீதனக் கொடுமையினால், எத்தனையோ பெண்கள் தற்கொலை செய்துள்ளனர்; எமது சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுகின்றனர். சீதனக் கொடுமையினால் பெண்ணினம் மட்டுமல்ல, ஆண்களும் பாதிக்கப்படுகினறனர். பல பெண்களுடன் பிறந்த ஆண், தனது சகோதரிகளுக்காக தன்னை அர்ப்பணித்து தனது இல்லற வாழ்வை வெறுக்கின்ற நிலை காணப்படுகின்றது. அந்த போராடிக் கொண்டிருக்கின்றது. தேசமும் விடியவேண்டும்; எம் மக்கள் வாழ்வும் விடிய வேண்டும் எனக்கூறும், எமது தலைவர் வழியில் நாம் அணிதிரண்டிருக்கின்றோம். எமது மண்ணில் பாகுபாடுகள், சீதனக் கொடுமைகள் இல்லாமல் செய்ய, மக்களாகிய நீங்களே உதவ முன்வரவேண்டும். பெண் பிள்ளைகளைப் பெற்ற றோர், பட்டினி இருந்து தமது பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டிய நிலை உள்ளது.

எமது தேசம் விடுதலைபெற்று, சுதந்திரமாக வாழுகின்ற ஒரு நிலை உருவாகும்போது, இப்படியான சீதனக் கொடுமைகளினால் ஏற்படும் களங்க நிலை அழியவேண்டும். சீதனத்தினால் எமது சமுதாயம் பாதிக்கப்படுகின்றது. இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. சீதனத்தைத் தடைசெய்ய நாம் முன்வந்துள்

**"சீதனம் இன்றேல் திருமணம் இல்லை என்னும் வேதனை வாழ்வை வேரோடு சாய்ப்போம்."**

ஆணுக்குள்ள ஆசைகள், அபிலாசைகள் நரைத்துப் போகின்றன.

சீதனக் கொடுமையினால் எத்தனையோ இளம் பெண்கள் திருமண வாழ்வு இல்லாமல், வயது போன நிலையில் இன்னமும் முடங்கிக் கிடக்கின்றனர். எமது பெண்ணினம் தமிழீழப் போராட்டத்தில் திறமை கொண்டுள்ளது; பெருமை கொண்டுள்ளது; எமது இனம் அச்சமில்லாமல், சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக பெண்ணினம் ளோம். அதேநேரம் மக்களின் ஆதரவுகளையும், அபிப்பிராயங்களையும் அறிந்துகொள்ளவும் விரும்புகின்றோம். தன்னிச்சையாக இதனை நாம் தடைசெய்ய விரும்பாமல், உங்களின் ஒத்துழைப்பையும் நாடுகின்றோம். இதற்காகவே கருத்தரங்குகளை நடாத்தி, வருகின்றோம்" என்றார்.

மக்கள் மத்தியில் அபிப்பிராயங்களும் கேட்டறியப்பட்டன. சீதனக் கொடுமை பற்றிய வீடியோப் படக்காட்சி, தெருக்கூத்து என்பனவும் இடம்பெற்றன. ■

# லெப்.சீலன், வீரவேங்கை ஆனந்திற்கு மீசாலையில் நடந்த அஞ்சலி நிகழ்வுகள்

லெப்டினன்ட் சீலன், வீரவேங்கை ஆனந் ஆகியோரின் 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம், அண்மையில் இருவரும் வீரச்சாவு அடைந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவில், கொடிகாமம் வட்டப் பொறுப்பாளர் திரு. அமுதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஈகைச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் அவர்கள் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து லெப். சீலன், வீரவேங்கை ஆனந் ஆகியோரின் உருவப்படங்களுக்கு அவர்களது பெற்றோர்கள் மலர் மாலை அணிவித்து, ஈகைச்சுடரை ஏற்றினர். பொது ஈகைச்சுடரை தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தங்கன் அவர்களும், தென்மராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் திரு. வீமன் அவர்களும் உருவப்படங்களுக்கு மாலை அணிவித்து, ஈகைச் சுடரை ஏற்றி வைத்தனர். இதனைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது. இதில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் தேவர், விடுதலைப் புலிகளின் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, மகளிர் அமைப்பு பாரதி இல்லப் பொறுப்பாளர் திருமதி தமிழ்க்கவி ஆகியோரின் உரையைத் தொடர்ந்து, கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. ■

# காணாமல்போன 168 பேர் குறித்து விசாரணைக்கு வற்புறுத்து

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியில், 1990 செப்டெம்பர் 9 இல் காணாமற்போன சுமார் 168 பேர் தொடர்பான பெயர், விபரங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு, சர்வதேச மன்னிப்புச் சபையை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமில்டன் வணசிங்கா கோரியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக இவ்வருட ஆரம்பத்தில், சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கை ஒன்று குறித்தே, கமில்டன் இக்கோரிக்கையை விடுத்துள்ளார். காணாமற்போன 68 சிறுவர்களினதும் மற்றும் 100 பேரினதும் பெயர், விபரங்களை தமக்கு அனுப்பி வைத்தால், இச்சம்பவம் தொடர்பாக விசாரணைக்குழு ஒன்றை அமைக்கமுடியும் என, கமில்டன் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து, சர்வதேச மன்னிப்புச் சபை காணமாற் போன இந்த 168 பேரினதும் பெயர், விபரங்களை அவருக்கு அனுப்பிவைத்துள்ளது. விசாரணைகள் சர்வதேச தரத்திற்கு நடத்தப்படுவதை உறுதி செய்யும் படியும், விசாரணை முடிவுகளை வெளியிடும்படியும் மன்னிப்புச் சபை அவரைக் கேட்டுள்ளது. எனினும், இது தொடர்பாக மேலதிக நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாக இதுவரை தகவல் ஏதும் கிடைக்கப்பெறவில்லை என, சர்வதேச மன்னிப்புச் சபை கவலை தெரிவித்துள்ளது. ■

# வளத்தைப் பயன்படுத்துவதில் அனுபவங்களினூடு வளர்ச்சி

"எந்த ஒரு நாடும் உரிமைக்காகப் போராடும் காலத்தில், அந்தத் தேச மக்கள் பொருளாதாரத்தில் அபிவிருத்தியடையா விட்டால், போராடிப் பெற்ற சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது".

இவ்வாறு அண்மையில், வட்டக்கச்சி விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற, கால்நடை முதலுதவிப் பயிற்சி வகுப்பின் ஆரம்ப விழாவில் உரையாற்றிய, கிளிநொச்சி விவசாயபீட பயிரியல்துறைத் தலைவர் குறிப்பிட்டார்.

வன்னி மாவட்ட விலங்கு வேளாண்மைப் பகுதியினரால், ஆரம்பித்துவைக்கப்பட்ட இப்பயிற்சி வகுப்பில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் பேசுகையில், "தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பித்தவேளையில், ஏனைய நாட்டவர்களும், எம்நாட்டவர்கள் சிலரும் தமிழீழம் கிடைக்குமானால், இங்கு என்ன வளம் உள்ளது என்றும், பனை வளத்தைத் தவிர வேறு ஏதும் இல்லையென்றும் வினா எழுப்பியவேளையில், நாம் அன்று பதில் கூறமுடியாது இருந்தோம். ஆனால், இன்று என்ன வளம் உள்ளது, எப்படி தற்போது பயன்படுத்தப்படுகின்றது, மேலும் எதிர்காலத்தில் எப்படிப் பயன்படுத்துவது என்று பதில் கூறக்கூடிய நிலையில், நடைமுறை அனுபவங்களினூடாக வளர்ச்சிபெற்றுள்ளோம் என்றார்.

இவ்விழாவில் வன்னி மாவட்ட இணைப்பாளர், மாவட்ட காணியதிகாரி, கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க செயலாளர், தேசிய தொழிற்பயிற்சி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். ■

# வவுனியா எல்லைக் கிராமங்களில் இராணுவ அச்சுறுத்தல் அதிகரிப்பு

வவுனியா மாவட்டத்தின் எல்லைப் புறக் கிராமங்களில் சிறீலங்கா இராணுவத்தினரின் அச்சுறுத்தல் அதிகரித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா மன்னார் வீதியிலும், யாழ். வீதியிலும், சேமமடுப் பகுதியிலும் அண்மையில் சிறீலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், அப்பகுதி தமிழ்க் கிராமவாசிகள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா நகரப்பகுதியை உள்ளடங்கியதாகவும், மற்றும் செட்டிக்குளம் பிரதேசத்தை உள்ளடங்கியதாகவும் சிறியதாகவும், பெரியதாகவும் இராணுவக் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சிறீலங்கா இராணுவத்தினர், திடீர் என்று இரவு வேளைகளில் தமிழ்க் கிராமங்களில் புகுந்து தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளன.

அண்மையில் சேமமடுப் பகுதிக் காட்டுக்குள் பதுங்கியிருந்த இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது, பொதுமக்களில் மூவர் பலியானதும், ஒருவர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே.

இதற்கு முதல், பம்பைமடுவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், இரவோடு இரவாக கல்மடு பகுதி கிராமத்துக்குள் நுழைந்து, தமிழ் இளைஞர்கள் சிலரைத் தாக்கிவிட்டுத் திரும்பிச் சென்றுள்ளனர்.

இதன் காரணமாக, அப்பகுதிப் பொதுமக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா நகரத்தை உள்ளடக்கிய கிராமப் புறப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தினரின் அச்சுறுத்தல் காரணமாக, சில தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடம் தேடிச் சென்றிருப்பதாகவும் அறியப்படுகின்றது. ■

# புதிய முறையில் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தில், பொதுமக்களைக் கைதுசெய்வதற்காக, படையினர் புதிய யுக்திகளைக் கையாளுகின்றனர்.

மக்கள் கூடும் இடங்களில் வெடிபொருட்களைத் தாமே வைத்துவிட்டு, அதனைப் பயன்படுத்தித் தமிழ் மக்களைக் கைது செய்கின்றனர் என, அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# சிறுவர் பாடசாலையும் படிப்பகமும் திறப்பு

இராணுவ நடவடிக்கைகளினால் தமது சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்த, மாணவர்களின் கல்வி வசதிகளை மேம்படுத்தும் முகமாகவும், ஊக்குவிக்கும்பொருட்டும் இலவச சிறுவர் பாடசாலையும், படிப்பகமும் அண்மையில் வட்டுக்கோட்டையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அரும்பெரும் பணியினை காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையினர், வட்டுக்கோட்டையில் இயங்கிவரும் யாழ்ற்றன் கல்லூரியில் ஆரம்பித்து வைத்துள்ளனர். இங்கு 'முன்பள்ளிக் கலைத்திட்டத்திற்கு' அமைவாகப் பாலர்களுக்கு கல்வி கற்பிக்கப்படுகின்றது. அத்தோடு இலவசமான முறையில், கல்வியை ஊக்குவிக்கும் வகையில், இங்குள்ள படிப்பகத்தில் கல்வி நூல் வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இந்நற்பணியினால், பல வறிய குடும்பங்களைச் சேர்ந்த பாலர்களும், வயதுவந்த மாணவர்களும் மிக்க பயனடைந்து வருகின்றனர். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# " தேசத்தின் நிகழ்வுகளைக் காட்டும் படைப்புக்கள் வெளிவர உதவவேண்டும் "

## - குறும்பட விழாவில் கரிகாலன் உரை

"எமது தேசத்தில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் ஊடாக, தேசத்தின் ஒவ்வொரு மூலையிலும் நடைபெறும் நிகழ்வுகளை அனைவரும் அறியக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது". இவ்வாறு, 'ஒளிவீச்சு' ஓராண்டு நிறைவையொட்டி நடைபெற்ற குறும்பட விழாவிற்கு தலைமை வகித்துப் பேசும்போது, தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள் குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் அண்மையில் இடம்பெற்ற இவ்விழாவில், அவர் தொடர்ந்து பேசும் போது, "இங்கு தயாரிக்கப்பட்டுள்ள குறும்படங்கள் யாவும் போராட்டத்தைச் சித்தரிப்பனவாக உள்ளன; மக்களின் துன்பம், மக்கள் போராட்டத்திற்கு வழங்கும் ஆதரவு போன்றவை வெளிப்படுத்தப்படுகின்றன".

இவ்வாறான கலைப்படைப்புக்கள், எதிர்கால சந்ததி பார்த்து, அறிவதற்கு உதவும். இந்த விதமான ஏராளமான படைப்புக்கள் வெளிவருவதற்கு மக்கள் உதவ வேண்டும்" என்றார்.

கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் அங்கு சிறப்புரையாற்றும்போது, "எங்களால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை என்ற நம்பி!க்கை விடுதலைப் புலிகளுக்கு உண்டு; நாம் பலமுள்ளவர்களாக, ஆற்றல் உள்ளவர்களாக, வளர்ந்து வருகின்றோம்; எமது போராளிகளின் வளர்ச்சி அபரிமிதமானது; இந்தவகையான கலை வடிவங்கள் யாவும் கூட்டு முயற்சியால் உருவாக்கப்படுபவை; எல்லாத் துறைசார்ந்தவர்களின் உச்சங்களைச் சேர்த்துக் கொண்டால், தயாரிப்பு சிறந்ததாக இருக்கும். இங்கு நிறையக் கதைப்பவர்களால் செய்ய முடிவதில்லை; கொஞ்சப் பேர்தான் செய்கின்றார்கள். இதனை ஒரு குறையாக நான் சொல்லவில்லை. இந்த அனைத்துப் படங்களிலும் போராட்டத்தின் எச்சங்களாக மிஞ்சியிருக்கப் போவது, இந்த மண்ணிற்கு வழங்கப்பட்ட வீரமும் தற்கொடையும்தான். எத்தனை காலத்திற்குக் கலைப் படைப்பு உருவாக்கங்களை போராளிகளின் கைகளில் விடப்போகின்றீர்கள்? பாட்டுப் பதிவதையும், பத்திரிகை நடத்துவதையும், படம் எடுப்பதையும் எத்தனை நாட்களுக்கு எம்மிடம் விட்டுவைக்கப் போகின்றீர்கள்? நீங்கள் கொஞ்சம் பளுவைச் சுமக்கத் தயாராக மாட்டீர்களா? நிதர்சனம், கலை -பண்பாட்டுக் கழகம் சார்பில் கேட்கின்றேன். இந்தப் பொறுப்பின் சுமையை நீங்கள் குறைக்கக் கூடாதா? பாரத்தை நீங்கள் கொஞ்சம் அள்ளிக்கொள்ளக் கூடாதா? அடுத்த நேரச் சாப்பாட்டிற்கு வழியில்லாத நிலையில், "எத்தனை கோடி இன்பம் வைத்தாய்?" என்று பாடினானே பாரதி; அவன்தான் கலைஞன். இந்த மண்ணில் பிறந்ததற்காகவே நாமெல்லாம் பெருமைப்படலாம். இங்குள்ள கொடுமைகளைப் பார்த்தும், குந்திக்கொண்டு எமது கலைஞர்கள் இருக்கக்கூடாது. எல்லாமாகி நாம் எல்லோரும் நின்றால், எமது போராட்டத்திற்கு அதிக வயது ஏற்படுவதற்கு முன்னமே, நாம் விடுதலையைப் பெற்றுவிடலாம்" என்றார்.

நிதர்சனம் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் அங்கு உரை நிகழ்த்தும்போது, "இங்கு தயாரிக்கப்படும் குறும்படங்கள் தமிழீழத்தில் மட்டுமல்ல, கடல்கடந்த பல நாடுகளிலும் காண்பிக்கப்படுகின்றன. எமது போராட்டத்திற்கு எதிரானவர்களால், உலகரீதியில் எமது போராட்டம் பற்றிப் பிழையான விதத்தில் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. நாம் இங்குள்ள நிகழ்வுகளை வெளிப்படுத்துதன் மூலமே, அவர்களின் நோக்கை இல்லாதொழிக்க முடியும். எமது தலைவர், இந்த ஒளிவீச்சுத் தயாரிப்பிலும் குறும்பட வெளியீட்டிலும் அவாவுற்றிருக்கின்றார். அவர் தமது பெறுமதிமிக்க நேரத்தைச் செலவழித்து, இவற்றைப் பார்வையிடுகின்றார். வெளிநாட்டவர்கள் எமது போராட்டத்தை ஒளிவீச்சில் கண்டு வியப்படைகின்றனர். இதன் மூலம், எமது விடுதலைப் போராட்டத்தின் நிகழ்வுகள், ஆவணப்படுத்தப்படுகின்றன. இதற்கு குறும்படங்கள் சாதனமாகிவிடுகின்றன. முன்னதாக விழா மேடையில் மகளிர் அமைப்பைச் சேர்ந்த சுபங்களாவும், வன்னித் தொடர்பகப் பொறுப்பாளர் திரு. நீதனும் மங்கள விளக்கை ஏற்றிவைத்தனர்.

ஒளிவீச்சுக் குறும்படத் தொகுப்பை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்கள் வெளியிட்டுவைக்க, மகளிர் அரசியல் பொறுப்பாளர் செல்வி ரதி அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டார்.

இறுதியில், யேசுராசாவின் மதிப்புரையை அடுத்து, குறும்படங்கள் பார்வையாளர்களுக்கு காண்பிக்கப்பட்டன. ■

# செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தில் எறிகணை வீச்சு

பலாலி மற்றும் காரைநகர் முகாம்களில் இருந்து தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தை நோக்கி, சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைவீச்சுக்கு, ஆலய அர்ச்சகர் உட்பட, 10 இற்கு மேற்பட்ட பக்தர்கள் காயமடைந்துள்ளனர் என அங்கிருந்து கிடைக்கப் பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. ஆலயத்தின் அண்மையில் அமைந்திருந்த, பக்தர்கள் தங்கும் மடங்கள் சேதமாகியுள்ளன.

செல்வச்சந்நிதி ஆலய உற்சவம் ஆரம்பமாகி, ஏராளமான பக்தர்கள் வழிபாட்டிற்குத் திரளும் இக்காலத்திலேயே வெறித்தனமான இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை, அச்சுவேலிப் பகுதிகளில் எறிகணை வீச்சுக்கள் அதிகரித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அச்சுவேலியில் எறிகணை வீச்சினால், மூவர் பலியாகி உள்ளதாக, வவுனியாவுக்கு வந்த பிரயாணிகள் தெரிவிக்கின்றனர். ■

# புலிகளைத் தேடிப்பிடிக்க 'நெய்பவூட் அக்ஸ்சன் குரூப்'

கொழும்புக்குள் ஊடுருவும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கென 'நெய்பவூட் அக்ஸ்சன் குரூப்' என்ற விசேட பொலிஸ் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது என சிறீலங்காப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த விசேட பொலிஸ் குழுவினர் கொழும்பில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், வடபகுதியிலிருந்து கொழும்புவரும் விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் வீடு, வீடாகச் சோதனைகளையும் இக்குழுவினர் நடத்துவர் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ■

# வவுனியாக் கோட்டத்தில் 'விளக்கு' அறிமுகவிழா

தமிழீழக் கல்விக் கழகத்தால் வெளியிடப்படும், 'விளக்கு' சஞ்சிகையின் அறிமுகவிழா அண்மையில், புளியங்குளம் இந்துக் கல்லூரியில் தமிழீழக் கல்விக் கழகத்தினரால் நடாத்தப்பட்டது.

இதில், தமிழீழத் தேசியக் கொடியினை வவுனியாக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கோகிலன் அவர்கள் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து, மங்கள விளக்கினை நெடுங்கேணிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. மர்மலானந்தகுமார் அவர்களும் வவுனியாக் காவல் பணிமனைப் பொறுப்பாளர் திரு. புலேந்திரன் அவர்களும் ஏற்றிவைத்தார்கள்.

இவ்வைபவத்தில், தலைமையுரையை வவுனியாக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. ப. பாலா ஆசிரியர் ஆற்றினார். பின்னர், வரவேற்புரையை வவுனியாக் கல்விக் கழக உதவிப் பொறுப்பாளர் திரு. க. நாகேந்திரன் நிகழ்த்தினார். இதன்பின், விளக்கு சஞ்சிகை உதவி ஆசிரியரின் விமர்சன உரையுடன், மேலும் பல அதிபர், ஆசிரியர்களின் உரைகள் இடம்பெற்றன.

இறுதியாக, நெடுங்கேணிக் கோட்ட தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. குகேந்திரனின் நன்றியுரையுடன், நிகழ்வு முடிவுற்றது. இதில் நூற்றுக்கு மேற்பட்ட அதிபர், ஆசிரியர்கள் கலந்துகொண்டு, சிறப்பித்தனர். ■

# வடக்கில் விரைவில் தாக்குதல்

## ■ லக்கி அல்கமவுக்கு புதிய பொறுப்பு

## ■ ஜெரி டி சில்வாவை ஓரங்கட்டும் நடவடிக்கை

வடபகுதி மீது நடாத்தப்படவுள்ள பாரிய தாக்குதலுக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவுக்கு புதிய பதவி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. 'பிரதான படையதிகாரி' என்ற இப்பதவி மூலம் இவர் ஜனாதிபதி டி. பி விஜேதுங்கவின் கட்டளைகளை வழி நடாத்தும் பொறுப்பை நேரடியாக வகிக்கும் விசேட அதிகாரத்தைப் பெறுகின்றார். இப்புதிய பதவி வழங்கப்பட்டதை அடுத்து, வடபகுதித் தாக்குதலுக்குத் துரித ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கில், விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ள, அரசினால் திட்டமிடப்பட்டுள்ள தாக்குதல் நடவடிக்கையை செயற்படுத்துவதற்கு ஏதுவாக, மேஜர் ஜெனரல் அல்கமவுக்கு படைகளின் பிரதான அதிகாரி என்ற புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது.

மிகவும் பலம்வாய்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், இப்பதவியை இவருக்கு வழங்கும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவைக் கேட்டுள்ளனர். பிரதான படையதிகாரி வடபகுதி இராணுவ செயற்பாடுகளுக்கு நேரடியாக ஜனாதிபதியின் கட்டளைகளை வழிநடாத்தும் பொறுப்புடையவராக இருப்பார்.

அரசு, யாழ். மாவட்டத்தில் எப்போது யுத்தத்தை ஆரம்பிக்கப் போகின்றது என்பதில் தெளிவு இல்லை எனினும், பாராளுமன்ற பொதுத்தேர்தலின் பின்னரே, பாரிய யுத்தத்தை ஆரம்பிக்க இருப்பதாக நம்பப்படுகின்றது.

ஆயினும், ஒரு பெரும் தாக்குதலுக்கான அடிப்படைத் தயாரிப்புக்கள் மிகவேகமாக இடம்பெற்று வருவதாக இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே மேஜர் ஜெனரல் லக்கி அல்கம மீது, ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு எதிரான இராணுவ சதித்திட்டம் சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நடவடிக்கை மூலம், இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா பூரணமாகவே ஓரங்கட்டப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ■

# படையினரின் பாலியல் வன்முறை

மட்டக்களப்பு பாவற்கொடிச் சேனையைச் சேர்ந்த தமிழ்ப் பெண் ஒருவரை சிறீலங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசவிரோதிகளும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி உள்ளார்கள்.

அண்மையில், பாவற்கொடிச் சேனையைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர், அருணசிறி சுபாஜினி என்ற பெண்ணைக் கைதுசெய்து, இராணுவ முகாமுக்கு கொண்டுசெல்லும்போது, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மட்டக்களப்பு பெரிய போரதீவில், சிறீலங்கா விசேட அதிரடிப் படையினர் இருவேறு சம்பவங்களில், மூன்று தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட மூவரில், 19 வயதுடைய வசந்தி என்ற பெண் நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டுள்ளார். மற்றைய இருவரும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருப்பழுகாமம் முகாமைச் சேர்ந்த அதிரடிப்படையினர், திருப்பழுகாமம் வாய்க்காலடி என்னுமிடத்தில், இரு பெண்களை பாலியல்வதைக்கு உள்ளாக்கினர் எனவும், பெரியபோரதீவில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட வசந்தி, பெரியபோரதீவு முகாம் பொறுப்பாளராலேயே பாலியல் வெறிக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. பின் விடுதலை செய்யப்பட்ட வசந்தி, தன் வீட்டில் நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார் எனவும் தெரியவருகின்றது. ■

# யாழ்.பல்கலைக்கழகத்தை மூட பிரபா இடமளிப்பதில்லை

## - அனுரா

"உள்நாட்டு யுத்த நிலைமையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு நாளாவது மூடுப்படுவதில்லை; மூடுவதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இடமளிப்பதுமில்லை; ஆனால், நீண்ட வரலாற்றைக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகம் வருடக்கணக்கில் மூடப்படுகின்றதே". இவ்வாறு, உயர்கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா கவலை தெரிவித்துள்ளார். பாத்த தும்பரவில் பல்தொழில்நுட்ப விஞ்ஞானக் கூடம் ஒன்றை அண்மையில் திறந்து வைத்து உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், "யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் தொடர்ந்து நடைபெறுவதற்குக் காரணம், நாட்டின் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் கல்விமான்கள், அறிஞர்கள் தேவை எனச்சிந்திப்பதே என்றார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவநம்பிக்கையின் அடிப்படையில் பிறந்த அமைதி உடன்பாடு

"உடன்பாடுகளுக்கு எல்லாம் தாய் உடன்பாடு -அமெரிக்கா, ருஸ்சியா என்ற இரு முதன்மை நாடுகளாலும் உத்தரவாதமளிக் கப்பட்ட ஒரே உடன்பாடு இசு ரேலிய -பாலத்தீனிய உடன்பாடு" என, அது சென்ற வருடம் செப் டம்பர் மாதம் 13-ம் திகதி கைச் சாத்திடப்பட்டபோது போற்றப்பட் டது. அன்று அரபாத்துடன் கைகுலுக்க அழைக்கப்பட்ட போது முன்வராமல் தயங்கிய யிட்சாக் றபின், இன்றளவும் தனது தயக்கநிலையை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை.

***காசாப் பகுதியைச் சேர்ந்த 11 வயதுச் சிறுவன் கூறிய கதை யானது -"நாங்கள் முன்பு அரபு -யூதன் என்றொரு விளையாட்டு விளையாடுவோம். அதில் பிளாஸ்ரிக் துப்பாக்கி தாங்கிய யூதன் அரபுகளைத் தேடியோடிப் பிடித்து அடிப்பான். இப்போது விளையாட்டு மாறப்போகின்றது. அரபாத் எமக்கு நல்லது செய்ய வேண்டும். அல்லாவிட்டால், அரபு -அரபு என்கின்ற புதிய விளையாட்டை அவரோடு விளையாட நேரிடும். அப்போது எமது கையிலிருக்கும் துப்பாக்கிகள் பிளாஸ்ரிக்காக இராது".*** ■

மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி வழங்கப்பட்ட காசா -யெரிக்கோ பகுதிகளிலிருந்து, சென்ற ஏப்ரல் 13-ம் திகதியே வெளியேறி இருக் கவேண்டிய இசுரேலிய இரா ணுவத்தின் நகர்வைக் குறிக்கும் முதலாம் கட்டமே இழுபறியாகி, மீண்டும் அது பற்றியே பேச நேரிட்டது. இப்பேச்சுக்களின் பின்னர், கடந்த மே மாதம் 5-ம் திகதி கெய்ரோவில் முதலாம் கட்டம் தொடர்பான உடன்பாடு கைச்சாத்தாகியது.



றபின்

**றபினின் மிரட்டல்**
**அரபாத்தின் விட்டுக்கொடுப்பு**

இவ்வுடன்பாடு கைச்சாத்தான போது நடந்தேறிய நிகழ்வுகள், பெரும் குழப்பத்தையே எவர் மனதிலும் விளைவித்தன. கெய் ரோவின் சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2500 பார்வையா ளர்கள் பார்த்திருக்க -அமெரிக்க வெளிவிவ காரச் செயலர் வாரன் கிறிஸ்தோபர், எகிப்திய சனாதி பதி முபாரக், ருஸ்சிய வெளிநாட் டமைச்சர் அன்றே கொசிரேவ் போன்ற பெரும் தலைவர்கள் முன்னிலையில், கடும் கோபத் துடன் பிரதமர் றபின் வாக்கு வாதப்பட, அரபாத்தோ கல் லைப்போல் இறுகிய முகத்துடன் நிற்க பெரும் குழப்பமே மேடை யில் நிகழ்ந்தது. பின் எல்லோ ருமே திரைக்குப் பின்னால் சென்று 40 நிமிடங்களின் பின் வந்தபோது, அரபாத் எதுவும் பேசாமல் உடன்பாட்டில் கைச் சாத்திட்டார். முதலில், யெரிக்கோ பகுதியின் எல்லை கள் தொடர்பான வரைபடங்க ளில் அரபாத் கைச்சாத்திட மறுத்தபோது, றபின் வெளியேறப் போவதாக அச்சுறுத்தினார், மேடையிலே இத்தலைவர்கள் வாக்குவாதப்பட்ட நிழற்படங்க

ளைப் பார்த்தோர், எதிர்காலம் எத்தகைய சிக்கல்களைத் தோற் றுவிக்கப் போகின்றது என்பதை உணரக்கூடியதாயிருந்தது. எனவே மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சியை, ஏனைய ஆக்கி ரமிக்கப்பட்ட பாலஸ்தீனிய பகு திகளிற்கெல்லாம் விரிவாக்குவது எவ்வாறு சுமுகமாக நடக்கப் போகின்றது என்பது விளங்காப் பொருளாகிவிட்டது. இச் சந் தேகங்களுக்கு ஏற்றால் போலவே இசுரேலியப் பிரதமர் பேசிவருகின்றார். அண்மையில் அரபாத், யெருசலேமே தமது தலைநகரம்; அதை மீட்க புனி தப் போர் ( ஜிகாத் ) நடத்த வேண்டும் என்றும்; உடன்பாடு ஒரு தந்திரோபாய இடைக்கால ஏற்பாடு எனப் பேசியதாகக் கூறப்படுவதைக் காரணமாக, வைத்து அரபாத்தை கடுமையாக விமர்சிப்பதோடு, உடன்பாட்டி லிருந்து தான் வெளியேறிவிடு வேன் என்றும் றபின் மிரட்டி வருகிறார். பாலத்தீனமக்களின் எதிர்பார்க்கைகள் எதுவாக இருந்தாலும் அதுபற்றித் தனக்கு என்ன கவலை என்றும், தான் பாலத்தீன மக்களுக்கு எவ்வ கையிலும் கடமைப்பட்டவன் அல்ல என்றும் அரபாத் தனது தலைமையைத் தக்க வைப்பதில் மட்டுமே கைதேர்ந்தவர் வேறு எதிலுமல்ல என்றும், பாலத்தீ னிய மக்களுக்கு இவ்வுடன் பாட்டை விட்டால் வேறு என்ன வழி? வேறு என்ன தேர்வு? என் றும் மிதப்பாகப் பேசுகிறார். அது மட்டு மன்றி காசா, யெரிக்கோ பகுதிகளை அரபாத் எவ்வாறு நிருவகிக்கப் போகிறார் என்ப தைப் பொறுத்தே, தனது அடுத்த நடவடிக்கை அமையும் என்பவர் தனது உள்நோக் கத்தை மிகத் தெளிவாகவே விளக்குகின்றார்.


**அரபாத் எதிர்நோக்கும்**
**இமாலயச் சிக்கல்கள்**

"1967 ஆம் ஆண்டு ஆறு நாள் போருக்கு முன்னதான நிலையை நான் ஏற்கப் போவதில்லை. ஆனால் பாலத்தீனியர் தனியா கப் பிரிந்து இருப்பதையே நான் விரும்புகின்றேன். ஒரு அள வுக்கு மேல் கலந்து வாழ்தல் ஆபத்தானது. நீண்டகாலத்திற் குப் பிரிந்து அருகருகாக இசு ரேலியப் பாதுகாப்பிற்கு குந்தக மில்லாமல் வாழ்வதையே விரும் புகின்றேன்" என்றார். ஆழ்ந்து நோக்கின் இக்கூற்றின் உண்மை விளங்குகின்றது. ஆனால் இதே சமயத்தில் அரபாத்தின் நிலையோ மிகுந்த இக்கட்டில் இருக்கின்றது. பேச்சுவார்த்தை களைத் தகுந்தமுறையில் பயன் படுத்தி தனது மக்களுக்கான

நீண்டகாலப் பாதுகாப்புக்களைப் பெறுவதைவிடுத்து; கொடியைப் பறக்கவிடுவது பற்றியும், முத் திரை, கடவுச் சீட்டு சொந்த மாக அச்சடிப்பது பற்றிய மேலோட்டமான விடயங்களில் அவர் தனது முழுக் கவனத் தையும் செலுத்தி, அதுவும் மிகச் சிரமப்பட்டே இத்தகையவற்றை இசுரேல் தரப்பில் பெறமுடிந்த தாகக் கூறப்படுகிறது. அரபாத் தின் தரப்பினரோ, அவர் எதையும் முற்கூட்டியே திட்டமி டாமல் கடைசி நேரத்தில் தனது விருப்பப்படி முடிவுகள் எடுப்ப தாகக் குறைப்படுகின்றனர். இவை எல்லாவற்றையும்விட இன்னமும் தீர்க்கப்படாத பாலத் தீனிய தன்னாட்சிப் பகுதியின்

**பாலகுமாரன்**

இறுதி எல்லைகள், ஆக்கிரமிக் கப்பட்ட பகுதிகளிலுள்ள யூதக் குடியேற்றங்களின் எதிர்காலம், 1948இற்குப் பின் அகதிகளாக வெளிநாடுகளுக்குச் சென்ற பாலத்தீனியர்களும் அவர்களது சந்ததியினரும் நாடு திரும்புதல் ( இவர்கள் தொகை 20 இலட் சத்துக்கு மேல்) பற்றிய பேச்சுக் கள் 1996 அளவில் ஆரம்பிக்கப் படவேண்டும். ஆனால் அதற்கு முன் அரபாத் எதிர்நோக்கும் சிக் கல்களோ கணக்கற்றவை. ஏன் என்றால் 27 வருட அவல வாழ் விலிருந்து விடுபடத் துடிக்கும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவேண்டிய வலுவை அரபாத் எங்கிருந்து பெறப்போ கிறார் என்பதே எழுந்துள்ள கேள்வியாகும்.




இசுரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள்

பகுதியில் இப்போதே இச் சிக் கல் உருவாகி விட்டது. இரா ணுவத்தினரைக் கொன்று பாலத் தீனிய தன்னாட்சிப் பகுதிகளில் மறையும் போராளிகளை, பாலத் தீனிய காவல்துறை என்ன செய் யப் போகின்றது? இசுரேல் கோரியதுபடி அவர்களை கைது செய்து கையளிக்குமா? ஏனென் றால் 7 வருடங்களாகப் போரா டிவரும் காமஸ் இயக்கப் போராளிகள், தம்மைத் தடுத் தால் பாலத்தீனியக் காவல்துறை யினரையும் கொல்லுவோம்

கலந்து வாழும் யூதர்கள் வெளி யேற்றப்படாவிட்டால் மிகுந்த ரத் தக் களரி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். ஆனால் கெப்ரோன் பகுதி யூதமத தீவி ரவாதிகளோ இந்த மண் றபினுக் குரியது அல்ல, இசுரேலின் கடவுளுக்குரியது. தாம் அக்கட வுளின் புனிதம் மிக்க படையினர் எனக் கூறிவருகின்றனர். அத்



அரபாத்

## இசுரேலிய - பாலத்தீனிய உடன்பாடு...
## பாலத்தீனிய தன்னாட்சியின் தொடக்கமா அல்லது அரபாத்தின் வீழ்ச்சியின் முடிவா அல்லது இசுரேலின் அடக்குமுறையின் முடிவா அல்லது பாலத்தீனிய போராட்டத்தின் புதியதொரு பரிமாணத்தின் தொடக்கமா?

**உடன்பாட்டை எதிர்க்கும்**
**'காமஸ்' இயக்கப் போராளிகள்**

இப்போது உடனடியாக எழுந் துள்ள சிக்கல், பாலத்தீனிய நிருவாகத்தினை எவ்வாறு மேற் கொள்வது என்பதும் உடன்பாட் டினை எதிர்க்கும் காமஸ் போன்ற போராளி அமைப்புக் களை எவ்வாறு கட்டுப்படுத்து வது என்பதும் தான். முக்கிய மாக யூதக் குடியேற்றங்கள் காசாவிலும் -யெரிக்கோ பகுதிக ளிலும் இசுரேலிய இராணுவத் தால் பாதுகாக்கப் படப்போகும் நிலையில் -இவற்றின் மேல் எத் தகைய அதிகாரமும் இல்லாத நிலையில் பாலத்தீனியர்களைக் கொல்லும் யூதரைக் கைது செய் யும் உரிமை பாலத்தீனியக் காவல்துறையினருக்கு இல்லாத நிலையில் யூதக் குடியேற்றவா சிகளை -அவர்களைப் பாதுகாக் கும் இராணுவத்தினரை காமஸ் இயக்கம் தொடர்ந்து தாக்கி வரும்போது பெரும் சிக்கல் எழப் போகின்றது. குறிப்பாக காசாப்

எனத் திடமாக அறிவித்துவிட் டனர். காசாப் பகுதியில் 1987ம் ஆண்டு 'இன்ரிபாதா' எனப்படும் மக்கள், கிளர்ச்சியோடு கற் களை, கையில் அகப்பட்ட வற்றை இசுரேலிய இராணுவத் தின் மீது எறிந்து, வளர்ந்து ஆயுதம் தாங்கிய போராளிக ளாக, தற்கொலைத் தாக்குதல் களை மேற்கொள்ளும் போராளி களாக மாறிய பாலத்தீனியப் போராட்டத்தின் புதிய தலைமு றையை அடக்குவது இன்று எளிதான விடயமல்ல. குறிப்பாக காசாவில் குடியேற்றப்பட்ட 4000 யூதருக்கும் இப்போது பாதுகாப்பு அளித்துவரும் இராணுவத்தின் மீது, இப்போது தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அத்தோடு ஏனைய ஆக்கிரமிக்கப்பட்ட பகு திகட்கும் விரைவில் மட்டுப்படுத் தப்பட்ட தன்னாட்சி முறை விரிவாக்கம் செய்யப்பட்டு பாலத் தீனிய காவல் துறையினர் கட மையில் ஈடுபடுத்தப்படும்போது கெப்ரோன் போன்ற பகுதிகளில்

தோடு 9000 தொகை கொண்ட பாலஸ்தீனியக் காவல் துறையினர் இப்பகுதிகள் எங்கும் படிப்படி யாக நியமிக்கப்படும் போது, நீண்டகாலமாக வெளிநாட்டில் வாழ்ந்ததினால் காசா மேற்குக் கரை பற்றிய தள நிலைமைகள் புரியாத நிலையில் மேலும் சிக் கல்களைக் காவல் துறை ஏற்ப டுத்தலாம் என்று கருதப்படுகி றது.

**மட்டுப்படுத்தப்பட்ட**
**தன்னாட்சி அதிகாரம்**

இவற்றை விட பாலத்தீனிய மட் டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி நிருவாகம், கல்வி, பண்பாடு, சுகாதாரம், சமூகநலன், நேரடி வரிகள், உல்லாசப் பயணத் துறை போன்றவற்றில் மட்டுமே அதிகாரம் கொண்டவை. விவ சாயம், துறைமுகம், நீர்மின் வலு, போக்குவரத்து, தொலைத்

**"போராட்ட இலக்கில் மிக உறுதியாக இருத்தல் என்பதை மிகத் தெளிவாக உணர்ந்துள்ள எம்மக்கள், அரபாத் எங்கே தவறு விட்டார் என்பதை இலகுவில் புரிந்து கொள்வார்கள்".**

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ உட்கட்டுமானம்

எமது தேசிய விடுதலைப் போராட்டம் அளப்பெரும் தியாகங்களின் மத்தியில் முன்னெடுத்துச் செல்லப்படும் அதேவேளை, ஒரு தனியரசிற்கான பண்புகளுடன், மலர்ந்துவரும் தமிழீழத்தின் சமூக, பொருண்மிய, அரசியல் தேவைகளுக்கேற்ப, அதன் எதிர்கால உட்கட்டுமான அமைப்பை வடிவமைத்தல் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. இதற்கென யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், 8 குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவற்றினால் வழங்கப்படும் ஆலோசனைகள் தீர்மானங்களுக்கேற்ப, செயற்திறன் உடைய பெருந்திட்டம் ஒன்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பெருந்திட்டத்தை உருவாக்குவதற்கு முன்னோடியாக, வடிவமைக்கப்பட்ட தமிழீழ உட்கட்டுமான அமைப்பின், முக்கியமான அம்சங்களே இங்கு வெளியிடப்பட்டுள்ளன.

சென்ற இதழ் தொடர்ச்சி

## தமிழீழத்தின் மின்சாரம்

### பிரதான மின்பிறப்பாக்கிகள்

**1. காங்கேசன் வாயு மின் உற்பத்தி நிலையம்.**

தற்போது 16 மெகா உவாட் (8 M. W. X 2) சக்தி பெறக்கூடிய மின்பிறப்பாக்கிகள் உள்ளன. மேலும் இவ்விரு பிறப்பாக்கிகளிலிருந்தும் வெளியேறும் வாயுவை உபயோகித்து, மேலதிகமாக 16 மெகா உவாட் பெறுவதற்குத் தேவையான கொதிகலன், மின்பிறப்பாக்கி என்பவற்றில் சில பொருட்கள் தற்போதைய சூழ்நிலையின் காரணமாக கொழும்புத் துறைமுகத்தில் உள்ளன.

**2. சுன்னாகம் டீசல் மின் உற்பத்தி நிலையம்.**

4 X 50 மெகா உவாட் டீசல் பிறப்பாக்கிகள். மொத்தவலு 200 மெகா உவாட்.

**3. மன்னார் டீசல் மின் உற்பத்தி நிலையம்.**


3 X 50 மெகா உவாட் டீசல் பிறப்பாக்கிகள். மொத்தவலு 150 மெகா உவாட்.

**4. திருகோணமலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம்.**

2 X 150 மெகா உவாட் நிலக்கரி மின்பிறப்பாக்கிகள். மொத்தவலு 300 மெகா உவாட்.

**5. அறுகம்பை டீசல் மின் உற்பத்தி நிலையம்.**

3 X 50 மெகா உவாட் டீசல் மின்பிறப்பாக்கிகள். மொத்தவலு 150 மெகா உவாட்.




| நிலையம் | தொடக்க நிலை | நிலை - 1 1 ஆம் ஆண்டு | நிலை - 2 3 ஆவது ஆண்டு | நிலை - 3 3 ஆவது ஆண்டு | நிலை - 4 3 ஆவது ஆண்டு | 10ஆவது ஆண்டுக்குப் பின் |
|---|---|---|---|---|---|---|
| காங்கேசன்துறை | 2 X 8 மெ.உ 1 X 16 மெ.உ | | | | 4 X 25 மெ.உ | |
| சுன்னாகம் | | | 1 X 20 மெ.உ | | | |
| திருமலை | | | 2 X 25 மெ.உ | 2 X 150 மெ.உ | | |
| அறுகம்பை | | 1 X 20 மெ.உ | | | | |
| மன்னார் | | | 1 X 20 மெ.உ | | 2 x 20 மெ.உ | 3 x 20 மெ.உ |
| AUX. SERV | 1 மெ.உ | | | | | |

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றை தமிழீழத்தின் பிரதான மின் உற்பத்தி நிலையங்களாக சிபார்சு செய்கின்றோம். இவை தவிர, சிறுசிறு அளவில் தனிப்பட்ட பாவனைகளுக்கு,

1. காற்று அலை (Wind Mill).
2. உயிரியல் வாயு (Bio Gas).
3. சூரிய மின்கலம் (Solar Panel).

முதலியவற்றை அவ்வவ்வற்றிற்கு பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து பயன்படுத்த முடியும்.

மேலும்,

1. சமுத்திர நீர் வெப்பமாற்றி மின் உற்பத்தி (O. T. E. -s Solar Pond).
2. அலை மின் உற்பத்தி (Tidal Power).

இவைகளிலிருந்து மின் உற்பத்தி செய்வதற்கு ஏற்ற இடங்களை அறிவதற்கு, விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

**6. 132 K. V. இரட்டை வழி ஊடுகடத்தல்(DoubleCircuit)**

தற்போது இது வவுனியாவில் இருந்து சுன்னாகம் வரையும் உள்ளது. மேலும் இதனை சுன்னாகத்திலிருந்து காங்கேசன்துறை வரையும், மாங்குளத்திலிருந்து புத்தளம் வரையும் (மன்னார் ஊடாக) விஸ்தரிக்க வேண்டியுள்ளது. அத்துடன், மாங்குளத்தில் இருந்து சுன்னாகம் வரையும் தற்போது இருப்பதற்கு மேலதிகமாக இன்னும் ஒரு 132 K. V. இரட்டைவழி ஊடுகடத்தல் (Double Circuit) அமைக்கப்பட வேண்டும். திருகோணமலையில் இருந்து அறுகம்பை வரைக்கும் (வாழைச்சேனை ஊடாக) ஒரு 132 K. V. இரட்டைவழி ஊடுகடத்தல் அமைக்கப்பட வேண்டும்.

**7. 220 K. V. இரட்டை வழி ஊடுகடத்தல் (Double Circuit)**

மாங்குளத்திலிருந்து திருகோணமலை வரை 220 K. V. இரட்டைவழி ஊடுகடத்தல் இரண்டு (Double Circuit -Double Line) அமைக்கப்பட வேண்டும். மற்றும் திருகோணமலையில் இருந்து வாழைச்சேனை வரைக்கும் 220 K. V. இரட்டைவழி ஊடுகடத்தல் அமைக்கப்பட வேண்டும்.

**8. பிரதம மின்மாற்றி நிலையம் (Grid Sub -Station)**

| | |
|---|---|
| காங்கேசன்துறை - | 2 X 30 m v a (132 / 33 K. V.) |
| சுண்ணாகம் - | 4 X 30 m v a (132 / 11 K. V.) |
| கிளிநொச்சி - | 2 X 30 m v a (132 / 33 K. V.) |
| மன்னார் - | 5 X 30 m v a (132 / 11 K. V.) |
| | 2 X 30 m v a (132 / 33 K. V.) |
| புத்தளம் - | 2 X 10 m v a (132 / 33 K. V.) |
| வவுனியா - | 2 X 10 m v a (132 / 33 K. V.) |
| மாங்குளம் - | 4 X 50 m v a (220 / 132 K. V.) |
| | 2 X 30 m v a (132 / 33 K. V.) |
| முல்லைத்தீவு - | 2 X 30 m v a (220 / 33 K. V.) |
| திருகோணமலை - | 10 X 30 m v a (220 / 11 K. V.) |
| | 2 X 30 m v a (132 / 33 K. V.) |
| | 2 X 10 m v a |
| | 4 X 30 m v a (132 / 11 K. V.) |
| வாழைச்சேனை - | 2 X 50 m v a (220 / 132 K. V.) |
| | 2 X 30 m v a (132 / 33 K. V.) |
| அறுகம்பை - | 5 X 30 m v a (132 / 11 K. V.) |
| | 2 X 30 m v a (132 / 33 K. V.) |

உட்கட்டுமான மின்சாரப் பகுதியின் கூட்டத்தில் மேற்படி மின்சார நிலையங்களும், பிரதான ஊடுகடத்திகளுக்குமான கட்டமைப்பு பரிசீலித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## தமிழீழத் தொலைத்தொடர்பு

தமிழீழத்திற்குத் தேவையான தொலைத்தொடர்பு அமைப்பானது வெளிநாட்டுத் தொடர்பு, உள்நாட்டுத் தொடர்பு ஆக அமையும்.

வெளிநாட்டுத் தொடர்புக்கு ஓர் சர்வதேசத் தொடர்பு நிலையம் (International Swiching Centre -I. S. C.) அமைக்க வேண்டும். அத்துடன், ஓர் செய்மதித் தொடர்பு பூமி நிலையம் (Sattelite Communication Earth Station) அமைக்க வேண்டும்.

உள்நாட்டுத் தொடர்புக்கு ஓர் தேசியத் தொடர்பு நிலையமும் (National Switching Centre -N. S. C.) பிராந்தியத் தொடர்பு நிலையங்கள் (Regional Switching Centre -R. S. C.), மாவட்டத் தொடர்பு நிலையங்கள் (District Switching Centre -D. S. C.), உள்ளூர்த் தொடர்பு நிலையங்கள் (Exchange -Exc. / Remote Switching Unit -R. S. U.) என்பன அமைக்க வேண்டும்.

தமிழீழத்திற்கு திருகோணமலை தலைநகரமாக இருக்கின்றபடியால், சர்வதேசத் தொடர்பு நிலையமும் (I. S. C.) தேசியத் தொடர்பு நிலையமும் (N. S. C.) அங்கு அமைய வேண்டும். அத்துடன், செய்மதித் தொடர்பு பூமி நிலையமும் (Sattelite Earth Station) அமைய வேண்டும்.

தமிழீழத்தில் தொலைத்தொடர்பு எப்படி அமையலாம் என்பது, இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் தேசிய வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

இங்கே காட்டப்பட்டிருக்கும் தொலைத்தொடர்பு வலை அமைப்பு (Telecommunication Network) இலங்கைத் தொலைத்தொடர்புத் திணைக்களம் 1990 ஆம் ஆண்டுக்கு முன், வடக்கு -கிழக்கு மாகாணங்களுக்குத் தொலைத்தொடர்பு புனர் அமைப்பிற்கு வகுத்த திட்டத்தை அடிப்படையாக வைத்து தமிழீழத்திற்குத் தேவையான சில மாற்றங்களுடன் காட்டப்பட்டு இருக்கின்றன.

இதன்படி வடமாகாணத்தில், மாங்குளத்தில் ஒரு உள்ளூர்த் தொடர்பு நிலையமும் (R. S. U.) கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பில் ஒரு உள்ளூர்த் தொடர்பு நிலையமும் (R. S. U.) அமைப்பதற்கு காட்டப்பட்டு இருக்கின்றது.

### மற்றும் மாவட்டத் தொடர்பு நிலையங்கள் (D. S. C.) அமைக்கவேண்டிய இடங்கள் பின்வருமாறு:-

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை, மன்னார், புத்தளம், சிலாபம் ஆகியன.

இவ் உள்ளூர்த் தொடர்பு நிலையங்கள் (R. S. U.), மாவட்டத் தொடர்பு நிலையங்கள் (D. S. C.) ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட தொடர்பு நிலையங்கள் பின்வருமாறு:-

### யாழ்ப்பாணம்: மாவட்டத் தொடர்பு நிலையம் (D. S. C.)

| | |
|---|---|
| பளை | உ. தொ. நி. (R. S. U.). |
| சாவகச்சேரி | உ. தொ. நி. (Exc.). |
| பருத்தித்துறை | உ. தொ. நி. (Exc.). |
| வல்வெட்டித்துறை | உ. தொ. நி. (R. S. U.). |
| ஆவரங்கால் | உ. தொ. நி. (R. S. U.). |
| சுண்ணாகம் | உ. தொ. நி. (R. S. U.). |
| காங்கேசன்துறை | உ. தொ. நி. (Exc.). |
| சித்தங்கேணி | உ. தொ. நி. (R. S. U.). |
| ஊர்காவற்றுறை | உ. தொ. நி. (Exc.). |
| வேலணை | உ. தொ. நி. (R. S. U.). |
| புங்குடுதீவு | உ. தொ. நி. (R. S. U.). |
| நெடுந்தீவு | உ. தொ. நி. (R. S. U.). |

### கிளிநொச்சி: மாவட்டத் தொடர்பு நிலையம் (D. S. C.).


| | |
|---|---|
| பூநகரி | உ. தொ. நி. (R. S. U.). |
| ஆனையிறவு | உ. தொ. நி. (R. S. U.). |
| முறிகண்டி | உ. தொ. நி. (R. S. U.). |

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...

www.tamilarangam.net



# தமிழீழ உட்கட்டுமானம்...




### மாங்குளம்: மாவட்டத் தொடர்பு நிலையம் (D. S. C.).

| | |
|---|---|
| துணுக்காய் | உ. தொ. நி. (R. S. U.). |
| வவுனிக்குளம் | உ. தொ. நி. (R. S. U.). |
| புளியங்குளம் | உ. தொ. நி. (R. S. U.). |
| நெடுங்கேணி | உ. தொ. நி. (R. S. U.). |

### வவுனியா: மாவட்டத் தொடர்பு நிலையம் (D. S. C.).

| | |
|---|---|
| ஓமந்தை | உ. தொ. நி. (R. S. U.). |
| பூவரசங்குளம் | உ. தொ. நி. (R. S. U.). |
| செட்டிக்குளம் | உ. தொ. நி. (R. S. U.). |

### முல்லைத்தீவு: மாவட்டத் தொடர்பு நிலையம் (D. S. C.).

| | |
|---|---|
| புதுக்குடியிருப்பு | உ. தொ. நி. (R. S. U.). |
| முள்ளியவளை | உ. தொ. நி. (R. S. U.). |
| அலம்பில் | உ. தொ. நி. (R. S. U.). |
| புல்மோட்டை | உ. தொ. நி. (R. S. U.). |

### திருகோணமலை: மாவட்டத் தொடர்பு நிலையம்.

| | |
|---|---|
| குச்சவெளி | உ. தொ. நி. (R. S. U.). |
| நிலாவெளி | உ. தொ. நி. (R. S. U.). |
| கோமரங்கடுவெல | உ. தொ. நி. (R. S. U.). |
| பன்குளம் | உ. தொ. நி. (R. S. U.). |
| தம்பலகாமம் | உ. தொ. நி. (R. S. U.). |
| கந்தளாய் | உ. தொ. நி. (R. S. U.). |
| மூதூர் | உ. தொ. நி. (Exc.). |
| கிளிவெட்டி | உ. தொ. நி. (R. S. U.). |
| வாகரை | உ. தொ. நி. (R. S. U.). |

### மட்டக்களப்பு: மாவட்டத் தொடர்பு நிலையம் (D. S. C.).

| | |
|---|---|
| ஏறாவூர் | உ. தொ. நி. (R. S. U.). |
| வாழைச்சேனை | உ. தொ. நி. (R. S. U.). |
| பூனாவி | உ. தொ. நி. (R. S. U.). |
| கரடியனாறு | உ. தொ. நி. (R. S. U.). |
| மகா ஓயா | உ. தொ. நி. (R. S. U.). |
| காத்தான்குடி | உ. தொ. நி. (R. S. U.). |
| களுவாஞ்சிக்குடி | உ. தொ. நி. (R. S. U.). |

### அம்பாறை: மாவட்டத் தொடர்பு நிலையம் (D. S. C.).

| | |
|---|---|
| கல்முனை | உ. தொ. நி. (Exc.). |
| அக்கரைப்பற்று | உ. தொ. நி. (R. S. U.). |
| பொத்துவில் | உ. தொ. நி. (R. S. U.). |

### மன்னார்: மாவட்டத் தொடர்பு நிலையம் (D. S. C.).

| | |
|---|---|
| தலைமன்னார் | உ. தொ. நி. (R. S. U.). |
| எருக்கலம்பிட்டி | உ. தொ. நி. (R. S. U.). |
| திருக்கேதீஸ்வரம் | உ. தொ. நி. (R. S. U.). |
| மடுறோட் | உ. தொ. நி. (R. S. U.). |
| உயிலங்குளம் | உ. தொ. நி. (R. S. U.). |
| சிலாவத்துறை | உ. தொ. நி. (R. S. U.). |

### புத்தளம்: மாவட்டத் தொடர்பு நிலையம் (D. S. C.).

| | |
|---|---|
| காரைதீவு | உ. தொ. நி. (R. S. U.). |
| கற்பிட்டி | உ. தொ. நி. (R. S. U.). |
| தலவில | உ. தொ. நி. (R. S. U.). |
| மாம்புரி | உ. தொ. நி. (R. S. U.). |
| முந்தல் | உ. தொ. நி. (R. S. U.). |

### சிலாபம்: மாவட்டத் தொடர்பு நிலையம் (D. S. C.).

| | |
|---|---|
| உடப்பு | உ. தொ. நி. (R. S. U.). |
| முன்னேஸ்வரம் | உ. தொ. நி. (R. S. U.). |

மாவட்டத் தொடர்பு நிலையம், பிராந்தியத் தொடர்பு நிலையம், தேசியத் தொடர்பு நிலையம் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு (Junction Route) நுண் அலை (Micro Wave), VHF, UHF வான் அலை மூலம் தொடர்புபடுத்தலாம்.

மாவட்டத் தொடர்பு நிலையம் (D. S. C.), உள்ளூர்த் தொடர்பு நிலையம் (R. S. C.) ஆகியவற்றிலிருந்து உள்ளூர்த் தொடர்பு நிலையங்களுக்கு (R. S. C. / R. S. U.) தூரத்தைப் பொறுத்தும், நில அமைப்பைப் பொறுத்தும் 'கேபிள்' மூலம் (P. C. M. -Junction Cable Pulse Code Modulation) அல்லது நுண் அலை, VHF / UHF மூலமும் தொடர்பை ஏற்படுத்தலாம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மாங்குளத்திற்கு கிளிநொச்சி ஊடாகத் தொடர்புபடுத்தலாம். மாங்குளத்தில் இருந்து திருகோணமலைக்கு புல்மோட்டை ஊடாகத் தொடர்புபடுத்தலாம். திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும் இடையில் ஓர் நுண் அலைக் கோபுரம் (Micro Wave Tower) அமைத்து, நேரடித் தொடர்பை ஏற்படுத்தலாம். மாங்குளத்திற்கும் புத்தளத்துக்குமான தொடர்பு, மன்னார் ஊடாக அமைக்கலாம். மன்னாருக்கும் புத்தளத்திற்கும் இடையில் ஓர் நுண் அலைக் கோபுரம் அமைக்க வேண்டும்.

மாங்குளத்திலும் முல்லைத்தீவிலும் நுண் அலைக் கோபுரங்கள் இல்லாதபடியால் அங்கும் இவை அமைத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணத்தில், தற்போதுள்ள யாழ். தொலைத்தொடர்பு நிலையம் பொருத்தமான இடத்தில் இல்லை. இதைக் கந்தர்மடத்தில் அமைப்பது பொருத்தமாக இருக்கும். இடம் இல்லாவிட்டால், நல்லூரில் அமைக்கலாம். பருத்தித்துறை தொடர்பு நிலையத்தைக் கரவெட்டி - பருத்தித்துறை எல்லையில் அமைப்பது பொருத்தமானதாக இருக்கும்.

செய்மதி பூமி நிலையத்தைத் திருகோணமலையில் இருந்து சிறு தொலைவில் அமைப்பது நன்று. மின் அதிர்வுகள் (Electrical Disturbances) இல்லாத இடத்தில் அமைப்பது நன்று.

தமிழீழத்திற்கும் இந்தியாவிற்குமான தொடர்பு மன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் நுண் அலை (Micro Wave Communication) மூலம் தொடர்புபடுத்தலாம்.

தற்பொழுது தொலைத்தொடர்பு நிலையங்களின் தேவையான பரிமாணம் (Required Capacity of the Exchanges) மதிப்பிட முடியாது. தொடர்பு நிலையங்கள் அமைக்கும் நேரத்தில், தேவைக்கேற்றபடி பிற்காலத் தேவையையும் கருத்தில் கொண்டு நிலையங்களை அமைக்கலாம்.

### ரெலக்ஸ் தொடர்பு (Telex Communication)

ரெலக்ஸ் தொடர்பு உள்நாட்டுத் தொடர்பு, வெளிநாட்டுத் தொடர்பு ஆக அமையும். இதற்காக ஒரு ரெலக்ஸ் தொடர்பு நிலையம் திருகோணமலையில் அமைக்க வேண்டும். இந்நிலையத்தை சர்வதேசத் தொடர்பு நிலையம் அமைக்கப்பட்ட கட்டிடத்தில் அமைக்கலாம்; அல்லது அருகிலும் அமைக்கலாம்.

உள்நாட்டு ரெலக்ஸ் தொடர்பு கேபிள் மூலமாகவும், தூர இடங்களுக்கு வான் அலைப் பாதை ஊடாகவும் (Radio Channels) தொடர்புகொள்ளலாம்.

வெளிநாட்டுத் தொடர்பு செய்மதி மூலம் தொடர்புகொள்ளலாம்.

கடலடிக் 'கேபிள்' (Sup - Mative Cable) அமைக்கப்பட்டால், அதன் மூலமும் தொடர்புகொள்ளலாம்.

### Fax தொடர்பு Facsimile

சாதாரண தொலைபேசி இணைப்பில் Fax தொடர்பு வசதிகளை ஏற்படுத்தலாம்.

### தொலைக்காட்சி நிலையங்கள்

தொலைக்காட்சிப் பிரதான நிலையத்தை தம்பலகாமத்தில் நிறுவலாம். கிழக்கு மாகாணத்தில் அம்பாறையிலும், வட மாகாணத்தில் கொக்காவிலிலும் அஞ்சல் நிலையங்களை நிறுவத் தெரிவுசெய்யலாம்.

இதன் அமைவு, பிரமாணங்கள், தெரிவுசெய்யும் உபகரணங்கள் பரப்பும் வலுவில் தங்கியுள்ளன.

### வானொலி நிலையங்கள்

வானொலிப் பிரதான நிலையத்தை தம்பலகாமத்தில் நிறுவலாம். கிழக்கு மாகாணத்தில் அம்பாறையிலும் வடமாகாணத்தில் கோப்பாயிலும் வானொலி அஞ்சல் நிலையங்களை நிறுவத் தெரிவுசெய்யலாம்.

FM இல் அல்லது AM இல் அலையைப் பரப்பும்வேளையில், அமைவிடங்கள் மாறுதல் அடையும். எதிர்வரும் காலத்தில் FM இல் மட்டும் அலையைப் பரப்பவேண்டி ஏற்படின், மேலதிக நிலையங்களை அமைக்க வேண்டும். அலை பரப்பியின் வலுவைப் பொறுத்து, நிலையங்களின் அமைவிடங்கள் வேறுபடலாம். ■

(தொடரும்...)

---

# எமது மண்ணுக்கே திரும்ப...

ரது சேவையைப் பாராட்டும் முகமாக ஒரு விருந்துபசாரம் நடாத்தி அவரைக் கௌரவித்தனர். தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்கள் பங்குகொண்ட அந்த நிகழ்வில், பேராசிரியர் துரைராசாவும் உரையாற்றினார்.

வழமை போலவே போராட்டத்தின் தேவை பற்றியும் -சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறை பற்றியும் -தன்னிறைவான பொருளாதாரத்தின் அவசியம் பற்றியும் பேசினார். அப்பேச்சின் ஒரு கட்டத்தில் -

".... எமது இனத்தின் விடுதலைக்காக தங்களது உயிரைத் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்கும் புலிகளுக்கு, நான் தலை சாய்த்து வணக்கம் செலுத்த விரும்புகின்றேன்" என்று, தனது தூய நாவால் போராளிகளை மதித்து உரையாற்றிய அந்தப் பெருந்தகை, எம்மை விட்டு நிரந்தரமாகவே பிரிந்து விட்டார்.

பேராசிரியர் துரைராசா அவர்கள், புலமையும் பரந்த பார்வையும் கொண்ட பேராசான் மட்டுமல்ல -

தமிழ் மக்களின் இதயங்களைக் கவர்ந்தெடுத்த ஒரு மக்கள் சேவகன் மட்டுமல்ல -

## எல்லாளன்

தமிழீழ அன்னைக்குத் தொண்டு செய்த அதன் தவப்புதல்வன்.

தமிழீழ அன்னைக்கு வலு சேர்க்கப் பாடுபட்ட ஒரு தேசப்பற்றாளன்.

ஒரு உண்மை மனிதன்.

தமிழினத்தின் கல்வியில் அவரது சேவை ஒரு கலங்கரை விளக்கு.

உலகக் கல்விமான்கள் மத்தியில் அவர் ஒரு அறிவுப் பழம்.

எமது மக்களின் உரிமைகள் பற்றிப் பேசும்போது, அவர் ஒரு போராளி.

அவரது கிராமத்திலோ வேட்டி கட்டிய ஒரு விவசாயி.

இவ்விதம் மக்களின் அனைத்து மட்டங்களிலும் தனது பண்பான -நேர்மையான -பணிவான - சேவையால் மக்களின் மனதில் இடம்பிடித்துவிட்ட போராசானின் திடீர் மறைவு, தமது குடும்ப உறுப்பினர் ஒருவரை இழந்துவிட்ட தவிப்பைத்தான் மக்கள் ஒவ்வொருவரிலும் ஏற்படுத்தியுள்ளது.

தனது உணர்வை வெளிப்படுத்த வதிரிக் கிராமத்தின் அந்த முதியவர், பயன்படுத்திய வார்த்தைகளில்தான் எவ்வளவு அர்த்தம் பொதிந்துள்ளது!

"பேராசிரியர் துரைராசா எமது மண்ணிற்கே திரும்ப வரவேண்டும்!" ■

நன்றி: 'விடுதலைப் புலிகள்'

---

# அவநம்பிக்கையின்...

தொடர்புகள் போன்ற முக்கிய துறைகள் இருபகுதியும் இணைந்த பொருண்மிய ஆணைக்குழுவொன்றின் மூலமே நிருவகிக்கப்படும். அத்தோடு பாலத்தீனியச் சட்டவாக்கம் தொடர்பாக தடுப்பு(வீட்டோ) உரிமை, ஏனைய வெளிவிவகாரம் யாவற்றிலும் பூரண அதிகாரம் இசுரேலிடம் உண்டு. எனவே றபின் காசாவிலுள்ள 24000 ஊழியர்க்கு, தான் வேதனம் வழங்க மாட்டேன் என்றும் மின்சாரம் போன்ற வசதிகள் வழங்கப்பட மாட்டாது என்றும் இப்பகுதிகளை நிருவகிப்பதற்குத் தேவையான பணத்தைப் பெறுவது அரபாத்தின் வேலை என்றும் கூறிவிட்டார். இப்பகுதி அபிவிருத்திக்கு மட்டுமே பெரும் தொகை நிதிஉதவி செய்யவந்த சருவதேச அமைப்புக்கள், இன்னமும் முறையாக இடைக்கால நிருவாக மன்று அமைக்கப்படாததால் உதவி செய்யத் தயங்குகின்றன. இம் மன்றிற்கு, தன்னோடு நீண்டகாலம் வெளிநாடுகளில் தங்கி, மேலத்தேய உயர்கல்வி பெற்ற புத்திஜீவிகளை அரபாத் நியமிப்பது பற்றி உள்ளூர் மக்கள் எதிர்ப்புக் காட்டுவது இம்மன்றை உருவாக்கத் தடையாகி விட்டதாகக் கூறப்படுகின்றது. அத்தோடு மிக விரைவில் முறையான தேர்தல் ஒன்றை காசா, மேற்குக் கரை பகுதிகளில் நடாத்தி பாலத்தீனிய சட்டமன்றுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும். இத் தேர்தல் எத்தகைய குழப்பத்தின் மத்தியில் நடக்கக் கூடும் என எவராலும் ஊகிக்க முடியும்.

### இரு தரப்பிலும் நிலவும் உச்சக் கட்ட அவநம்பிக்கை

இன்று அமைதி உடன்பாடானது நூற்றாண்டு காலமாக இரு தரப்பினரிடையேயும் நிலவும் -கொழுந்து விட்டெரியும் பகைமையைத் தணிக்க பயன்படவில்லை. அவ நம்பிக்கை இரு

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுத முடியாத கா

எப்படி இவர்களுக்கு முகங்கள் இல்லையோ, முகவரிகள் இல்லையோ, அதேபோலத்தான் எத்தகைய அறிவாலும், எத்தகைய ஞானத்தாலும் கணிப்பீடு செய்யக்கூடிய வகையில் இவர்களது உள்ளகமும் இல்லை.

இங்கே எழுதப்பட்டுள்ளவை எல்லாம் இவர்களோடு இணைந்த சில சம்பவங்கள் மட்டுமே. அந்தச் சம்பவங்களினூடு உங்களால் முடிந்தால் அவர்களது மன உணர்வுகளை மதிப்பீடு செய்து கொள்ளுங்கள்; அவர்களது சிந்தனைப் போக்கின் தன்மைகளை உய்த்தறிந்து கொள்ளுங்கள்.

தனிமனித அபிலாசைகளுக்கு அப்பால் - சுயத்தின் சிறைகளை உடைத்துக் கொண்டு -அவர்களது சிந்தனை ஓட்டம் விரிந்தபொழுது -ஈடு இணையற்ற தேச பக்தியுடன், தமது உடலோடு தமது உயிரோடு 'தம்மையே' தியாகம் செய்யத் துணிந்தவர்கள் அவர்கள்.

ஓயாத எரிமலையாக சதா குமுறிக் கொண்டிருந்த நெஞ்சுக்குள், ஆற்றமுடியாத தாகமாக எழுந்து கொண்டிருந்த சுதந்திர வேட்கையைத் தணிக்க, எதுவும் செய்யவும்; எங்கேயும் செய்யவும் தயாரான நெஞ்சுரத்தோடு அவர்கள் பயணம் போனார்கள்.

ஒரு மாறுபாடான - முற்றிலும் எதிர்மாறான தள நிலைமைக்குள் நின்று அவர்கள் எவ்விதமாக இவற்றைச் சாதித்திருப்பார்கள் என்பதை, ஆற அமர இருந்து, உள்ளத்தைத் திறந்து சிந்தித்துப் பாருங்கள்.

நெஞ்சு புல்லரிக்கும்; உயிர் வேர்க்கும்.

அவர்கள் - கண்களுக்கு முன்னால் விரிந்து கிடந்த இன்றைய 'நவீன நாகரீகத்தின்' தாலாட்டில்தான் உறங்கினார்கள்.

புலிகளின் ஒழுக்க வாழ்வின் உயரிய மரபை மீறிவிடச் செய்யும் சூழ்நிலைக்குள்தான் உலா வந்தார்கள்; இவற்றுக்குள் வாழ்ந்தும் -எதற்கும் அசையாத இரும்பு மனிதர்களாக நெருப்பைக் காவித்திரிய எப்படி அவர்களால் முடிந்தது?

வெளிப்படையாக - அந்த உல்லாச வாழ்வோடு கலந்து சீவித்தபோதும், உள்ளுக்குள் -இதய அறைகளின் சுவர்களுக்குள் -தாயக விடுதலையின் வேட்கையை மட்டுமே சுமந்துகொண்டு, பகைவனின் அத்திவாரங்களைக் குறிவைத்துத் தேடி



அலையும் அபூர்வமான நெஞ்சுரம் எங்கிருந்து இவர்களுக்குள் புகுந்தது?

பகைவனின் இலக்கை அழிக்கும் தன் நோக்கினை அடைவதற்காக, தன்னை அழிக்கவும் துணிந்த இந்த அதிசய மன உணர்வை எப்படி அவர்கள் பெற்றார்கள்?

தாயகத்துக்காக செய்யப்படும் உயிர் அர்ப்பணிப்புகளில், ஏற்றத்தாழ்வுகள் கிடையாது என்பதுதான் உண்மை.

ஆனாலும், இங்கென்றால் - வெடி அதிரும் கடைசி நொடிப்பொழுது வரை -பரிபூரணமான ஒரு 'போர்ச் சூழ்நிலை' அந்த வீரனது மனநிலையை அதே உறுதிப்பாட்டோடு பேணிக் கொண்டே இருக்கும். ஆனால் அங்கு......?

**அது முற்றிலுமே தலை கீழான ஒரு தளநிலைமை. மானிட இயல்புணர்வுகளைத் தூண்டி -அவற்றுக்குத் தீனி போட்டு சுயகட்டுப்பாட்டை இழக்கச் செய்து -மனஉறுதிப்பாட்டைச் சிதைத்து விடக்கூடிய உல்லாசத்தின் மடி அது. அதில் படுத்துறங்கி பகை தேடி, வேவு பார்த்து, ஒழுங்கமைத்து, குறிவைத்து வெடிபொருத்திப் புறப்பட்டு, மனிதக் குண்டாகி.... எல்லாவற்றையும் தானே செய்வதோடு பகையழிக்கும் போது தனையழிக்கும் போதும்கூட -தன் பெயர் மறைத்துப் புகழ் வெறுக்கின்ற தற்கொடை ஒரு அதியுயர் பரிமாணத்தை உடையது. உயிர் அர்ப்பணத்தில் அது உன்னதமானது; ஈடு இணையற்றது. இந்த வியப்பு மிகு தியாக உணர்வை இவர்களுக்கு ஊட்டியது?**

இவையெல்லாம் - அந்த 'நிழல்' வீரர்களினது பன்முகப்பட்ட தோற்றப்பாட்டின் ஓரிரு பக்கங்கள் மட்டுமே. சொல்லப்படாத பக்கங்கள் நிறைய உண்டு. அவை எழுத முடியாத காவியங்கள்; அவை முழுமையாக எழுதப்படும்போது -படிக்கின்றவர்கள் விறைத்துப் போவார்கள்; ஆன்மா உறைந்து சிலையாவார்கள்.

எப்படி அவர்கள் எதிரியின் உச்சந்தலையில் கூடாரம் அடித்தார்கள்...? கூடாரம் அடித்து - அவனது மண்டையோட்டைத் துளையிட்டு அவர்கள் உள்ளே நுழைந்தது எப்படி...? நுழைந்து - அவனது மூளையின் பிரிவுகளை அல்லவா அவர்கள் குறிவைத்தார்கள். அது எப்படி...? எவ்விதமாக இவையெல்லாம் சாத்தியமானது....? எத்தகைய மதிநுட்பத்தோடு நகர்வுகளை மேற்கொண்டு, இந்த அதியுயர் இராணுவ சாதனைகளை அவர்கள் படைத்திருப்பார்கள்...? இந்த விவேகத்தையும் புத்திக் கூர்மையையும் இவர்களுக்கு ஊட்டி, அவர்களை நெறிப்படுத்தி வளர்த்தது எது?

உண்மையிலேயே இவையெல்லாம் மேனி சிலிர்க்கச் செய்யும் விந்தைகளேதான்; நம்புதற்கரிய அற்புதங்கள்தான்!

**மன ஒருமைப்பாட்டோடு தங்களைத் தாங்களே வழிப்படுத்தி, எங்கள் இயக்கத்தின் உயரிய விழுமியங்களைக் காத்த அந்தப் புனிதர்கள்; தான் அழியப்போகும் கடைசிப் பொழுதுகளிலும் நிதானத்துடனும் விவேகத்துடனும் செயலாற்றி, பகைவனின் இலக்குகளை அழிப்பதில் மட்டுமே குறியாக இருந்த அந்தக் கரும்புலிகள்; "முகத்தை மறைத்து, புகழை வெறுத்து, மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட 'பிரபாகரனின் குழந்தைகள்...'**

இனிப்படியுங்கள் -

## பாசம்



ஒட்டி உலர்ந்து எலும்புக்கூடாகிப் போனாள் அந்தத் தாய்.

இந்த வாட்டமெல்லாம் அவனுடைய சாவுக்குப் பிறகுதான்.

அம்மாவின் சந்தோசம், நிம்மதி, கலகலப்பு... அனைத்துமே அவன்தான். அவன் போனதோடு எல்லாமே போய் விட்டது.

இருக்காதா என்ன...?

வறுமையோடு போராடிய அந்தக் குடும்பத்தை வாழவைக்க, இரும்போடு போராட அவன் கம்மாலைக்குப் போன மறக்க முடியாத அந்த நாட்கள் -அம்மாவின் மனதை ஆக்கிரமித்துள்ளன.

அப்போது பத்தே வயதுடைய குழந்தை அவன்.

அம்மாவுக்கு அவன்தான் மூத்தவன். அவனுக்குப் பிறகும் ஐந்துபேர்; பச்சைக் குழந்தைகள்.

எல்லோருடைய துன்பங்களையும் தானே அனுபவித்தான். எல்லாக் கஸ்டங்களையும் தானே சுமந்தான்.

அந்தக் குடும்பத்தின் உயிராக அவன்தான் இயங்கிலான்.

ஆனால், அவனுடைய உயிர் அம்மாவிலேதான் இருந்தது.

அம்மா துன்பப்பட்டதைப் பார்த்துப் பொறுக்க முடியாமல்தான் -

7 மைல் தொலைவிலிருந்த அந்தப் பட்டறைக்கு பிஞ்சுக்கால்கள் கொப்பளிக்க, ஒவ்வொரு நாளும் நடந்தே போய்வந்தான்.

அம்மாவுக்கு உயிர் துடிக்கும்; இதயத்தில் இரத்தம் வடியும்; பின்னேரங்களில் சோர்ந்து வருகிற பிள்ளையை ஓடிச் சென்று அள்ளி எடுத்து, கண்ணீர்க் கரையக் கட்டியணைப்பாள் அந்தத் தாய்.

"அவன்தான் எனக்குப் பிள்ளை" என்கிறாள் அம்மா.

ஓடி அலைந்து வந்து ஓய்ந்திருக்கும் ஒரு பொழுதிலும், அடுப்படியில் அல்லல்படும் அம்மாவுக்குத் துணையாக நெருப்போடு போர் தொடுப்பான் பிள்ளை; அம்மாவுக்குத் துயரம் நெஞ்சை அடைக்கும்.

தன்னையே உருக்கி வார்த்து தங்கச்சிக்காக ஆசையோடு அவன் சங்கிலி ஒன்று செய்து வந்தபோது, அடக்கமுடியாமல் அம்மா அழுதேவிட்டாள்.

அந்தச் சின்ன வயதில் அவன் கஸ்டப்பட்டதைப்போல வேறெவருமே பட்டிருக்க மாட்டார்களாம் -அம்மா சொல்கிறாள்.

இருள் கவிந்த அந்த வீட்டுக்கு விளக்கேற்றியவன் அவன்தான்.

இந்தியர்கள் வந்து அம்மாவையும் பிள்ளையையும் பிரித்தார்கள்; அவன் இயக்கத்துக்குப் போய்விட்டான்.

இப்போது அவனொரு கரும்புலி வீரனாகி -

'புலிகளை அழிக்கக் கங்கணம் கட்டி நின்ற' ஒரு இலக்கை அழிக்கத் தயாராகி நின்றான்.

பகைவனின் பிரதான தெருவொன்றில் அந்த இலக்கு, சரிவந்து பொருந்திய ஒரு 'இளவேனில்' காலையில் -

தாக்குதலின் இரகசியத் தன்மையையும், அதன் தேவையையும் தெளிவாகப் புரிந்துணர்ந்திருந்த அந்த விடுதலை வீரன் -

கூடவே வந்துநின்று, கட்டி அணைத்து வழியனுப்பி வைத்த அந்தத் 'தளத்தின்' அதிபதியிடம் காதோடு சொல்லிவிட்டுப் போனானாம் -

"அம்மாவிட்ட மட்டும் சொல்லிவிடுங்கோ... அவ ஒருத்தருக்கும் சொல்லமாட்டா...".

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Network

August 1994

Published by the International Federation of Tamils


> "We launched our struggle for self determination and political independence because of the systematic oppression of our people by the Sri Lankan state..."
>
> - Velupillai Pirabakaran, Leader of the Liberation Tigers of Tamil Eelam

### Tamil Eelam leader, Velupillai Pirabakaran in a wide ranging interview says:

## "I wanted to achieve through action rather than waste time in idle fancies"

**Tamil Eelam leader, Mr. Velupillai Pirabakaran in a recent wide ranging interview in Tamil published in the Tamil literary magazine 'Velicham', has spoken openly about his early beginnings, the role of art and literature in the struggle, and the importance that he attached to the education and welfare of the young children of Tamil Eelam.**

He said: 'The racial riots that erupted in Sri Lanka in 1958 and the agonies that the Tamils had to endure as a result were factors that impelled me to militancy. When I read the novels of Tamil Nadu writers like Kausiyan (Paminip Pavai), Sandiliyan (Kadat Pura) and Kalki (Ponniyin Selvan)... (they) roused in me the desire to see our nation rise again from servitude and our people live a life of dignity and freedom in their liberated homeland. Why should'nt we take up arms to fight those who have enslaved us?....Above all, Subhas Chandra Bose's life was a beacon to me, lighting up the path that I should follow. His disciplined life and his total commitment and dedication to the cause of his country's freedom deeply impressed me...

After I had finished reading a book the questions "Why", "What for" "How did this happen this way" used to rise in my mind. I would try to connect the narrative and the characters with the life of our people.

"I wanted to achieve something through action rather than waste time through idle fancies... **The books that I read dealing with national liberation struggles conveyed one clear message to me: "A freedom fighter should be pure, selfless and ready to sacrifice himself for his people"**

> **"A freedom fighter should be selfless and be ready to sacrifice himself for his people"**

**Responding to a question by the interviewer concerning the role of art and literature in the context of the liberation struggle, Mr.Pirabakaran said: "Art and literature take life as their theme...** they symbolise the experience of life. Today our life and experience are interwined with our struggle for liberation... At the sametime art and literature attain heights of excellence when they give birth to a consciousness of freedom.. I firmly believe that the literary resurgence emerging from the Tamil Eelam liberation struggle will produce great works which will touch the summits of excellence in the future... Several of our young fighters show a keen interest in creative literature.. some of these writings and works of art are of high quality... With the passage of time, the accumulation of experience and the growth of maturity, we can look forward to excellent literary and artistic work being produced by our liberation fighters... **When such people come to record the history of their time, it is bound to be authentic and sublime."**

Speaking about the interest that he had taken in implementing welfare and educational schemes for young children in Tamil Eelam, Mr. Pirabakaran added: "The future generation is the foundation for the nation we will build... This new generation will be scientific-minded, patriotic, honest, heroic and possessed of a sense of honour, self respect and dignity... We have taken the small boys and girls who have been affected by the war into our fond embrace. We do not consider them orphans or children bereft of kith and kin."

**He concluded: "They are the children of our motherland and they are flowers which have blossomed on our soil...We consider it our paramount duty to educate these children and bring them up... as the architects of the future of our nation."**

### International Educational Development tells UN Sub Commission:

## "Forcible deportation of asylum seekers will encourage racism - not combat it"

**Mr.Anton Ponraj, told at the 46th Sesions of the UN Sub Commission on the Prevention of Discrimination against Minorities in Geneva on 5 August 1994: "We have been particularly concerned with the increasing outbreaks of racism in many parts of Europe against asylum seekers. The fate that has befallen Tamil asylum seekers in Europe is a case in point. Some Tamil asylum seekers have even been murdered in Europe. One Tamil asylum seeker facing deportation set himself on fire in Sweden. Again in early January this year, the governments of Switzerland and Sri Lanka signed an agreement for the involuntary repatriation of Sri Lankan asylum seekers to Colombo. That such a step was taken despite the statement by a delegation from the European Parliament which visited Sri Lanka in October last year that "the current situation in Sri Lanka was not conducive for Western governments to return asylum seekers" increases our concern." Mr.Ponraj was speaking on behalf of the NGO, International Educational Development, under the Agenda Item 'Racism and the Role of the Sub Commission"**

**He added:** "It is a matter of special concern to us that Tamils who have fled their homeland to escape years of oppressive rule and genocidal progroms by a Sinhala dominated racist Sri Lankan government should now face racist attacks in the countries where they have sought refuge. What then are the measures that should be taken to combat racism? What should be the role of Sub Commission in this regard? Clearly, in the case of asylum seekers, there is a compelling need for countries to honour their obligations under the UN Convention for Refugees, in both letter and spirit. Here, we are not unmindful that countries in Europe have had to bear the cost of the oppressive actions of racist governments abroad and have had to withstand the social pressures caused by large inflows of asylum seekers. The influx of asylum seekers to Europe shows that racism anywhere is a threat to stability everywhere. **But sending back Tamil asylum seekers to face detention, torture and possible death in Sri Lanka, is not the answer.** It is not simply that it would be inhumane to treat the victims of racism in this way. Such forcible deportation will encourage racism because it will show that governments, rather than combat racism, have succumbed to the pressures of racism. At the sametime, there is a compelling need to address the underlying causes which impel a Tamil asylum seeker to flee his homeland. **We urge the Sub Commission to openly recognise the right of the Tamil people to live in their own land, free from the oppressive rule of a racist Sinhala dominated Sri Lanka government. Such open recognition by the international community will serve to impress upon the Sri Lanka government the urgent need to seek a political solution to the armed conflict in the island and will also create a climate for the return of Tamil asylum seekers to live in freedom in their homeland. This will be the effective and humane way of stopping and reversing the flow of Tamil asylum seekers, lessening the pressures on host countries, and combating the rise of racism in them."**

### Zoi Lightfoot, Spokesperson for American Indians speaks out at July Rally in London :

## "Anger is the sedative of pain, but we must learn to channel this anger"

*Zoi Lightfoot, who was born on an Indian reservation in the state of Minnesota in 1958 at a time when her people were not considered to be citizens of their own country, made an impassioned and moving speech at the public meeting at Conway Hall, London on 23 July 1994 to commemorate the July'83 genocide of Tamils in the island of Sri Lanka. She said: "I honour and salute the struggle of the Tamil people. I applaud the Liberation Tigers, whose insight has led them to recognise a woman's right to defend the land her children walk. Without that land, her future generations will no longer exist. A woman will defend her children's right to self determination as surely as a lioness will defend her cubs. ...The road to freedom, the right to be who we wish to be is long and hard. We the occupied peoples of the world have begun a journey from which there can be no turning back. We continue to battle in our own ways against those with no heart to feel the pain they inflict on us. The (American) Indian Nations have fought and continue to fight a long hard battle. For make no mistake, this war with us has been raging for 502 years now and bears no resemblance to the standard cowboy westerns... More of our people died in the prison camps known to the world as 'Indian Reserves" from starvation and small pox, than died in battle. Even more died from the bounty on our scalps, a practise later replaced with 'skinning" for bounty. Hence the term "redskin". ...That 20% of our men and women were sterilised without prior knowledge or consent is a great wrong we cannot forget. That one in ten youngsters attempt suicide - this is real pain. Anger is the sedative of pain, but we must all learn to use this anger in a channelled manner... Regardless of racial origins we must all learn to recognise and respect the cry of pain from another abused nation. ..It sometimes sticks in our throats but we must all learn true diplomacy.. For we who are labelled ethnic and indigenous, should not have to vie for time at the United Nations like beggars at a banquet waiting for the them to throw the first scrap of humanity. If it is truly the "United Nations" then where are the seats of our sovereign nations? I see no Tamil leaders sitting next to the UK representative. I see none of our leaders taking their place either. I was honoured and proud to be asked to speak here. The All Nations Forum stands with you on this day of solidarity. Before I go, I would like to pose a question aimed at those who claim 'this does not concern me' or 'I do not want to get involved in politics'. It is this. How many of my people have to be murdered and imprisoned for defending not only their right to self determination but your right to self determination before you wake up to reality? I thank you for listening. In my language this is said as Mee Gwitch. To the Tamil people I send you the spirit of my people as we walk the same road, in strength, dignity and national pride. One day the world will listen."*

**Networking to secure international recognition of Tamils' right to self determination**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 11th Anniversary - July'83 Genocide

On Saturday 23 July 1994 thousands of Tamils in England, Scotland and Wales participated in a demonstration march in London to mark the eleventh anniversary of the July'83 genocide. The march started at Temple Place behind the premises of the Indian High Commission and wound its way to Conway Hall in Holborn. A public meeting was held at Conway Hall. Amongst those who addressed the meeting were Mr. A.C. Shanthan, United Tamil Organisation (UTO), Ms. Zoe Lightfoot, Spokesperson, All Nations Forum International, Mr.Estevao Cabral, Fretlin Liberation Movement (East Timor) , Mr.Win Soe, Chairman, Solidarity for Democracy in Burma, Mr.Robert AP Tomas, Celtic League, Ms.Medea, Kurdish Workers Association, Ms. Diedre Mconnel, Campaign Against State Terrorism in Sri Lanka, Mr. Neminathan, Solicitor, Mr.S.Sri–skandarajah, Solicitor, Ms.Shivani Jegarajah, Barrister at Law, Jude Paheerathan and Dr.S. Dharmalingam. Dr. Dharmalingam who himself was incarcerted by Sri Lanka and was fortunate to survive the July'83 massacre in Welikade Jail, was the chief guest.

## Network

The demand for Tamil Eelam is a national question. It is, accordingly, an international question as well.

On the one hand, Sinhala chauvinism cannot succeed in its attempt to subjugate the people of Tamil Eelam without aid and support from influential sections of the international community, both in the Indian region and outside. On the other hand, in the end, Tamil Eelam itself will need to secure broad based international recognition.

To address the international frame within which the Tamil national struggle must perforce take shape, is therefore, not a matter of self indulgent luxury but a matter of immediate, direct and practical significance.

The new balances that are being struck in the emerging multi–polar world are not without relevance to the struggle of the people of Tamil Eelam. It is said states have permanent interests but do not have permanent friends. This may be more so in the case of nations struggling to become states.

If the 1950s and the 1960s were the decades of the anti colonial liberation movements, the 1990s is proving to be the decade of the post colonial national liberation movements. Self-determination is not a dirty word. The political force that it generates will, in the end, prevail over the power exerted by many existing state structures.

**Network** exists to help, support and network the world wide efforts being made to secure international recognition of the Tamil right to self determination.

Correspondence Address:
The International Federation of Tamils, 17, Birchview Close, Yateley, Camberley, Surrey GU17 7DL






















## Genocide is a crime - and must not go unpunished

Genocide is a crime which transcends state boundaries. Furthermore, there is no time limit within which a prosecution for genocide may be launched. Those who committed the crime of genocide during the Second World War continue to be hunted down today. The facts concerning July'83 establish, at the lowest,a prima facie case sufficient to warrant an indictment for genocide against the Sri Lanka authorities. Those responsible for genocide '83 both within the then Sri Lanka government and outside it, must be charged and punished according to law. Genocide is a crime against humanity. Genocide'83 must not go unpunished.

## "July '83 is a symbol of what is going on in Sri Lanka today"

**"July '83 is a symbol of what is going on in Sri Lanka (today) - the continuing attacks on the human rights of the Tamil people.**

The attacks in July '83 have never been investigated, leave alone by an independent commission of inquiry. Today the conflict continues. The bombings, the colonisation, the redrawing of the maps, the economic blockade and the genocide still goes on in Sri Lanka." **(British Member of Parliament, Mr.Neil Gerrard, speaking at Trafalgar Square on the 10th Anniversary of Genocide'83)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









# Tamils March in London under Liberation Tigers Banner






## Eleven Years Ago

### 'If living together is so hard, what about a separate state for the Tamils?'

"If living together is so hard, what about a separate state in the north for the Tamils? They have as good a claim to a nation of their own as most members of the United Nations. But as always it is a question of power, and in Sri Lanka the Sinhalese have the power. Do they also have the wisdom to see that the Tamil minority is treated in a way that justifies its retention within a unitary state?" (Washington Post Editorial Comment 4 August 1983)

### 'There is no God-given law that an island shall support just a single state'

"There is no God-given law that an island shall support just a single state, as examples round the world, both happy and unhappy demonstrate: Borneo, New Guinea, Tierra del Fuego, Ireland. If the island of Sri Lanka is to remain a single democratic state, the rights of its minorities will have to be restored and entrenched." (Guardian, 9 August 1983)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



International Federation of Tamils tells August 1994 Sessions of UN Sub-Commission on Prevention of Discrimination and Protection of Minorities:

# 'The assurances given by Sri Lanka to the Sub-Commission were not intended to be honoured and have not in fact been honoured'

**The International Federation of Tamils in an appeal to the delegates to the current August 1994 sessions of the UN Sub Commission on Discrimination and Protection of Minorities declared: "During the past eleven years the Sub- Commission has heard hundreds of statements raising grave concern at the failure to resolve the armed conflict in the island of Sri Lanka. Yet the conflict continues and innocent lives continue to be lost."**

**IFT pointed out that at the 45th Sessions of the Sub-Commission in August last year, a draft Resolution on the Situation of Human Rights in Sri Lanka, was withdrawn on the basis of assurances given by the Sri Lanka Delegation to the members of the Sub Commission.**

The Draft Resolution had called upon "the Government of Sri Lanka and all other parties to the armed conflict strictly to adhere to the obligations under common article 3 of the Geneva Conventions of 1949" and had **"urged the Government of Sri Lanka and other parties to the conflict to seek a cessation of hostilities and to achieve an end to the conflict through negotiations."**

IFT pointed out that the Leader of the Sri Lanka Delegation in his Statement to the Sub-Commission (on 20 August 1993)thanked the co-sponsors for withdrawing the Draft Resolution , and had detailed to the Sub Commission the measures which he claimed the Sri Lanka government had already implemented to secure human rights in the island. But, said IFT, recent Amnesty Reports show that the Sri Lanka government had prevaricated yet again before the UN Sub Commission.*(see adjoining inset)*

IFT pointed out that as for the so called negotiations with Tamil political parties in Colombo, the comments appearing in the Sinhala owned Lanka Guardian based in Colombo were relevant: **"...neither the UNP nor the SLFP has taken the grovelling (Colombo based) Tamil politicians seriously....** Successive (Sri Lanka) Governments have exploited the eagerness of Tamil parties to conjure up illusions of 'negotiations" in order to claim falsely that a majority of Tamils disagree with the ongoing Tamil national struggle in the NEP. Their aim is to marginalise the LTTE as a minority of "terrorists" and to discredit Tamil resistance as "violence"... ...Today these (Colombo based Tamil) parties are at their weakest politically... it is simply nonsense to allege that they can even induce **the present or future Government to begin official negotiations. They merely serve as window dressing for the insincere exercise of "exploring political solutions" conducted by the Government for the twin purposes of legitimizing the military campaign in the NEP and hoodwinking the international community that it is seeking a political solution to the 'Tamil problem.' "**

**IFT submitted to the Sub-Commission that the conclusion was inescapable that the Sri Lanka Government's Statement to the Sub Commission on 20 August 1993 that the Government proposed to negotiate with (Colombo based) Tamil parties 'elected' at the local authority elections was a prevarication. It was a prevarication intended to 'hoodwink' the international community and get over the immediate hurdle of the Sub Commission Draft Resolution (L27) which had, inter alia, recognised the existence of an 'armed conflict' in the island and which had "urged the Government of Sri Lanka and other parties to the conflict to seek a cessation of hostilities and to achieve an end to the conflict through negotiations."**

IFT added: **"... the assurances given by the Sri Lanka government to the Sub-Commission were not intended to be honoured and have not in fact been honoured... In the meantime, however, the Sri Lankan authorities have continued to violate the human rights of the Tamil people and have continued in their refusal to recognise their obligations under common article 3 of the Geneva Conventions of 1949.**

**IFT pointed out that Amnesty International reported in February 1994: "Thousands of Tamils are being arrested every month in Colombo, most without any valid reason. ..** The small number of cases in which there appears to be any evidence of wrong doing is high lighted by the fact that out of the total 15,711 arrests in only 17 (0.11%) cases have charges so far been laid... The army and armed groups working with the government have abducted some people and held them in secret places of detention for upto two and a half months, where they have been tortured before being dumped on the side of the road or transferred to police custody.... **.impunity remained a major obstacle to the long term improvement of human rights.** Little progress was made in the prosecution of security forces personnel allegedly responsible for committing human rights violations during previous years.."

IFT concluded: "The Sri Lanka Government often states to the Sub-Commission that it "continues to hope that the LTTE too would see the merits of a negotiated settlement". However the political reality is that it is the Sri Lanka government which used the Parliamentary Select Committee mechanism, for two years and more, as a way of avoiding direct talks with the Liberation Tigers of Tamil Eelam; that it is the Sri Lanka Government which rejected a number of offers to mediate including one made in August 1993 by four Nobel laureates; that it is the Sri Lanka President who continued to insist that there was no ethnic problem; that it is Sri Lanka which is engaged in a war for land in the Tamil homeland; and that it is Sri Lanka which seeks to conquer the north and render the Tamils in the east a minority in their own homeland.

Since the last sessions of the Sub-Commission, the Sri Lanka government has intensified its indiscriminate aerial bombardment of the North and the four year old economic blockade continues. Since last year several hundred more Tamils have been arrested in the East by Sri Lanka's military and para military forces and many have 'disappeared'.

**The International Federation of Tamils believes that these events taken together with the statements made by the Sri Lanka delegation to the Sub Commission, show that the Sri Lanka government is, in truth, engaged in creating a legitimising framework for its continued genocidal onslaught on the Tamil people. In our view the situation in the island is extremely serious and demands the urgent attention of the Sub-Commission. We request the Sub- Commission to adopt a resolution calling upon the two parties to the armed conflict, the Government of Sri Lanka and the Liberation Tigers of Tamil Eelam, to enter into a ceasefire and to commence negotiations. We believe that it is recognition and negotiation that will provide the pathways to peace in the island of Sri Lanka."**

## 'It is recognition and negotiation that will provide the pathways to peace in the island'

### Sri Lanka's Word

*"In regard to measures to ascertain the whereabouts of persons alleged to have disappeared, the government has prepared a revised warrant to be issued for the Presidential Commission to inquire into Involuntary Removals of Persons. This revision is with a view to facilitate the (Presidential) Commission to expedite its work...The prosecution of those responsible for disappearances is also being carried on with vigour." **(Sri Lanka Attorney General at UN Sub Commission, August 1993)***

### ...and Deed

**"The mandate of the Presidential Commission of Inquiry .. which investigates disappearances committed after 11 January 1991 was revised in September (1993) ..By the end of September 1993 it had concluded public inquiries into 21 cases since its creation in January 1991... No known action on its findings in any case has been taken, and none of its reports had been published by the end of year..."(Amnesty International Report February 1994)**

### Sri Lanka's Word

*"In regard to the review and revision of the Emergency Regulations relating to arrest and detention, the government has already accomplished this and the revised version of these Emergency Regulations was promulgated on 17 June 1993" **(Sri Lanka Attorney General at UN Sub Commission, August 1993)***

### ...and Deed

**" ..The new regulations have been issued in a single volume which appears to provide a consolidated set of all regulations. This is deceptive, however, as regulations on other subjects dealt with under the emergency after June 1989 still remain in force and their provisions have not been included in the newly published regulations of 17 June even when they affect detention procedures... the regulations still provide for indefinite preventive detention on renewable, three monthly detention orders ... They also continue to permit detainees to be held for long periods in police and in the northeast, in military custody...'(Amnesty International Report February 1994)**

### Sri Lanka's Word

*"Steps are underway to identify Emergency Regulations yet in force which could be revoked as being redundant or unnecessary. The Regulations which are not strictly relevant in the context of public security but nonetheless considered necessary are to be enacted as laws through the normal legislative process." **(Sri Lanka Attorney General at UN Sub Commission, August 1993)***

### ...and Deed

**"Although the government undertook to remove from the Emergency Regulations any regulation which has no bearing on public security concerns, it has since promulgated new regulations with no apparent connection to public security."(Amnesty International Report February 1994)**

### Sri Lanka's Word

*"In regard to the recommendations of the Working Group on Disappearances, arising from two visits to Sri Lanka, the government is in the process of implementing these recommendations." **(Sri Lanka Attorney General at UN Sub Commission, August 1993)***

### ...and Deed

**"In October (1993) the government established a unit under a senior police officer to examine documentation on the 'disappearance' cases submitted to the government for clarification by the UN Working Group on Enforced or Involuntary Disappearances... [The procedure adopted] does not constitute a proper inquiry into the reported 'disappearances' and appears to have been instituted as a palliative to satisfy international concern on this issue... "(Amnesty International Report February 1994)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ...வியங்கள்

## சத்து



அவனுக்குரிய தாக்குதல் காலம் துவங்கிவிட்டிருந்தது.

ஏற்கனவே சில நாட்கள் போய்வந்துவிட்டான்.

தொடர்ந்தும் நாளாந்தம் போய் வந்து கொண்டு இருக்கிறான்.

அன்று காலையிலும்கூட போய்விட்டு வந்துதான் நின்றான்.

தாக்குதல் நடக்கவில்லை.

நடாத்த முடியவில்லை.

இலக்கு வரவேண்டும்; வந்து, நேரே சந்திக்கவேண்டும்; சந்தித்து தாக்கு தூரத்திற்குள் கச்சிதமாக உட்படவேண்டும். அப்போதுதான் துல்லியமாக அடிக்கமுடியும்.

இப்படியாக எல்லாம் சரிவந்து பொருந்துகிற ஒரு சந்தர்ப்பத்தையே அவன் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துப் போனான்.

அன்று காலையுங்கூட அத்தகைய சந்தர்ப்பம் நழுவிப் போய்விட்டது.

அன்று மாலையோ, அடுத்த காலையோ, அல்லது மறுநாளோகூட அது நடந்துவிடக்கூடும்.

தான் தங்கியிருந்த வீட்டுக்கு அவன் திரும்பிவிட்டிருந்தான்.

அவர்களுக்கு எதுவுமே தெரியாது.

மதியச் சாப்பாட்டுக்காக மேசையில் அவனும் வீட்டுக்காரர்களும், அமர்ந்தார்கள்; கூடவே அவனது நண்பனொருவனும்.

அம்மா சாப்பாடு பரிமாறும்போது, முட்டை பொரித்துத் தருமாறு அவன் கேட்டான்.

ஒன்றுமே பேசாமல்போன அம்மா முட்டையை அரை அவியலாக எடுத்து வந்தாள்.

"முட்டையைப் பொரித்துத் தரச்சொல்லியல்லோ அம்மா நான் கேட்டனான்... நீங்கள் அவிச்சுக்கொண்டு வாறியள்..."

அந்த அப்பாவி அம்மா சொன்னாள் -

"பொரிச்சா சத்தெல்லாம் போயிடுமடா தம்பி; அதுதான் அவிச்சு வந்தனான். சத்து இருக்கும்; உடம்பில சேரும்... சாப்பிடு..."

இதற்கு இரண்டொரு நாட்களின் பின், இந்தத் தீவையே உலுக்கிய அந்த வீரன் -அருகில் இருந்த நண்பனைப் பார்த்து உதிர்த்த நமட்டுச் சிரிப்பின் காத்திரமான அர்த்தம், மற்றவர்களுக்கும் புரிந்திருக்க நியாயமில்லைத்தான்!

## பணம்

அடுத்த நேரச் சாப்பாட்டுக்கே வழியற்ற ஒரு ஓலைக் குடிசையிலிருந்து இயக்கத்துக்கு வந்தவன் அவன்.

இப்போது ஒரு கரும்புலி நடவடிக்கைக் காகப் போயிருந்தான்.

எதிரியின் 'இதயத்தில்'தான் அவனுடைய இலக்கு.

எனவே, அந்தச் சூழலோடு ஒன்றிப் போய், அதற்கே உரியவனாகத் தன்னை அவன் இனங்காட்டிக்கொள்ள வேண்டியிருந்தது.

அத்தகைய ஒரு தோற்றப்பாட்டைக் கொடுத்தாலேயே தனது நோக்கத்தை அவன் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

அந்தத் தள நிலைமையோடு அவன் சந்தேகமறச் சங்கமிக்க, பணத்தைப் புரளவிட வேண்டியிருந்தது.

அந்த ஏழை வீரனது கையால் செலவு செய்யப்பட்ட பணத்தின் தொகை பெரியது;

அதன் நோக்கத்தைப் போலவே.



ஒவ்வொரு சதத்துக்கும் கணக்குக் காட்டவேண்டிய இயக்கத்தில், இலட்சக்கணக்கான ரூபாய்களுக்குக் கணக்கற்ற செலவு அது.

அந்தப் பணி அப்படியானது.

அதனால், காட்டப்படாத கணக்குகள் பற்றிக் கேட்கப்படாமலேயே, கேட்கப்படுகின்ற பணம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

வந்துபோகும் நேரங்களில், 'அங்க கொடுத்தன்; இங்க கொடுத்தன்' என்று, அவன் வாயால் சொல்வது மட்டுமே - அந்த இலட்சக்கணக்கான ரூபாய்களுக்குக் கணக்கு.

'நம்பிக்கை' மட்டுமே நம்பிக்கையாயிருந்தது.

எல்லா ஏற்பாடுகளும் நிறைவாகிய பின், தாயகத்திலிருந்து அவன் இறுதிப் பயணம் புறப்படத் தயாராகிவிட்ட ஒரு அதிகாலையில் -

அம்மாவிடம் போனான்.

'சொறிந்து'கொண்டிருக்கும் திண்ணையில் ஓரமாக உட்கார்ந்திருந்தாள் அம்மா.

சோர்ந்து போயிருந்தாள்; காலைத் தேனீருக்கு என்ன செய்யலாம் என்றுதான் யோசித்துக்கொண்டு இருந்திருப்பாளாக்கும்.

பிள்ளையைக் கண்டதும் பூரித்துப் போனாள். துடித்துப் பதைத்து எழுந்தோடி வந்து, இரு கைகளாலும் கன்னங்களைத் தடவி அழைத்துப் போனாள்.

எல்லாப் பக்கத்தாலும் பிய்ந்து போயிருந்த ஒரு பனையோலைப் பாயில், நித்திரை கலையாமல் சுருண்டு கிடந்தாள் ஆசைத் தங்கச்சி. பார்க்கவே தெரிந்தது -நிச்சயமாக இரவு அவள் சாப்பிடவேயில்லை.

அருகிலே போய் இருந்து தலையை வருடிவிட்டபோது, நெஞ்சுக்குள் என்னவோ செய்தது.

'எப்போதாவது வருகிற பிள்ளை; எவ்வளவு காலத்திற்குப் பிறகு இப்போது வந்திருக்கிறான்... ஏதாவது செய்து குடுப்பமென்றால்கூட...' அம்மா உள்ளுக்குள் குமுறியிருப்பாள்.

கடைசியாக அம்மாவின் கையால் ஒரு சாப்பாடு. அதற்காகத்தானே பிள்ளையும் பாசத்தோடு ஓடி வந்தான். ஆனால், வீட்டிலே எதுவும் இருக்காது என்பதும் அவனுக்குத் தெரியாதா என்ன?

என்றுமில்லாதவாறு - சட்டைப் பைக்குள்ளிருந்து கொஞ்சம் காசு எடுத்துக் கொடுத்தான். "நல்ல சாப்பாடாகச் செய்யணை... சாப்பிடுவம்..."

அம்மாவுக்கு விசித்திரமாக இருந்தது. ஏனென்றால் -அதற்கு முன் ஒருபோதுமே மகன் அப்படித் தந்ததில்லை.

சமைத்து முடித்து, அம்மா ஊட்டிவிடச் சாப்பிட்டு, அவன் விடைபெறத் தயாரானான்.

கடைசி விடைபெறல்; அம்மாவுக்கு அவன் தந்த முத்தமும் அப்படித்தான்.

வறுமை உந்தித் தள்ளியபோதும் - கேட்கக்கூடாது என்பதை உள்ளுணர்வு சொல்லியது... என்றாலும்... தயங்கித் தயங்கி வந்த அந்த ஏழை அம்மா கேட்டாள்.

"இன்னுமொரு ஐநூறு ரூபா தந்திட்டுப் போமோனை..."

அம்மாவை நினைத்தபோது, விழியோரம் கசிந்த நீரை அவன் மறைத்திருக்கக்கூடும்.

பரிவோடு கேட்ட அம்மாவுக்கு அவன் சொன்னான் -

"இது நாட்டின்ர காசம்மா... தரமாட்டன்... கோவாதயணை".

சொல்லிவிட்டு அவன் போனான்; போய்விட்டான்.

அம்மாவுக்கு எதுவுமே தெரியாது... பாவம்!

## பற்று

அது ஒரு துரோகின் குடும்பம்.

முக்கிய கும்பலொன்றைச் சேர்ந்தவன் அந்தத் துரோகி.

இந்தியர்களின் காலத்தில் பாரதூரமான துரோக வேலைகளை அவன் செய்துகொண்டிருந்தான்.

அவனது இந்தத் துரோக வேலைக்கு, தெரிந்தோ தெரியாமலோ அவனது குடும்பமும் உடந்தையாய் இருந்தது.

தங்களது வீட்டில், 'விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான' ஆயுதங்கள் புதைத்து வைக்கப்படுவதைத் தடுக்காத அளவுக்கு அது இருந்தது.

இந்தியர்கள் வெளியேறிய பின் -

அதே ஊரைச் சேர்ந்த எங்கள் வீரனொருவன் தந்த ஆதாரபூர்வமான தகவல்களின்படி -அந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டதுடன் -அந்தக் குடும்பமும் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டது.

தேசத்தின் நன்மை கருதி மட்டும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அது.

அவர்கள் எதிரியின் 'பிரதான நகரிற்குப்' போய்விட்டார்கள்; குடும்பமாகவே.

தங்களைப்பற்றிய தகவல்களை எங்களுக்குத் தந்தது யாரென்பது, அவர்கள் எல்லோருக்கும் நன்றாகவே தெரியும்.

* * *

அந்த எங்கள் வீரன் பின்பொரு நாளில், கரும்புலி நடவடிக்கை ஒன்றுக்குத் தெரிவாகினான்.

தெரிவாகியவன், 'அங்கு' அனுப்பி வைக்கப்பட்டான்.

போய்ச்சேர்ந்தவன், அதற்குரிய அலுவல்களை அங்கு கவனித்துக்கொண்டிருந்தான்.

ஏதோ அலுவலாக அவன் வீதியில் போய்க்கொண்டிருந்த ஒரு காலை -

நூறு, இருநூறு என்று அகப்பட்ட தமிழர்களையெல்லாம் அள்ளிக்கொண்டுபோகும் 'படலத்தில்' எதிர்பாராதவிதமாகச் சிக்குண்டு, அவனும் உள்ளே போகவேண்டிய துரதிர்ஸ்டம் நிகழ்ந்துவிட்டது.



மனதுக்குள் ஆயிரம் போராட்டங்களோடு கம்பிக்கூட்டுக்குள் அவன் நின்றிருந்த வேளை -

அந்த 'நிலையத்துக்குள்' நுழைந்தான் அவன்!

தலைக்குள் மின்னல் வெடித்த அதிர்ச்சி; அது வெளியேற்றப்பட்ட அந்தத் துரோகியின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன்!

மெல்ல நழுவி ஆட்களுக்குள் மறைந்துவிட இவன் முனைவதற்கிடையில் - அவன் ஏதேச்சையாகக் கண்டுவிட்டான்; இருவரது பார்வைகளும் பயங்கரமாக மோதிக்கொண்டன!

இவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை; அந்த நொடியில் -'எல்லாமே முடிந்துவிட்டது' என்றொரு விரக்தி உணர்வுதான் ஏற்பட்டது.

அவன் தன்னை நினைக்கவில்லை; தாயகத்தை நினைத்தான். அதற்கு மேலாகத் தான் செய்யவந்த காரியத்தை நினைத்தான். அதற்கும் மேலாக தன்னை 'அனுப்பி வைத்தவர்கள்' தன்னில் வைத்திருந்த நம்பிக்கையை நினைத்தான்...

அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை; அடுத்த கணங்களில் என்ன நடக்கப் போகின்றது என்பதை நினைக்கையில்...

* * *

யாழ்ப்பாணத்திலிருந்த, அந்த எங்கள் வீரனது வீட்டுக்கு ஒரு கடிதம் வந்தது -

"அவன் இங்க பிடிபட்டு உள்ளுக்க நிண்டவன். நல்லகாலம், நான் கண்டபடியால் அங்க கதைச்சு வெளியில எடுத்துவிட்டனான். அவன் இங்க வாய்பாத்துக்கொண்டு திரிஞ்சு திரும்பவும் மாட்டுப்படப்போறான். அவனைக் கவனமாக நிக்கச்சொல்லிவிடுங்கோ".

* * *

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எழுத முடியாத காவியங்கள்...

கரும்புலித் தாக்குதலை நிகழ்த்துவதற்கு முன்னர், கூடவந்திருந்த பெரியவர் ஒருவருக்கு அவன் நம்பிக்கையோடு சொன்னானாம் -

"எங்கட போராட்டம், தமிழனாகப் பிறந்த ஒவ்வொருத்தன்ர மனச்சாட்சியையும் உலுப்பிவிட்டிருக்குதய்யா; இந்தப் போராட்டம் நிச்சயமாக வெல்லும்!"

## தேவை



இங்கு அவனுக்கு தாக்குதலுக்கான பயிற்சி வழங்கப்பட்டுத் தயார்படுத்தப்பட்டுக்கொண்டிருந்த அதே நேரத்தில் -

அங்கு இன்னொரு வீரன் தாக்குதலுக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தான்.

இவன்தான் தாக்குதலுக்கான கரும்புலிவீரன்; ஆனால், அவன்தான் அந்தத் தாக்குதல் 'தளத்தின்' அதிபதி.

பயிற்சிகள் முடிந்து இவன் புறப்படத் தயாரான நேரத்தில், அவனை வழியனுப்பி வைக்கின்றபோது, அனுப்பிவைத்தவர் ஒருவிடயத்தை அவனுக்குத் தெளிவுபடுத்தினார்.

"ஏற்கனவே அங்கு ஒருவர் நிற்கிறார்; அவர் தாக்குதலுக்கான ஒழுங்குகளைச் செய்துகொண்டிருக்கிறார். அதாவது, அவர்தான் இந்த நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருக்கிறார். உங்களுக்கு எல்லாவற்றையும் காட்டி -விளக்கி - அவர் சொல்லித்தருவார். அத்தோடு - குறிப்பிட்ட இடம்வரையும் வாகனத்தை ஓட்டிவந்தும் தருவார்...

... இதில் நீங்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விடயம் என்னவென்றால்...

... தாக்குதலைச் செய்யப்போகிறது நீங்கள்தான்; உங்களுக்குச் செய்ய இயலாமல் போனால், அல்லது செய்வது சரிவராமல் போனால், அவர்தான் இதைச் செய்வார்...

ஆனால் - இந்த வேலையை இனிமேலும் நாங்கள் தொடர்ந்து செய்யவேணும்...".

அவர் சொல்லவந்த விடயத்தை, அவன் பரிபூரணமாக விளங்கிக்கொண்டான்.

* * *

அந்தப் பெரிய நகரத்துத் தெருக்களின் மிகுதியான நெரிசலினால், தாக்குதல் சறுக்கிக்கொண்டேபோனது.

அரக்கமுடியாத வாகனப் போக்குவரத்தும், அதிகூடிய சனசந்தடியும் தொடர்ந்து இடைஞ்சலைத் தந்துகொண்டேயிருந்தன.

இலக்கு கண்களில் படும்போது, அவன் இறங்கிக்கொண்டு இவனை அனுப்பி வைப்பான். வேகமாக நகர்ந்து இலக்கை அண்மிக்க முனையும்போது -

ஏதோ ஒரு தடைவரும்.

இப்படியாகத் தாக்குதல் இழுபட்டுக்கொண்டே போனது.

நெருக்கடியான போக்குவரத்துப் பாதைகளில் வாகனம் ஓட்டிய அனுபவம் பெற்றிராததால், அந்த வீரனும்கூட வெகுவாகச் சிரமப்பட்டான்.

எத்தனையோ நாட்கள் போய்ப்போய்த் திரும்பி வரவேண்டியிருந்தது.

எனவே, இலக்கு நெருங்கிவரும் ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைக்குமானால், திரும்பப் பெறமுடியாத பெறுமதி உடையது அது; உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டுவிட வேண்டும்.

இவ்விதமாக உருவாகியிருந்த ஒரு சூழ்நிலையில் -

அது எதிர்பாராத ஒரு சந்திப்பு -

தேடித்திரிந்த இலக்கு மிக வசதியாக... மிகமிக வசதியாக எதிர்ப்பட்டது.

ஆனால் வாகனத்திற்குள் இருவருமே இருந்தார்கள். தளபதி ஓடிக்கொண்டிருந்தான்; அருகு இருக்கையில் இவன். இவனிடம்தான் 'சுவிச்'.

அவன் இறங்கிக்கொண்டு இவனை அனுப்புவதற்கெல்லாம் அவகாசமே கிடையாது; தாக்கு தூரத்திற்குள் இலக்கு நெருங்கிவிட்டது.

மிக அரிய சந்தர்ப்பம்; தவறவிடவே முடியாது; தவறவிடக்கூடாது.

"அமத்தடா...!" - தளபதி கத்தினான்.

ஆனால், அவன் அமத்தவில்லை!

இலக்கு அருகால் கழிந்துபோய்க்கொண்டிருந்தது.

"அமத்தனடா..." - தளபதி திரும்பவும் கத்தினான்; கட்டளையிட்டான்!

ஆனால் அவன் அமத்தவில்லை!

இலக்கு, கடந்து - நகர்ந்து - தூர விலகிப்போய்விட்டது.

அவன் அமத்தவேயில்லை.

ஆத்திரமும் கோபமும் பொங்க எரிச்சலோடு தளபதி கேட்டான், "ஏனடா அமத்தேல்லை...? ...பயந்துபோனியோ?"

அந்த வீரன் அமைதியாகப் பதிலளித்தான்.

"இந்த வேலை தொடர்ந்தும் நடக்கவேணுமென்றுதான்!"

* * *

இதற்குப் பின்பொரு நாளில், அதே கரும்புலிவீரன், அதே இலக்கை, அதே திட்டத்தின்படி தாக்கியழித்தான்.

## தாகம்



அவனுடைய வைகறைப் பொழுதுகள் மகிழ்ச்சியாகத்தான் விடியும்.

துடிதுடிப்போடு அவன் நித்திரை விட்டெழுவான்.

முகத்தில் இனம் புரியாத ஒரு பூரிப்புப் படர்ந்திருக்கும்.

விரைந்து விரைந்து பணிகளை முடிப்பான்.

அந்த நாளிலும்கூட, குளியலறையில் அரைமணிநேரமாக இருந்து செருப்புத் தேய்த்துக் கழுவுவான்.

குளித்து முழுகிப் புதுப்பொலிவோடு வெளிவருவான்.

உடைகளை அணிந்து நின்று, கண்ணாடிக்கு முன்னால் அழகு பார்ப்பான்.

ஆகக்கூடுதலான நேரத்தை அதில் செலவழிப்பான்.

ஒரு மன்மதன்போலக் காட்சி தருவான்.

நல்ல சாப்பாடாக எடுத்து, நிறையச் சாப்பிடுவான்; சந்தோசமாகச் சாப்பிடுவான்.

உற்சாகமாக வந்து வண்டி எடுப்பான். கூடவே வந்திருந்த ஐயாவிடம் உவகையோடு சொல்லி விடைபெற்று -புறப்பட்டுப் போவான்.

"போட்டு வாறனய்யா...!"

பெரியவருக்கு ஆச்சரியமாயிருக்கும்.

பெருந்துயரோடும் - பிரமிப்போடும் அவன் போவதையே பார்த்துக்கொண்டிருப்பார்; அவன் கண்களிலிருந்து மறையும்வரை.

அதன் பிறகு அவர் காத்துக்கொண்டிருப்பார் -

அது அவனுக்காக அல்ல.

ஆனால், போன காரியம் பிழைத்து அவன் திரும்பி வருவான்; வரும்போது -

இங்கிருந்து புறப்பட்டுப் போகையில் இருந்த உற்சாகம் மறைந்து, முகம் பேயறைந்தது போலிருக்கும்.

அந்தப் பொலிவு செத்துப்போயிருக்கும்.

தாங்க முடியாத சோகம் அவனில மிகையாகத் தெரியும்.

தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்து குந்துவான்.

விசர் பிடித்தவன்போல எழுந்து உடைகளையாமலே போய்க் கட்டிலில் விழுவான்.
இன்னதென்று சொல்லமுடியாத ஒரு ஆற்றாமை உணர்வுக்குள், அவன் சிக்குண்டு தவிப்பது தெரியும்.

பெரியவர் அருகிலிருந்து தடவிக்கொடுத்து ஆறுதல் சொல்லுவார்...; எதற்கு ஆறுதல்...? விசித்திரமான வாழ்க்கை தான்!

மதியம் சாப்பிடான். தேநீர்கூட அருந்தான். இரவும் சாப்பிடாமலே கிடப்பான். அறையைவிட்டு வெளியிலேயே வரான். கண்களைக் கூரைக்குள் செருகிவிட்டு, வெறித்த பார்வையோடு படுத்திருப்பான்.

அந்த நேரங்களிலெல்லாம், 'தமிழீழத்தின் கரைகளைத் தழுவும் கடலலைகள்' போலத் தாயக நினைவுகள் அவனைத் தழுவியிருக்கும்.

புரண்டு புரண்டு படுப்பான்; அவனது மன உளைச்சல் அதில் தெரியும். மெல்ல இருள் கவியும்... பாவம் அப்படியே தூங்கிப்போவான்.

'என்ன மனிதர்கள் இவர்கள்...! எப்படி இவர்களால்...?...' -ஐயாவுக்கு இது பெரிய புதிர்; நம்பற்கரிய அதிசயம்.

மீண்டும் வழமைபோல -
அதே உற்சாகமான விடியல்.
ஆரவாரமான புறப்பாடு - பின்னர்
மனம் இடிந்துபோன திரும்புகை
கட்டிலில் துவண்டு தலையணையில் கண்ணீர்,
மீண்டும் மறுநாள்...

இப்படித்தான் எத்தனையோ நாட்கள்; சாவும் -பகைவனும் அவனிடம் இருந்து தப்பித்துப்போக, அவன் ஏமாற்றத்தோடு திரும்பிக்கொண்டிருந்தான்.

ஆனால், அந்தக் கடைசிநாளில், அவன் மிகஉறுதியாகச் சொல்லிவிட்டுத்தான் போனான் -

"நான் போறனய்யா;... இண்டைக்குப் பிழைக்கவேமாட்டுது..."

அவன் மறையும்வரை ஐயா பார்த்துக்கொண்டே நின்றார்.

அவன் வரவில்லை; அந்தச் செய்தி வந்தது!

## பாடல்



இயந்திரத்தின் மெல்லிய ஒலியைத் தவிர, மற்றும்படி நிசப்தமே வாகனத்தை நிறைத்திருந்தது.

'நீண்ட பயணம்' போகப் புறப்பட்டுவிட்ட ஒரு கரும்புலியை வழியனுப்பச் சென்றுகொண்டிருந்த ஒரு பயணம்.

எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்; ஆனால் சிந்தனைகள் ஓடிக்கொண்டிருந்தன.

அந்தக் கரும்புலியின் மனத்திரையில், கொடூரமான அந்தக் காலம் -

தெருத்தெருவாகப் பிணங்கள்; யுத்த டாங்கிகளின் இரும்புச் சங்கிலிகளால் நெரிக்கப்பட்ட உடலங்கள்; கற்புழிக்கப்பட்ட பெண்கள்; சீர்குலைந்து போயிருந்த தமிழீழம்... எல்லாமே வந்துபோயின.

அவற்றை நினைக்க நினைக்க தனக்குரிய அந்தத் தாக்குதல் திட்டம் மனதுக்குள் விரிந்தது; செயல்முறையில் சொல்லித் தரப்பட்டதையே, அந்தக் கரும்புலி திரும்பத் திரும்ப மனப்பாடம் செய்துகொண்டிருந்தது.

எந்தப் பிசகுமில்லாமல் அதனைச் செய்து முடிக்கவேண்டும் என்ற வேட்கையே அந்தக் கரும்புலியை ஆட்கொண்டது; அதனைச் சுற்றியே அந்தக் கரும்புலியினது நினைவுகள் வலம் வந்துகொண்டிருந்தன.

அதேபோலவே -

துல்லியமான வெற்றியாக அது நிறைவேற வேண்டுமென எண்ணங்கள் ஓட - அந்தக் கரும்புலியை வழியனுப்பச் சென்றுகொண்டிருந்த போராளியும் வாகனத்தை ஓட்டிக்கொண்டேயிருந்தார்.

சிந்தனை வயப்பட்டிருந்த நீண்ட அமைதியினால், அருகில் யாருமற்றது போன்ற தனிமையுணர்வு எழ -தானறியாமலேயே -ஒரு பாடலை அந்தப் போராளி உரத்துப் பாடிவிட்டார்.

பின்னாலிருந்து சிரிப்பொலி பரவி வாகனத்தை நிரப்பியபோது, சுதாகரித்துக்கொண்டு அவர் நிறுத்திக்கொண்ட அந்தப் பாடல் -

"பிரபாகரன் நினைத்தது நடக்கும் - அவன் புலிப்படை நெருப்பாற்றை நீந்திக் கடக்கும்...".

அந்த வாகனப் பயணம் முடிந்து, 'எல்லோரும் வழியனுப்பிவைக்க அடுத்த பயணம் தொடர்ந்து, போய்... அன்றொரு நாளில் அந்தக் கரும்புலி போயேவிட்டது.

எங்கள் மண்ணுக்கு 'இருண்ட நாட்க

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எழுத முடியாத காவியங்கள்...

ளை'த் தந்த போராட்டத்தின் பெரிய தொரு தடைக்கல்லை அந்தக் கரும்புலி கட்டி அணைத்துத் தகர்த்தபோது -

எங்கள் போராட்டத்தின் 'வரலாற்றுப் பெருமை' ஒன்றுக்கு அது உரித்துடைய தாகியது.

அடுத்து வந்த நாட்களில் -

அந்த நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்த 'அந்த ஒரு' வீரன், அங்கிருந்த படி செய்தி அனுப்பினான் -

கடைசி நாள்வரை அதே பாடல்தா னாம், அந்தக் கரும்புலியின் வாயில் -

"பிரபாகரன் நினைத்தது நடக்கும் - அவன் புலிப்படை நெருப்பாற்றை நீந்திக் கடக்கும்".

## மானம்



தாக்குதலுக்கெனத் தேர்ந்தெடுக்கப் பட்டு ஒருவன் நிச்சயிக்கப்பட்டான்.

வேவு அறிக்கைகளின் அடிப்படையில் - தாக்குதலுக்கு அவன் தயார்படுத்தப்பட் டான்.

விளக்க வகுப்புக்கள் நடந்தன.

செயன்முறைப் பயிற்சிகள் வழங்கப்பட் டன.

சொல்லிக்கொடுத்தவற்றை அவன் சிறந் தமுறையில் பிடித்துக்கொண்டான்.

பல்வேறு தேர்வுகளிலும் தேறிய அவ னுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அவன் தாக்குதல் 'தளத்துக்கு' அனுப்பப் பட்டான்.

அங்கும் அவனுக்கு தாக்குதல் கேந்திரம் நேரடியாகக் காட்டி விளங்கப்படுத்தப்பட் டது -

அது பகைவனின் 'மூளை'.

தமிழர்களுக்கு எதிரான போரின் 'மை யம்' அதுதான்.

எனவே, அந்தத் தாக்குதல் முக்கியத் துவம் மிக்கது.

ஆனால், எல்லா ஏற்பாடுகளும் நிறை வாகியிருந்தபோது -கடைசி நேரத்தில் - தாக்குதலுக்கு என்று சென்றவன் தளம் பிவிட்டான்; நம்பிக்கையோடு தயார்ப டுத்தப்பட்டவன் பிசகிவிட்டான்.

எதிரி உசாரடைந்துவிடுவானானால், எல்லாமே பாழ்.

எனவே திட்டத்தைத் தாமதப்படுத்த முடியாதது, இன்றியமையாத தேவை யாக எழுந்தது.

அப்படியானால் ஆள்...?

திரும்பிப் போய், புதிதாக ஒருவனைத் தயார்பண்ணி, கூட்டிவந்து... அது சாத் தியமே இல்லாத சமாச்சாரம்.

அந்தத் தர்மசங்கடமான நிலையில் -

வேறு ஒரு வேலையின்பொருட்டு, அங்கு போய் நின்ற இன்னொரு வீரன் அத னைத் தான் செய்வதாக முன்வந்தான்.

உடனடியாகத் திட்டம் விளங்கப்படுத்தப் பட்டு, அவன் புறப்படத் தயாரானான் -

புறப்படும்போது - வாகனத்தில் ஏறிக்கொ ண்டு -அந்தத் 'தளத்தின்' அதிபதியிடம் உணர்ச்சிமயமான முகத்தோடு சொல் லிவிட்டுப் போனான் -

"தமிழங்களாகப் பிறந்தவங்களுக்கு கொஞ்சமெண்டாலும் ரோசம் இருக்கோ ணும்...!".

"வரையப்படாத சித்திரங்களாகவும், எழுதப்படாத சரித்திரங்களாகவும் இந்தக் கரும்புலி வீரர்கள் பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அநாமதேயமாக உறங்குகிற போதும் அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக, என்றும் அழியாப் புகழ் பெற்று வாழும்.

ஆளுக்கும் பெயருக்கும் அப்பால் — முகத்தை மறைத்து, புகழை வெறுத்து — எமது வாழ்வுக்காகத் தமது வாழ்வைத் துறந்த இந்த வரலாற்று நாயகர்களுக்கு, நான் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன்."

-தலைவர்

## ஆசை

எல்லாம் ஏற்பாடாகிவிட்டது.

அவன் புறப்பட்டுவிட்டான்.

இதற்கு முன்னரும் பல தடவை போய்ப் போய் வந்தவன்தான். ஆனால் -இனி வரமாட்டான்.

வழியனுப்பிவைக்க வந்த தோழன், அவனது தோள்களை அணைத்துக் கூட்டி வந்துகொண்டிருந்தான்.

அழைத்துச்செல்லப் போகின்றவரும், அனுப்பிவைக்க வந்த தோழர்களும் அருகிலே வந்துகொண்டிருந்தார்கள்.

இருந்தாற்போல் - அவனது நடையின் வேகம் சற்றுக் குறைந்தது.

ஏனோ தெரியவில்லை - மெல்ல மெல்ல முகம் இறுகிக்கொண்டேபோனது.

கண்களில் நீர் திரையிட அவன் தயங் கினான்.

அவன் பின்னாலே திரும்பிப் பார்த்தான்.

அருகில் நின்ற தோழர்களைக் கடந்து வெகுதொலைவைப் பார்த்தான்.

விழிகளைப் பரப்பி, ஏக்கத்தோடு பார்த் தான் -திரும்பித் திரும்பிப் பார்த்தான்.



ஏன் பார்க்கிறான்...? எதைப் பார்க்கி றான்...? எங்களுக்குப் புரியவில்லை. ஆனால், ஏதோ ஒரு மாற்றம் அவனில் தெரிந்தது.

'எல்லாவற்றுக்கும் தயாராகி சந்தோச மாக வந்தவன், ஏன் திடீரென இப்படி ஆகிப்போனான்...?'

இவன் நினைக்கும்போதே - இவனிட மிருந்து மெல்ல விலகிக்கொண்டு -

அருகிலிருந்த காட்டுத் துண்டுக்குள் அவன் போனான்; போனவன் திரும்பி வந்தான் -

ஒரு சோர்வான நடை; நடை மட்டும் தான்.

தனது உடலில் படிந்திருந்த மண் புழு தியைத் தட்டிக்கொண்டு வந்தான்; தனது உதடுகளிலிருந்த புழுதியையும் -

தாயகத்துக்கு கடைசி முத்தம் கொடுத்து வணங்கிவிட்டு, அவன் வந்துகொண்டி ருந்தான்.

கண்கள் சிவந்து கலங்கிப்போயிருந்தன; ஆனால், முகத்தில் தெளிவு தெரிந்தது; பார்வையில் உறுதி தெரிந்தது.

தோழர்களுக்கு மெய் சிலிர்த்தது.

இப்போது அவனைப் புரிந்துகொள்ள முடிந்ததனால், எதுவும் அவனிடம் கேட் கவில்லை.

எல்லோரிடமும் விடைபெற்று - திரும்பிப் பார்த்துக் கையசைத்து -அவன் நடந்து கொண்டிருந்தான்.

நடந்துகொண்டிருந்தவன், தோழர்க ளைவிட்டு விலகி, சற்று எட்டத்திற்கும் போனதற்குப் பிறகு -

சட்டைப் பைக்குள்ளிருந்து எதையோ கிள்ளி எடுத்து -கைகளை விரித்து -கூட் டிச் சென்றுகொண்டிருந்தவரிடம் காட் டினானாம்....!

அவர் விக்கித்துப் போனார்.

"இது 'எங்கட மண்'... இனிமே ஒரு நாளுமே எனக்கு இதைப் பார்க்கக் கிடைக்காது... அதுதான்...".

# தீர்வு...

கல்யாணத்துக்கு நாள் குறிக்கிற நேரத்தில, புதிதாய் பிரச்சனைகள் ஏற்பட்டது மனதுக்குக் கவலையாய் இருந்தது. வவுனியாவுக்குப் போன மலர்விழியின் தமயனை ஒவ்வொரு நாளும் அவன் எதிர்பார்த்துக்கொண் டிருந்தான்.

மறுபடியும் ஒரு மாலை நேரத்தில் புறோக்கர் வந்தார். "கஸ்டத்துக்கு மேல அதுகளுக்குக் கஸ்டம் தான்; தகப்பனையும், லொறியையும் வவு னியாவில ஆமி மறிச்சுப்போட்டு தாம். லொறிக்கு என்ன நடந்ததோ தெரியேலை. தடைசெய்த சாமான் கொண்டுவந்தது எண்டு சொல்லி, நாலு லட்சம் கட்டினா, விடுறம் எண்டு சொல்லிப் போட்டாங்க ளாம்... பெடியன் உடன வந்து, இங்கே உள்ள காசுகளைச் சேர்த்து, காணாததுக்கு காணி விக்க ஒழுங்கு செய்திட்டு, காசுகள் மாறிக்கொண்டு போகுது. அவைக்கு ஒரே ஒரு ஆறுதல், நீங்கள் சீதனம் கேட் கேலை எண்டதுதான்; அதாலதான் இருக்கிறதுகளை வித்துச் சுட்டு, தகப்பனைக் கூட்டிவர பெடியன் போயிருக்குது".

புறோக்கர் போனதும் அம்மா முகம் இறுகிப்போக நின்றாள்.

"ஏதோ பொருள் இழப்போட முடிஞ் சுதே..." அப்பா பெருமூச்சுடன் சொன்னார்.
அம்மா முகத்தில் தீவிரத்துடன் அப் பாவின் பக்கம் திரும்பினாள்,
"என்னப்பா... இந்த இடம் வேண் டாம்; நேசனுக்கு வேற இடம் பார்ப் பம்".
சிவநேசனுக்கு பகீரென்றது.
"ஏனம்மா..."
பதட்டத்துடன் கேட்டான்.
"அவையிட்ட இப்ப ஒண்டுக்கும் வழியில்லை; என்னெண்டு செய்யி றது".

"நாங்கள் சீதனம் ஒண்டும் கேட் கேலைத்தானே பிறகு என்ன", அவன் அவசரமாய்ச் சொன்னான்.
அம்மா ஒருவினாடி பேசாமல் இருந்து விட்டு, மெல்லிய குரலில் சொன்னாள்,
"நாங்கள் சீதனம் கேட்கலைத்தான்; அவைக்கு ஒரு பொம்பிளைப்பிள் ளைதானே; நாங்கள் கேட்காவிட் டாலும் எல்லாம் அந்தப் பிள்ளைக் குக் குடுப்பினம்தானே எண்டு நினைச்சன். சீதனம் எண்டு கேட்டு வாங்காட்டியும் வசதியான இடத்தில செய்தா, தானா சீதனம் வரும். இப்ப ஒண்டுமில்லை; ஒண்டும் இல் லாதவையிட்ட போக எங்களுக்கு விசரே; ஏதும் சாட்டுச்சொல்லி, இந்த இடத்தை நிப்பாட்டுவம்". சிவநேசன் திகைப்போடும் கோபத் தோடும் அம்மாவைப் பார்த்தான்.

"என்னப்பா... இந்த அம்மாவின்ர கதை...".

"நீ என்ன கதை கதைக்கிறாய். அது சரியில்லை. பேச்சுமாற ஏலுமே..." என்றார் அப்பா.

"நீங்கள் பேசாமல் இருங்கோ; அவன் அந்தக் குடும்பத்துக்குள்ளே போய் கஸ்ரப்பட நான் விடமாட் டன்."

"சேச்சே... நியாயமில்லாமல் கதைக்காதை. பொம்பிளைக்கு பொம்பிளைதான் எதிரி. நீ யோசிச் சுத்தான் கதைக்கிறியே..."

அம்மா அப்பாவைக் கொஞ்சம் நிமிர்ந்து பார்த்து முறைத்தாள்.

"நான் யோசிச்சுத்தான் கதைக்கி றன். நீங்கள் பேசாமல் இருங்கோ. இந்த இடம் வேண்டாம். வேற இடம் பார்ப்பம்.
சிவநேசனுக்கு சுருசுருவென்று ஆத் திரம் வந்தது. ஒரு வினாடியில் தீர் மானித்துக்கொண்டான்.

"அம்மா உங்கட எண்ணத்துக்கு கடைசிவரைக்கும் சம்மதிக்கமாட் டன். நான் மலர்விழியைத் தான் செய்வன். நீங்கள் சம்மதிச்சா சந் தோசம்; இல்லையெண்டால், மீறிப் போய்ச்செய்வன். உங்கட மரியா தையை விரும்பினா, காப்பாற்றிக் கொள்ளுங்கோ". அவன் அழுத்த மான குரலில் சொல்லிவிட்டு, கதி ரையில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்து, தெருவைப் பார்த்தான். ■

# அரசியல் துறையும் மக்களும் சேர்ந்து வீதி திருத்தம்

மன்னார் மாவட்டம், பள்ளமடு வட்டத் தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட பெரு மழையினால் பெரிதும் பாதிப்படைந்தி ருந்த முதலியார் கமம் வீதி, அண்மை யில் பள்ளமடு வட்டப் பொறுப்பாளர் திரு. த. செந்தாளன் அவர்களின் தலைமையில் சிரமதானம் மூலம் திருத் தம் செய்யப்பட்டுள்ளது. இவ்வேலைக்கு இலுப்பைக்கடவை கிராம அலுவலக ரும், இலுப்பைக்கடவை அந்தோனியார் புரத்தைச் சேர்ந்த பொதுமக்களும் பங் குபற்றினார்கள். மிகப்பெரும் வேலையை அரசியல் துறையினரும், பொதுமக்களும் இணைந்து சிறப்பாகச் செய்து முடித்தி ருக்கின்றார்கள். இவ்வீதி, மக்கள் போக் குவரத்திற்கு மிகப்பயனுள்ள வகையில் அமைந்துள்ளது. ■

## திருத்தம்

22. 07. 1994 'களத்தில்' செய்தித்தாளில் வெளிவந்த, 'தெளிவூட்டத் தெருவீதி முழக்கமிடுவோம்' என்னும் கட்டுரை யில் இடம்பெற்ற, 'புதிய புலிகள் இயக் கம்' என்னும் சொற்றொடரை 'புதிய தமிழ்ப் புலிகள்' எனத் திருத்திக்கொள் ளுமாறும், 1978 முதல் தமிழீழ விடு தலைப் புலிகள் என்ற வரியை 1976 முதல் என திருத்திக்கொள்ளுமாறும் அன்பாக வேண்டுகின் றோம் . . (ஆ -ர்) ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "எமது மண்ணுக்கே திரும்ப வரவேண்டும்"

**"இங்கு அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள் பேராசிரியர் துரைராசாவின் ஆன்மா, சொர்க்கத்துக்குப் போக வேண்டும் என்று கடவுளை வேண்டினர்; ஆனால் நான் அப்படிக் கேட்கமாட்டேன். பேராசிரியர் துரைராசா எமது மண்ணுக்கே திரும்ப வரவேண்டும் என்றே கடவுளை வேண்டுகின்றேன்."**

அண்மையில் தமிழீழத்தின் வடமராட்சிப் பகுதியிலுள்ள வதிரியில், பேராசிரியர் துரைராசாவின் இல்லத்தில் நடந்த இறுதிச் சடங்கின்போது, அக்கிராமத்தின் வயோதிபர் ஒருவர் கூறிய அர்த்தம் பொதிந்த வரிகளே மேலுள்ளவையாகும்.

பேராசிரியரின் தன்னலமற்ற மக்கள் சேவைக்கு -நற்பண்புகள் நிறைந்த அப்பேராசானை மக்கள் மதித்து அன்பு காட்டிய முறைமைக்கு -இந்த முதியவரின் வார்த்தைகள் நல்ல உதாரணம். இது தனியொருவரின் கருத்தல்ல; தமிழினத்தின் ஒட்டுமொத்தக் குரலும் -உணர்வும் இதுதான். இந்த உணர்வை பேராசிரியரின் பிரவுபசார நிகழ்ச்சிகளின்போதும், பின்னர் அவரது மரணச் சடங்குகளின்போதும் பொதுமக்களும் -மாணவர்களும் -சக கல்விமான்களும் -அவருக்குச் செலுத்திய இறுதி மரியாதைகளிலும் கண்டு கொள்ள முடியும். இவை எல்லாவற்றிற்கும் மகுடம் சூடுவது போல, தமிழீழத் தேசியத் தலைவரின் பாராட்டையும், கௌரவ விருதையும் பேராசிரியர் பெற்றுக் கொண்டார். பிரிவுபசாரத்தின்போது பேராசிரியரின் பணியைப் பாராட்டி ஒரு செய்தியையும், பேராசிரியர் மறைந்தபோது அவருக்கு அஞ்சலி செய்த ஒரு இரங்கற் செய்தியையும் வெளியிட்டு, பேராசிரியருக்கு அதியுச்சக் கௌரவத்தைத் தலைவர் கொடுத்திருந்தார்.

ஈழத்தமிழினம் கல்விப் பாரம்பரியம் மிக்க ஒரு மக்கள் இனம் என்பதைப் பொதுவாக அனைவரும் ஏற்றுக்கொள்வர். உலகம் போற்றும் கல்விமான்கள் பலரை தமிழீழ அன்னை பெற்றெடுத்துள்ளாள் என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மை. ஆனால் இவர்களுள் எத்தனை பேர் பிறந்த மண்ணுக்குச் சேவை செய்தார்கள்? எத்தனை பேர் தமது இனத்தின் ஒட்டுமொத்தமான வாழ்வை உயர்த்திவிட தன்னலம் பாராது பாடுபட்டார்கள்? அறிவின் உச்சத்தில் பணிவைக் கடைப்பிடித்து மக்கள் சேவகனாக -மக்களில் ஒருவனாக -வாழ்ந்த மண்பற்றுள்ள பேராசான்கள் எத்தனை பேர்?

இந்த வினாக்களுக்கு விடையாக "பேராசிரியர் துரைராசா!" என்று எல்லோரும் ஒருமித்துக் கூறுவர். அந்தளவுக்குப் பேராசிரியரின் அறிவும் -பண்பும் -தனிப்பட்ட வாழ்வும் -மேன்மையுடையதாக அமைந்திருந்தன.

தமிழ் மக்களின் சொத்துக்களில் ஒன்றாகிய கல்விக்குப் பேராபத்து நேர்ந்த ஒரு நெருக்கடியான காலகட்டத்தில், யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியை ஏற்றுக்கொண்ட அவர், தமிழரின் உயர் கல்விக்குப் புத்துயிர் ஊட்டி -புது இரத்தம் பாய்ச்சியிருந்தார் என்பது வரலாற்று உண்மை.

அவர் வகித்த பதவிகளும் அவருக்கு வழங்கப்பட்ட ஊதியங்களும் சிங்கள அரசின் கைகளில் இருந்தபோதும், தமிழீழ தேசத்துக்கு -தமிழ் மக்களுக்கு -சேவை புரிவதற்கு அவற்றை ஒரு தடையாகச் சொல்லி இவர் தப்பிக்க முயன்றதில்லை. அவர் கலந்து கொண்ட எல்லாக் கூட்டங்களிலும் -எல்லாக் கலந்துரையாடல்களிலும் -எல்லா நிகழ்வுகளிலும் -தமிழினத்துக்கு எதிரான ஒடுக்குமுறை பற்றியும், தமிழீழத் தேசியம் பலம்பெற வேண்டிய அவசியம் பற்றியும், தெளிவாகவும் வெளிப்படையாகவும் தனது கருத்தை எடுத்துக் கூறுவார்.

நூல் வெளியீட்டு விழாவிலும் தமிழீழ தேசியம் பற்றிப் பேசுவார் -

கல்வி மற்றும் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட கூட்டங்களிலும் தமிழீழ தேசியம் பற்றிப் பேசுவார் -

சக கல்விமான்கள், மற்றும் வேற்று இன நண்பர்களுடன் கலந்துரையாடும்போதும் தமிழீழ தேசியத்தை வலியுறுத்திப் பேசுவார் -

ஏன்! அவருக்கு நடந்த பிரிவுபசாரக் கூட்டத்திலும் அதையே தான் பேசினார்.

தமிழீழத்தில் நடந்த கூட்டங்களில் மட்டுமல்ல, சிங்கள தேசத்தில் -கல்விமான்கள் மத்தியில் நடைபெற்ற கலந்துரையாடல்களிலும் அதையேதான் பேசினார்; வெளிநாடுகளில் நடந்த சந்திப்புக்களிலும் அதையேதான் வற்புறுத்தினார்.

தமிழரின் சுயநிர்ணய உரிமை பற்றியும், தமிழீழ தேசியத்தைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் பேசுவதற்கு ஒருபொழுதும் அவர் அஞ்சியதும் இல்லை; பின்வாங்கியதும் இல்லை.

அதேவேளை, உலகளாவிய ரீதியில் தத்தமது வாழ்க்கைச் சக்கரங்களைச் சுழற்றுவதற்குத் திண்டாடும் ஏழை மக்களையும் அவர் அடிக்கடி நினைவூட்டிப் பேசி, அந்த மக்களின்பால் தான் வைத்திருக்கும் கரிசனையையும் எடுத்துரைப்பார். ஐந்நூறு கோடி உலக சனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் பட்டினிக்கு முகம் கொடுத்து வாழப் போராடுகின்றனர் என்று எடுத்துக்கூறி, அந்தத் துர்ப்பாக்கிய நிலை எமது மக்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்று அறிவுரை கூறுவார்.

"அரசு திட்டமிட்டு தமிழரின் கல்வியை அழிக்க முனைகின்றது. ஆனால், தமிழினத்தின் கல்வியை அழியவிடாது பாதுகாப்பது எங்களின் கடமை." என்று, வதிரியில் நடந்த பிரவுபசார விழாவில் பேசிய பேராசிரியர் அவர்கள்.....

"எமது இயற்கை வளத்தையும் கல்வியால் பெறப்படும் மூலவளத்தையும் கொண்டு, எமது மனித வளத்தையும் சரியாக வளர்த்தெடுத்து -பயன்படுத்தி -எமது தேசத்தின் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும்." என்று தேசிய பிரக்ஞையுடன் பேசினார். அத்துடன் நின்றுவிட்டாரா....? இல்லை.

"கிராமங்கள் வளர்ந்தால்தான் நாட்டின் பொருளாதாரம் வளரும்" என்றார்.

"ஏழை எளிய மக்களின் வாழ்வு உயர்ந்தால்தான் கிராமம் வளரும்" என்றார்.

"இந்த ஏழை எளிய மக்களின் வாழ்வை வளம்படுத்த சனசமூக நிலையங்கள் பாடுபட வேண்டும்" என்றும் அறிவுரை கூறினார்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் நியாயம் பற்றி சிங்கள தேசத்தில் -சிங்கள புத்திஜீவிகள் மத்தியில் விவாதிக்கும் போது, எதிராளிகளின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டோ அல்லது தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட காரணங்களுக்காகவோ விட்டுக் கொடுத்ததோ அல்லது 'சளாப்பி'க் கதைத்ததோ இல்லை. இந்த நேர்மையை -தெளிவான அவரது அரசியல் நிலைப்பாட்டை -பேரினவாத உணர்வுடன் உள்ள சிங்கள இனத்தின் புத்திஜீவிகள் கூட மதித்தனர்.

**"எமது இனத்தின் விடுதலைக்காகத் தங்களது உயிரைத் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்கும் புலிகளுக்கு, நான் தலை சாய்த்து வணக்கம் செலுத்த விரும்புகின்றேன்".**

**- பேராசிரியர் துரைராசா**



பிரவுபசாரக் கூட்டம் ஒன்றில் பேசும்போது, பேராசிரியர் ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார்.

ஒருநாள் கத்தோலிக்க சிங்களவரான ஒரு கல்விமான் பேராசியரிடம் சொன்னாராம் -

"சிங்களவர் மத்தியில் கத்தோலிக்கரான நாங்கள் மிகச் சிறுபான்மையினராக இருக்கின்றோம். அதனால் பௌத்த சிங்களவருக்கு விட்டுக் கொடுத்து -சகிப்புத்தன்மையுடன் இரண்டாம் நிலைப் பிரசைகளாக, அமைதியாக வாழக்கற்றுக் கொண்டுள்ளோம். அது போல நீங்களும் (தமிழினம்) விட்டுக்கொடுத்து அமைதியாக வாழலாம்தானே" என்று.

இதற்கு பதில்கூறும்போது, சிங்களப் பேரினவாத அரசுகளின் தமிழின விரோத நடவடிக்கைகளை பேராசிரியர் விளக்கி விட்டு....

".... தமிழர் ஒரு தேசிய இனம் (Nation); அவர்களுக்கு என்றொரு தனத்துவமான நிலம் உண்டு -அதேபோல மொழி உண்டு -பண்பாடு உண்டு -பொருளாதார வாழ்வு உண்டு. ஆகவே அவர்கள் தம்மைத் தாமே ஆட்சி செய்யக் கூடிய சுயநிர்ணய உரிமையையும் கொண்டிருக்கின்றனர்; அவர்கள் தம்மைத் தாமே ஆட்சி செய்ய விரும்புகிறார்கள்" என்று பதிலளித்தாராம்.

இந்த விடயங்களை ஒரு கூட்டத்தில் வைத்து பேராசிரியர் அவர்களே தெரிவித்தார்.

தமிழீழத் தேசிய உணர்வுடன் பேசியது மட்டும்தானா பேராசிரியர் செய்த பணி? இல்லை; பேசியபடி வாழ்ந்தும் காட்டியது தான் அந்தப் பேராசானின் பெருமைக்குக் காரணம்!

"சலுகை பெறக்கூடிய உரிமை இருந்தும் ஏன் நீங்கள் கப்பல் பயணத்தைத் தவிர்த்து, கொலைக்கடலான கிளாலி ஊடாக கொழும்புக்குப் பயணம் செய்கின்றீர்கள்?... என்று திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கேட்டபோது, அந்தப் பெருமகன் பெருமை பொங்கக் கூறிய பதில், தமிழீழப் போராட்ட வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிட்டது.

"எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நோக்குடன், கிளாலி ஊடாகப் பயணம் செய்யக்கூடாது என அரசு சட்டம் போட்டது. ஆனால் மக்கள் அதை மீறிப் பயணம் போய், அரசின் சட்டத்தை உடைத்தனர். இதுவும் அரசுக்கு எதிரான ஒரு போராட்ட வடிவமாகும். நானும் மக்களுடன் சேர்ந்து எனது பங்களிப்பையும் செய்கின்றேன். இதன் மூலம் மக்கள் படும் வேதனையில் நானும் பங்கு கொண்டு மனநிறைவடைகின்றேன்." என்று மனமகிழ்ச்சியுடன் பேராசிரியர் கூறியிருந்தார்.

இன்னுமொரு தடவை, கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தீவகத்தை அடைந்த பேராசிரியர், ஒரு நாள் இரவை அகதி முகாமில் எமது மக்களுடன் கழித்தார். அவருக்குத் தனி வசதி செய்து கொடுக்க அங்கிருந்த சிலர் முயன்றபோதும், அவர் அதை மறுத்துவிட்டார். துன்பப்பட்ட தனது தேசத்தின் குடிமக்களுடன் சேர்ந்து, வாழ்வைப் பகிர்ந்து கொள்வதில் அவர் இன்பமடைந்திருந்தார்.

பல்கலைக் கழகத்திலிருந்து தனது கிராமமான வதிரிக்குச் செல்லும் வேளையில், வல்லை வெளியில் -இரத்தப் புற்றுநோய் தாக்கிய அந்த உடம்பை வைத்து அந்தப் பேராசான் அந்த மிதிவண்டியுடன் போராடும்போது -வாகனத்தில் அவரை முந்திச் செல்ல முனையும் போராளிகள், கண்ணி வெடி வயலில் கடப்பதுபோல நெளிந்து -மனங்குமைந்தபடி கடப்பர். மனம்வராது கீழிறங்குபவர்களைப் பார்த்து, வெள்ளை மனதுடன் விடை கொடுக்கும் அந்தப் பண்பு, கோடியில் ஒருவருக்குத் தான் இருக்கும்.

யாழ். பல்கலைக்கழக கட்டடமொன்றில், 'துணைவேந்தர்' என்ற பெயர்ப் பலகையுடன் அதியுயர் அதிகாரத்தையும் கொண்ட அந்த அறையினுள் பேராசிரியர் இருக்கும்போது, பாலர் வகுப்பறை போன்றே அது தென்படும். பல்கலைக்கழக மாணவர்கள், சிற்றூழியர்கள், சகசமாக உள்ளே போவதும் சந்தோசமாக உரையாடுவதும் -சிரித்த முகத்துடன் வெளியே வருவதும் வழமையான காட்சிகள்.

சாதாரணமாக இத்தகைய உயர் பதவியில் இருக்கும் ஒரு நபரைப் பார்க்கவே சிரமப்படும் நிலையில், அன்றாடம் இவரை எல்லோரும் சிரமமின்றிப் பார்த்தனர். அவருடன் பேசினர்.

அவரது சொந்தக் கிராமத்திலும் உயர எழுப்பிய மதிற் சுவருக்குள் சிறையிருந்து -மக்களிடமிருந்து அந்நியப்பட்டு அவர் வாழவில்லை.

**தமிழினத்தின் கல்வியில் அவரது சேவை ஒரு கலங்கரை விளக்கு.**
**உலகக் கல்விமான்கள் மத்தியில் அவர் ஒரு அறிவுப்பழம்.**
**எமது மக்களின் உரிமைகள் பற்றிப் பேசும்போது அவர் ஒரு போராளி.**
**அவரது கிராமத்திலோ வேட்டி கட்டிய ஒரு விவசாயி.**

சனசமூக நிலையம் சென்று பத்திரிகை வாசித்தார்; குடும்பத்தாருடன் சேர்ந்து தோட்டம் செய்தார்; கிராமத்து வீதிகளில் நின்றபடி மக்களுடன் அன்றைய புதினங்களைப் பற்றிக் கதைத்தார்; மக்களுடன் மக்களாகவே வாழ்ந்தார்.

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து பிரியாவிடை பெற்றுக் கொண்டு கொழும்பு செல்வதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர், பேராசிரியரை அழைத்த புலிகளின் அரசியல்துறையினர், அவ

**தொடர்ச்சி 7 ஆம் பக்கம்...**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**எம் தேசமும் மக்களும் விடுதலை அடைகின்ற அதேவேளையில், எம்மத்தியில் காணப்படும் சகல சமூகக் கொடுமைகளும் ஒழிக்கப்பட வேண்டும். தமிழீழத்தில் காணப்படும் சமூகக் கொடுமைகளில் ஒன்றான சீதனத்தை ஒழிப்பதற்காகவே தமிழீழத்தில், 'சீதன ஒழிப்புச் சட்டம்' கொண்டுவரப்பட்டுள்ளது. சீதனக் கொடுமை தமிழீழத்தில் உள்ள எம்மக்களை மட்டும் பாதிக்கவில்லை; அந்நிய நாடுகளில் புலம்பெயர்ந்துள்ள எம்மக்களையும் வெகுவாகப் பாதித்து வருகின்றது. இப்பாதிப்பிலிருந்து எமது இனம் விடுதலைபெற, சிறுகதையில் வரும் சிவநேசனைப் போல, தமிழீழத்தில் உள்ள இளைஞர்கள் மட்டுமல்ல, புலம்பெயர்ந்து வாழும் எம் இளைஞர்களும் மனமாற்றமடைய வேண்டும் என்ற உயரிய நோக்குடனேயே இச்சிறுகதை இங்கே பிரசுரிக்கப்படுகின்றது. ■**

## சிறு கதை

**தாமரைச்செல்வி**

# தீர்வு

அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு மோட்டார்சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தான் சிவநேசன்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி வாசலில் ஒரே சன நெரிசலாக இருந்தது. சோச் வாசலில் கொழும்பு பஸ் நின்று, ஆட்களை இறக்கிக் கொண்டிருந்தது. கரடிப்போக்குச் சந்தியிலிருந்து இரணைமடுச் சந்திவரை தெருவில் எப்போதும் சனக் கூட்டமாய்த்தான் இருக்கிறது.

மோட்டார்சைக்கிள் தெருவில் செலுத்துவது மிகவும் கடினம். கந்தசாமி கோவிலின் முன்புற வீதியால் திரும்பி, தன்வீட்டை நோக்கிப் போனான்.

மாலை வெயில் நன்றாக இறங்கிவிட்டிருந்தது. காற்று சில்லென்று வீசியது.

வீட்டுக்கு வந்து உடைகளை மாற்றி, கால், முகம் கழுவிவிட்டு வந்ததும் அம்மா தேனீர் தந்தாள். "கல்யாணத்துக்கு நாள் குறிக்க எங்களை முரசுமோட்டைக்கு வரச் சொல்லி புறோக்கரிட்ட சொல்லிவிட்டிருக்கினம்".

அவன் மனதில் மின்னலாய் மலர்விழியின் முகம் தோன்றியது. பெண் பார்க்கப்போன அன்று, ஒரு அரை மணி நேரமாய் விட்டு, விட்டுப் பார்த்த அவளின் முகம்.

"தகப்பன் லொறிகொண்டு வவுனியாக்கு போயிட்டாராம். இன்னும் ரெண்டு நாளில வந்திடுவாராம். தமயன்தான் சொல்லிவிட்டிருக்கு. அவர் வந்தவுடன் நானும் அப்பாவுமாய் போய், நாள் குறிச்சுப் போட்டு வாறம்".

அவன் தலையாட்டிவிட்டு, வாசல் விறாந்தையில் நாற்காலியில் அமர்ந்துகொண்டான்.

தலையை இடது கையினால் கோதிவிட்டபடி, தெருவைப் பார்த்தான். தனியார் கல்வி நிறுவனம் முடிந்து கூட்டம் கூட்டமாய் மாணவர்கள்.

ஒரு சிறுவன் மாடுகளைத் தெருவோரமாக சாய்த்துக்கொண்டு போனான். தூரத்தில் சூரியன் சிவப்பாய் அடிவானில் விழுந்துகொண்டிருந்தான்.

அந்த அழகான சிவப்பையும் சிலுசிலுவென்ற காற்றையும் உணரும் போது, மலர்விழியின் நினைவு இனிமையாய் மனதை அழுத்தியது.

முரசுமோட்டையில் வயல்க்காணி, கல்வீடு என்று கொஞ்சம் வசதியான ஆட்கள். ஒரு மகனும் மகளும் தான், சொந்தமாய் லொறி வைத்து கொழும்புக்கும் இங்கேயுமாய் சாமான் ஏற்றி வியாபாரம்.

அவன் கல்யாணப் பேச்சுக்களின் ஆரம்பத்தில் அம்மாவிடம் சொல்லிவிட்டான்.

"அம்மா எனக்கு சீதனம் ஒண்டும் கேட்கக்கூடாது".

"நான் ஏன் சீதனம் கேட்கிறன்".

அம்மா பெண் பார்க்கப்போன அன்றே அவனையும் முன்னால் வைத்துக்கொண்டே அவர்களிடம் சொல்லிவிட்டாள். "என்ர மகனுக்கு சீதனம் வாங்கிறதில விருப்பமில்லை. எனக்கும் தான், ஏதோ உங்களுக்கு விருப்பினதை, உங்கட பிள்ளைக்குக் குடுங்கோ. எங்களுக்குத் தேவை நல்ல குணமான பிள்ளைதான்".

அவர்களுக்கும் அம்மாவின் பெருந்தன்மையான மனம் சந்தோசத்தை கொடுத்திருக்க வேண்டும்.

சீதனம், காணி, பூமி, காசு, நகை என்று எதுவித பேச்சும் அன்று எழவில்லை. சிவநேசனுக்கு அது பெரிய ஆறுதலாக இருந்தது. சராசரி ஆண்களிடமிருந்து நான் சற்று வித்தியாசமானவன் என்று மலர்விழிக்குக் காட்டிக்கொள்ளவே விரும்பினான்.

அந்த நிமிசம் மலர்விழி சற்றுத் தலை தூக்கி, தன்னை ஒரு வினாடி பார்த்தது அவனுக்கு இப்போதும் கண்ணுக்குள் நின்றது.

அவனது குடும்பம் கணேசபுரத்தில் சொந்தவீடு, வயல்க்காணி என்று கொஞ்சம் வசதியாக இருந்தது. அக்காவை அத்தான் விரும்பி, ஒரு சீதனமும் இல்லாமல் கல்யாணம் செய்து, வெளிநாட்டில் வசதியாக இருக்கிறார்கள்.

இங்கிருக்கும் வீடு, வயல் எல்லாம் அவனுக்குத்தான். இப்படி வசதியுள்ள தானாவது, எந்தச் சீதனமும் வாங்காமல், கல்யாணம் செய்யவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தான்.

அவனது உணர்வை மதித்து அம்மாவும், அப்பாவும் நடந்ததில் அவனுக்குச் சந்தோசமே. அநேகமாய் இந்த ஆவணிக்குள்ளேயே கல்யாணத்துக்கு நாள் வைக்கக்கூடும்.

இரண்டு நாட்கள் சென்றன. மூன்றாம் நாள் பகல் பதினொரு மணியளவில் அவன் அலுவலகத்திலிருந்தபோது, இரண்டு பொம்பர்கள் வந்து, கிளிநொச்சியை சுற்றத் தொடங்கின.

நாலு தடவை பெரிய வட்டமாகச் சுற்றிவிட்டு, வடக்கு பக்கமாகப் போனது. பத்து நிமிசம் இரைச்சல் எதுவும் கேட்கவில்லை. அதன்பின், ஒரு பொம்பர் பரந்தன், முரசுமோட்டைப் பகுதிகளைச் சுற்றியது. இரண்டு குண்டுகள் அடுத்தடுத்து விழுந்து வெடித்தன. சிவநேசன் கவலையுடன் அந்தத் திசையைப் பார்த்துக்கொண்டு நின்றான். அரைமணி நேரமாகச் சுற்றிவிட்டு, பொம்பர் வவுனியாப் பக்கமாகப் போய்விட்டது. கொஞ்ச நேரத்துக்கு சிவநேசனுக்கு ஒரு வேலையும் ஓடவில்லை.

ஒரு மணிக்கு மேல் வெளியேயிருந்து வந்தவர்களால் அலுவலகத்தில் கதை பரவியது.

முரசுமோட்டைப் பகுதியில் தான் குண்டுகள் விழுந்ததாம்; ரெண்டு மூண்டு வீடு சேதமாம்; நாலைஞ்சு பேருக்குக் காயமாம்; சிவநேசனுக்கு 'திக்'கென்றது.

விபரம் யாரிடமாவது அறியலாமா? என்று அலைந்து திரிந்தான். மூன்று மணிக்கு மேல் அலுவலகத்தில் சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தான்.

வீட்டு வாசலில் அம்மாவும் அப்பாவும் ஒருவித பரபரப்போடு நின்றார்கள். மோட்டார்சைக்கிளை நிறுத்திவிட்டு, "என்ன விசயம்?" என்று கேட்டுக்கொண்டே இறங்கிப் போனான். "முரசுமோட்டையில போட்டதில, ஒரு குண்டு மலர்விழி வீட்டில விழுந்து, வீடு அப்படியே இடிஞ்சு போயிட்டுதாம். இப்பதான் புறோக்கர் வந்து சொல்லிப்போட்டுப் போறார்".

"அப்ப ஆட்களுக்கு . . ."




"அவைக்கு ஒண்டுமில்லாம தப்பியிட்டினம். பொம்பர் சுத்தத் தொடங்க, மலர்விழியும் தாயும் பக்கத்துவீட்டு ஆட்களோட தள்ளி வயற் பக்கம் ஓடியிட்டுதாம். தமயன் வேற அலுவலாய்ப் பரந்தனுக்கு வந்திட்டுதாம்".

"கடவுளே. . . ஆட்கள் தப்பினதே போதும். வீடுதானே போனாப்போகுது".

என்றார் அப்பா.

அம்மாவின் முகக்கலக்கம் தீரவில்லை.

"நான் ஒருக்கா போய்ப் பார்த்து வரட்டே. தகப்பனும் நிற்காத நேரம் நாங்கள் போய்ப் பார்த்தால், ஒரு ஆறுதல் தானே".

என்று அப்பா புறப்பட்டார்.

சிவநேசனுக்கும் போக வேண்டும் போல் இருந்தாலும் அது சரியில்லை என்பதால், பேசாமல் இருந்தான்.

அப்பா சைக்கிளில் போவதைப் பார்த்துக்கொண்டே யோசனையுடன் அவன் வாசலில் அமர்ந்திருந்தான்.

வீடு அப்படியே இடிந்து போய்விட்டது என்றால், இனி என்ன செய்வார்கள்.

அம்மா வாசலுக்கும் உள்ளுக்குமாய் நடையாய் நடந்தாள். அம்மாவின் முகத்திலும் யோசனையும் கவலையும் தெரிந்தது.

இருள்கின்ற நேரத்தில் அப்பா வந்து கவலையுடன் சொன்னார், "அதுகள் தப்பினது அருந்தப்பு. வீடு தானே, போனாப்போகுது எண்டு நினைச்சுக் கொள்ள வேண்டியதுதான்".

ஒரு வாரம் ஓடிப்போனது. மலர்விழியின் தகப்பன் வவுனியாவிலிருந்து வந்த பிறகு, வந்து சொல்வதாகச் சொன்னவர்களிடமிருந்து ஒரு தகவலுமில்லை. இன்னும் அவர் வரவில்லையோ. . . அல்லது வீடு போன அதிர்ச்சியிலிருந்து மீளவில்லையோ. . .

அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை பின்னேரம், ஆறுதலாக விறாந்தையில் இருந்து கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

அந்த நேரம் புறோக்கர் உள்ளே வந்தார். அவரது முகம் சோர்வுடன் இருந்தது.

வந்து அமர்ந்ததும் அம்மாவிடம் தண்ணீர் கேட்டு வாங்கி, மளமளவென்று குடித்தார். பிறகு தொண்டையைச் செருமிக்கொண்டு சொன்னார்.

"வவுனியாவில தகப்பனுக்கு ஏதோ பிரச்சனைபோல இருக்கு. ஒரு ஆளிட்ட சொல்லி அனுப்பியிருக்கிறார் வரச்சொல்லி, அதால பெடியன் வவுனியாவுக்குப் போட்டுது. என்ன ஏது எண்டு ஒரு விசயமும் தெரியேலை".

சிவநேசனுக்கு மனம் குழம்பியது.

தகப்பனுக்கு அப்படி என்ன பிரச்சனை வரக்கூடும் என்று யோசனையாக இருந்தது.

தொடர்ந்து வந்த நாட்களில் ஒரு அலுவலிலும் ஈடுபட முடியவில்லை.

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்...

**"விலைபேசி விற்பதற்கு - வெறும் சிலைகளல்ல பெண்ணினம்".**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்களின் உரிமைக்காக...

னார். அதற்குப் பதில் அளித்த ஆயர்,

"நாங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தருகின்றோம் என்பதல்ல; ஆனால் தமது சுதந்திரத்துக்காகப் போராடும் மக்களை ஆதரிக்கின்றோம்" எனத் தெரிவித்தார்.

"அப்படியென்றால், மக்களின் இலட்சியத்துக்கும், புலிகளின் இலட்சியத்துக்கும் வேறுபாட்டைக் காணமுடியவில்லை என்று அர்த்தமா" என்று ஜோர்ஜ் ஆர்னி கேட்டதற்கு,

"விடுதலைப் புலிகள் எப்போதுமே மக்களின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பிவருகின்றனர். எனவே நாங்கள் அவர்களுடன் இனங்காணப்படுவதாக இருக்கலாம். ஆனால் உண்மையில், மக்களுக்காகத்தான் எனப் பதில் தந்தார்.

கத்தோலிக்க மதபீடம் நடுநிலையானது எனக் கூறினீர்கள்; ஆனால், நீங்கள் கூறும் முறையைப் பார்க்கும்போது உண்மையில் நீங்கள் புலிகளின் பக்கம்போல் தெரிகிறதே என மீண்டும் ஜோர்ஜ் ஆர்னி கூறிய போது,

"நாங்கள் புலிகள் பக்கமோ, அல்லது வேறு எவர் பக்கமோ இல்லை; துன்பப்பட்டுக்கொண்டிருக்கும், அடக்கப்பட்டிருக்கும், உரிமைகள் மறுக்கப்பட்டு நீண்டகாலம் அரசியல் ரீதியில் ஒதுக்கப்பட்ட மக்கள் பக்கந்தான் நாங்கள் இருக்கின்றோம்" எனப் பதிலளித்தார் ஆயர்.

### பி. பி. சி. செய்தியாளர் கருத்து

"தமிழ் மக்கள் சிறீலங்கா இராணுவத்தை தமது எதிரியாகக் கருதும் அதேவேளை, புலிகளையே தமது பாதுகாவலர்களாகக் கருதுகின்றனர்" என பி. பி. சியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் யார் ஆதரவு பெற்றுள்ளார்கள்? என்ற கேள்விக்கு இலகுவான விடை விடுதலைப் புலிகள் என்பதாகும். யாழ். குடாநாட்டில் உள்ளோரில் பெரும்பாலானோர் புலிகளையே ஆதரிக்கின்றார்கள். சுதந்திர நாடொன்றைப் பெறப் போரிடும் விடுதலைப் புலிகளுக்கு, அங்குள்ள மக்கள் தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

புலிகள் அங்கு நிர்வாக அமைப்பைக் கட்டுப்படுத்துகின்றனர். அங்குள்ள கிறிஸ்த்தவ ஆலயங்களும் புலிகளை ஆதரிக்கின்றன. நான் அங்கு நேரில் சென்றபோது, அதனை அவதானித்தேன்.

நான் அங்கிருந்தபோது, இராணுவ முகாம்களிலிருந்து எறிகணைகள் ஏவப்படுவதையும் சாதாரண மக்கள் கொல்லப்படுவதையும் காயமடைவதையும் கண்டேன்.

அங்குள்ள மக்கள் இராணுவத்தை எதிரியாகவே கருதுகின்றனர். அதேவேளை, புலிகளைத் தமது பாதுகாவலர்களாகக் கருதுகின்றனர். அங்கு புலிகளுக்கும் மக்களுக்குமிடையில், சிறந்த நல்லுறவு இருக்கின்றது" என் அவர் மேலும் தெரிவித்தார். ■

# பலாலி முகாமுக்குள்...

### குழப்ப நிலையில் சிறீலங்காப் படைகள்

ஆயினும் இத்தாக்குதல் எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பதை, அறியமுடியாத குழப்பநிலையில் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள் உள்ளன. சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சின் செய்திகளின்படி, இரவு நேரப் பார்வைக் கண்ணாடிகள் அணிந்த, நவீனமயப்படுத்தப்பட்ட இருபது பேர்களைக்கொண்ட விடுதலைப் புலிகளின் அணி ஒன்று, இத்தாக்குதலில் இறங்கியுள்ளதாகக் கூறுகின்றது. அவர்களில் பலர் தொடர்ந்தும் பலாலிப் பாதுகாப்பு அரண்களில் பதுங்கி இருக்கலாம் என்னும் மனப்பீதியில், சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தவித்துக்கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறிய ரொக்கட்டுக்களால் ஏவப்படும் எறிகுண்டுகள் புலிகளிடம் உண்டு என, சிறீலங்கா இராணுவத்தினர் அச்சத்தால் உதறிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் அறிவிக்கின்றன. சிறீலங்காப் பாதுகாப்புப் படைகள் தாம் ஆறு உயிரற்ற உடல்களைக் கண்டெடுத்துள்ளதாக அறிவித்துள்ளனர். யுத்தம் முடிந்த பின்னரும் பலமணி நேரமாக சிறீலங்காப் படையினர் வெளியே வராமல், அச்சத்தினால் பீடிக்கப்பட்டிருந்ததாக ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன.

### சிறீலங்காத் தளபதிகள் பலாலிமுகாமுக்கு விரைவு

தாக்குதலின் வேகத்தால், செயலிழந்து போய்விட்ட பலாலி முகாமிலுள்ள சிறீலங்காப் பாதுகாப்புப் படையினருக்கு உற்சாகம் ஊட்டுவதற்காக, சிறீலங்கா இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா, விமானப் படைத்தளபதி ஒலிவர் ரணசிங்கா ஆகியோர் அவசரம் அவசரமாகப் பலாலிக்கு விஜயம் செய்தனர். இவர்களுக்கு எவ்விதம் சிறீலங்காவின் பலத்த பாதுகாப்புடன்கூடிய இம்முகாமுக்குள் பல மைல் தூரம் புலிகள் ஊடுருவினர் என்பதில், பலத்த அதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

### சிறீலங்கா அமைச்சு அச்சம்

அதேவேளை, சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில், பலாலி முகாம் தாக்குதலுக்குள்ளாகும் அச்சம் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றது என ஏற்றுக்கொண்டுள்ளது.

### புதிய நம்பிக்கை

பலாலி முகாம் ஊடுருவலானது, தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழத்தின் தேசியப் பாதுகாப்பை முற்றுமுழுதாக வழங்கும் நிலை நோக்கி வேகமாக முன்னேறிக்கொண்டிருப்பதற்கான புதிய நம்பிக்கையாக உள்ளது என அரசியல், இராணுவ அவதானிகள் கருதுகின்றனர்.

### முதலடி

பலாலி முகாம் தமிழர்கள் மீதான சிறீலங்காவின் இராணுவ ஆயுத ஒடுக்குமுறையின், தலைமை நிலைகளில் ஒன்றாக இருந்து வருவது தமிழர்களின் சாபக்கேடாக உள்ளது.

1965 இல் கள்ளக்கடத்தலைத் தடுக்கவெனப் போலியான காரணங்களுடன் அமைக்கப்பட்ட இம்முகாம், 1972 ஆம் ஆண்டுகளை அடுத்து, தமிழர்களின் மனித வதைக்கூடமாகத் திகழ்ந்தது. இம்முகாம் அமைக்கப்பட்டதனால், தென்னிந்தியாவுக்குப் புனித யாத்திரை செல்லும் தமிழர்களும் மற்றைய விமானப் பயணிகளான தமிழர்களும் பலாலி -திருச்சி விமானமார்க்கத்தை இழந்தனர். இந்தப் பலாலி - திருச்சி விமானமார்க்கமே இலங்கை -இந்தியாவுக்கான மிகக் குறைந்தநேர விமானச் சேவையாகத் திகழ்ந்தது. 1978 இல் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற மனிதாய எதிர்ப்புச் சட்டத்தை சிறீலங்கா நிறைவேற்றி, இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடங்கிய பின்னர், இந்த முகாம் சிறீலங்கா இராணுவத்தின் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த கேந்திர நிலையமாக மாற்றப்பட்டது. தமிழரைப் பிடித்த சாபக்கேடு அகல்வதற்கான முதலாவது அடியாக, இந்த ஊடுருவித் தாக்குதல் விளங்குவதாகத் தமிழ் மக்கள் பேசிக்கொள்கின்றனர். ■

# வானியல் ஆய்வுப் பாசறை அச்சுவேலி ம.வி. நடாத்தியது

அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் விஞ்ஞானக் கழகத்தினர், தமது கல்விக்கள ஆய்வு நெறியின் முதற்கட்டமாக, வானியல் உடுத்தொகுதி ஆய்வு இரவுப் பாசறையினை நடாத்தியுள்ளனர்.

அண்மையில் அச்சுவேலி உலவிக்குலம் பிள்ளையார் கோவில் வெளியில், இப்பாசறையானது இரவு நேரத்தில் மகாவித்தியாலய அதிபர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. விஞ்ஞானக் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில், விஞ்ஞான ஆசிரியர்களும் நூற்றுக்கணக்கான எட்டாம் ஆண்டு மாணவர்களும் கலந்துகொண்ட இக்கள ஆய்வுக் கற்றல் நெறி, தொடர்ச்சியாக 9 ஆம், 10 ஆம் ஆண்டு மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

விஞ்ஞானக் கல்வியை முழுவதும் செயல்முறை சார்ந்ததாக மாற்றியமைக்கும் திட்டத்தின் முதல் நடவடிக்கையாகவே, இது மேற்கொள்ளப்படுகின்றது.

இவற்றைத் தொடர்ந்து, உயர் வகுப்பு மாணவர்களுக்கான விடுமுறைக்கால கடல்வள உயிரியல் கள ஆய்வு, வறள்நிலத் தாவரவியல் கள ஆய்வுகளும் அவ்வவ் இடங்களில், வதிவிடக் கள ஆய்வாகச் செய்வதற்கான திட்டமும் இத்தவணை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார். ■

# பிரதமர், அமைச்சர்கள்...

தலைவராகவும் இருத்தல் வேண்டும். இதன்படி, மந்திரிசபையை அமைப்பது ஜனாதிபதியே ஆகும். சிறீலங்காப் பிரதமரின் சிபார்சு கட்டாயமானதல்ல; அது மட்டுமல்ல, சிறீலங்காவின் பிரதமரை நியமிக்க முன்னரே, சிறீலங்காவின் அமைச்சரவையையும் ஜனாதிபதி நியமிக்கலாம். சுருக்கமாகச் சொன்னால், சிறீலங்கா ஜனாதிபதி ஆட்டிவைக்கும் ஒரு பொம்மைக் கூட்டமே சிறீலங்காப் பாராளுமன்றம் ஆகும்.

சிறீலங்கா ஜனாதிபதிக்கான நிதியீட்டத்தை சிறீலங்கா பாராளுமன்றமே அங்கீகரித்து, ஒதுக்கவேண்டும் என்பதிலும், சிறீலங்காப் பாராளுமன்றம் 2/3 பெரும்பான்மையுடன் சிறீலங்கா ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றினால், அந்தத் தீர்மானத்தை சிறீலங்கா உயர் நீதிமன்றம் பரிசீலித்து, அதை ஏற்றுக்கொண்டால், அந்த முடிவை மீண்டும் சிறீலங்காப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி, அதனை சிறீலங்காப் பாராளுமன்றம் 2/3 பெரும்பான்மை வாக்குகளால் மீண்டும் உறுதிப்படுத்திய பின்னரே, சிறீலங்கா ஜனாதிபதியின் பதவியிறக்கம் சாத்தியமாகும் என்பதிலும் மட்டுமே, சிறீலங்காப் பாராளுமன்றத்தில் சிறீலங்கா ஜனாதிபதி தங்கி நிற்கின்றார். எனவே நடைமுறை யதார்த்தத்தின்படி, சிறீலங்கா ஜனாதிபதியை சிறீலங்காப் பாராளுமன்றத்தால், எதுவுமே செய்யமுடியாது. ஆனால், சிறீலங்காப் பாராளுமன்றத்தை சிறீலங்கா ஜனாதிபதி தான் நினைத்தவாறெல்லாம் ஆட்டிப்படைப்பது இலகு.

இந்நிலையில், 16 ஆம் திகதிய சிறீலங்காவின் பொதுத் தேர்தலில், சந்திரிகா குமாரணதுங்காவின் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றாலும்கூட, சிறீலங்கா ஜனாதிபதி விஜேதுங்கா தனது பதவிக்காலம் நவம்பரில் முடியும்வரை, பிரதமர் நியமனத்தை ஒத்திப்போடலாம்; அல்லது அறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையில் வெற்றிபெற்றால், ஐ. தே.கட்சியினரை தம் விருப்பப்படி மந்திரி சபையில் நியமித்து, பிரதமரை நியமிக்கலாம் என சிறீலங்கா அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடத் தொடங் கியுள்ளது.

நவம்பரில் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலை முன் கூட்டியே நடாத்தி, அதுவரை தொடர்ந்தும் ஐ. தே.கட்சியின் இன்றைய காபந்து அரசாங்கத்தையே நீடிக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது.

சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தல், சிறீலங்காவின் அரசியல் சாசனத்தில் அதனுடைய இறைமைக்கு உட்பட்டது எனக் கூறப்படும் அனைத்துப் பிரதேசத்திலும் நடைபெறவேண்டும் எனக் கூறப்பட்டிருக்கின்றது. அதனாலேயே வடக்கு -கிழக்கில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்கு முன்னோடியாக, சிறீலங்காப் பாராளுமன்றத் தேர்தலை வடக்கு -கிழக்கிற்கும் அறிவித்து, பரீட்சித்துப் பார்ப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில், தேர்தல் நடாத்த முடியாத நிலை நிரூபிக்கப்பட்டிருப்பதால், சிறீலங்காவின் இறைமை தமிழீழப் பிரதேசங்களில் செல்லுபடியாகாது என்பது உறுதியாகி உள்ளது. இந்நிலையில், சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்டால், அது அரசியலமைப்பு நெருக்கடியைத் தோற்றுவித்து, அரசியல் அமைப்பு, நீதிமன்ற விவகாரமாக சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலை மாற்றக்கூடுமென்ற ஊகங்கள் வெளியாகத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் சிறீலங்கா ஜனாதிபதி, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, சமாதான வழியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமரசத்தை ஏற்படுத்த அல்லது இராணுவரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திக்கவேண்டிய அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு வருகின்றார். பௌத்த சிங்களப் பேரினவாதத்தையே தனது பதவியைப் பாதுகாக்கும் கவசமாகக் கருதும் சிறீலங்கா ஜனாதிபதி, இராணுவத் தீர்வுக்கே முக்கியத்துவம் கொடுத்து, சிறீலங்காப் பாராளுமன்றத் தேர்தலை அடுத்து, பாரிய தாக்குதல்களை வடக்கு - கிழக்கில் முடுக்கிவிடக்கூடும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஆயினும், சிறீலங்கா ஜனாதிபதியின் போர் வெறியைப் பூர்த்தி செய்யக்கூடிய மனோநிலையில், சிறீலங்கா இராணுவம் இல்லை எனப்பேசப்படுகின்றது. பலாலி முகாமிற்குள் ஊடுருவி நிகழ்த்திய தாக்குதல், மன்னார் பொலீஸ் நிலையத் தாக்குதல் என்பன சிறீலங்கா இராணுவத்திற்கு பலத்த இராணுவத் தோல்விகளை அளித்துள்ளதுடன், மனோநிலைப் பாதிப்புக்களையும் சிக்கல்களையும் தோற்றுவித்துள்ளன. ■

# மன்னார்-மட்டக்...

காக சிறீலங்காப் பொலிசார் பேருந்தை நிறுத்தியபோது, அதிலிருந்த புலிகள் அதிவேகத் தாக்குதலில் இறங்கி, பொலிஸ் நிலையத்தைக் குண்டுவைத்துத் தகர்த்துவிட்டு, கைப்பற்றிய ஆயுதங்களுடன் கடல்வழியாகச் சென்றுவிட்டதாகச் சிறீலங்காச் செய்திகள் கூறுகின்றன.

மட்டக்களப்பு - திருமலை மாவட்டங்களின் எல்லைக் கிராமமான கதிரவெளியில் அமைந்திருந்த இராணுவமுகாம் மீது, விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலில், 12 சிறீலங்கா இராணுவத்தினர் தலத்திலேயே கொல்லப்பட்டதாக சிறீலங்கா இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. ஆயினும், உயிரிழந்தோர் தொகை அதிகமாக இருக்கலாம் எனத் தென்தமிழீழச் செய்திகள் கூறுகின்றன. இதேவேளை, அம்பந்தனாவெளி, கட்டுமுறிவு முகாம்களும் இத்தாக்குதலை அடுத்து, விடுதலைப் புலிகளின் தொடர்தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிகின்றது. இதில் கட்டுமுறிவுத் தாக்குதலில், இரண்டு மணிநேரமாகச் சண்டை நிகழ்ந்ததாகவும் தெரியவருகின்றது.

திருகோணமலையில், சிங்கள ஊர்காவற்படையினரின் முகாம் ஒன்றும் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. சிறீலங்காச் செய்திகளின்படி, ஒருவர் தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பலாலித் தாக்குதலை அடுத்து, பரவலாக விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளமையானது, சிறீலங்காப் படைகளின் எத்தகைய அரண்களையும் ஊடுருவி, வெற்றிகரமான முறையில் தாக்குதல்களை நடாத்தும் புலிகளின் ஆற்றல், மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளதாக அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். சிறீலங்காவில், 42 வெளிநாட்டவர்கள் சிறீலங்காப் பாராளுமன்றத் தேர்தல் மேற்பார்வை அவதானிகளாகத் தங்கிநிற்கையில், நடைபெறும் இத்தாக்குதல்கள், தமிழீழத்தில் சிறீலங்காவின் இறைமை செல்லுபடியாகாது என்பதை மீண்டும் உலகுக்கு நிரூபித்துள்ளது என, சர்வதேச அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்

பூநகரி இராணுவக் காவலரண்கள் மீதும், விடுதலைப் புலிகளினால் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# கோழி வளர்ப்பு ஊக்குவிப்பு

கிராம மக்களின் வாழ்க்கையினை மேம்படுத்தும் நோக்கமாக, அண்மையில் கரவெட்டியில் தெரிவுசெய்யப்பட்ட 5 குடும்பங்களுக்கு கோழி வளர்ப்புக்கென தலா 7825 ரூபா வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கிராமிய உற்பத்திக் குழுவினரால், கிராமிய மேம்பாட்டுத் திட்ட நிதியினைப் பயன்படுத்தி, மொத்தமாக இவர்களுக்கு 39,125 ரூபா வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழக் கலை பண்பாட்டில் மாணவரின் பங்கு

**சிறிலங்கா அரசு, தமிழ் மக்களின் கல்வியை அரசியலாக்கி, இன அழிப்புச் செய்து வருகின்றது. கல்வியே எமது தலையாய சொத்து என்பதை உணர்ந்த எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள், கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். அதன் ஒரு கட்டமாகவே ஆனி 5ம் திகதி தமிழீழ மாணவர் எழுச்சி நாள் ஆக பிரகடனப்படுத்தப்பட்டு தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்பட்டுள்ளது. எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில், தமிழீழக் கலை பண்பாட்டு வளர்ச்சியில் மாணவர்களின் பங்கு எந்தளவுக்கு முக்கியமானது என்பதை உணர்த்தி நின்ற மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு வெளியிடப்பட்ட கட்டுரையே இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

மனிதன் தன்னைச் சுற்றியுள்ள யதார்த்தத்தின் செல்வாக்கில் அனுபவித்துள்ள உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் தனக்குள் மீண்டும் எழச்செய்து, அவற்றைத் திட்டவட்டமான உருவங்களில் வெளியிடும் பொழுது, கலை பிறக்கின்றது என்பது ரஸ்ய அறிஞர் பிளாக்கனோவின் கருத்து.

**உண்மையில் மனிதன் எப்போது தோன்றினானோ அப்போதே உணர்வுகளும் அவனுடன் தோன்றிவிட்டன; எண்ணங்களும் தோன்றிவிட்டன. ஆகவே, கலையும் அன்றே பிறந்துவிட்டது எனலாம். ஆனால் மனிதன் உலகின் வெவ்வேறு பகுதிகளில், வெவ்வேறு குழுக்களாகி வாழத் தொடங்கியபோது, அந்தந்தக் குழுக்களுக்குரிய பண்பாடு வளர ஆரம்பித்தது. ஒரு சமூகத்தின் அல்லது இனத்தின் கலை, பண்பாடுகளை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லவேண்டிய பொறுப்பும், கடமையும் அங்கு வாழும் மாணவருக்கும் இளைஞருக்கும் உண்டு.**

மாணவர் என்று சொல்லும் போது, அந்தப் பிரிவினுள் ஆறு வயதுள்ள குழந்தைகள் முதல், பதினெட்டு வயதுக் கட்டிளமைப் பருவத்தினர்வரை அடங்குவர். முன்கட்டிளமைப் பருவம் ஏறத்தாழப் பதின்மூன்று வயதில் ஆரம்பமாகின்றது. இது புயலும் நெருக்கடியும் மிகுந்தகாலம் என்று சொல்லப்படுகின்றது. 'It Is a Period Of Stress Sterms' - இப்பருவத்தினர் பிழைகளைப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகவே தான் பண்பாட்டைப் பராமரிப்பதிலும், கலையை வளர்ப்பதிலும் இவர்களின் பங்களிப்பு எங்கும் முனைப்புள்ளதாக இருப்பதைக் காணலாம்.

மாணவப் பருவமும் மாணவர் உலகமும் விசேட வட்டங்கள். நன்மை -தீமை பற்றி, நேர்மை - நேர்மையின்மை பற்றி, கலை - பண்பாடு பற்றித் தமக்கேயுரிய தனியான கருத்துக்களை அவர்கள் கொண்டிருக்கின்றார்கள். அழகு பற்றிய அவர்களின் அளவுகோல்கள் தனியானவை. ஆகவே தான், எந்த ஒரு நாட்டின் கலை, பண்பாட்டிலும் மாணவர் பங்களிப்பு முக்கியமானதாக அமைகின்றது.

**"கல்வியும் நாடும் நம் இரு விழிகள் குண்டு வீசிடினும் நிற்காது நம் கல்வி".**

**"நீ வாழ்வது உண்மையெனில், முடியாது என ஒருபோதும் சொல்லாதே; நித்தியம் யாவும் நித்தியம் இல்லை; இன்று இருப்பதைப்போல ,என்றும் இருக்க முடியாது; இன்று முடிவதற்குள், முடியாதது தொடங்கிவிடும்" என்றார் பேட்டோல்ட் பிறெச்ட்! மாணவர்கள் வாழ்வின் உற்சாகமான பருவத்தில் இருப்பவர்கள்; அவர்களால் எதுவும் முடியும்!**

இது போர்க் காலம்; துன்பமும் துபரமும் நிறைந்த காலம்; இக்காலத்தில் என்ன செய்ய முடியும்? என்று மாணவர்கள் ஒரு வேளை விரக்தியுடன் நினைக்கக்கூடும். உண்மையில் மனிதனுக்கு துன்பம் ஏற்படும் போதுதான், நல்ல கலைகளும் தோன்றுகின்றன. மாணவர்கள் தமது போர்க்கால அழுத்தங்களையே நல்ல கலைகளாகப் படைக்க முடியும். ஒரு வழியில் ஈடுசெய்யப்படாத மாணவரின் ஆசைகள், இன்னொரு வழியில் நல்ல வடிகாலைத் தேடும் பொழுது, படைப்பாளிக்கு அது ஒரு உளவியல் பாதுகாப்புக் கவசம் போலாகின்றது; உலகுக்கு உன்னதக் கலை ஒன்று கிடைக்கின்றது.

**குருடரான மில்ரனால் இவ்வளவு நல்ல கவிதை செய்ய முடிந்தது என்றால், செவிடரான பீத்தோவனால் இவ்வளவு அற்புதமான சங்கீதத்தைப் படைக்க முடிந்தது என்றால், குருடும் செவிடுமாய் இருந்த கெலன் கெலரால் இவ்வளவு சாதிக்க முடிந்தது என்றால், தமது துன்பம் நிறைந்த வாழ்வின் நடுவில் டோல்ஸ்ரோய் நல்ல நாவலாசிரியராயும் சோக்கிரட்டீஸ் நல்ல தத்துவஞானியாகவும் வரமுடிந்தது என்றால், "என்னால் ஏன் முடியாது? என்று தமிழீழ மாணவர் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்". முதலில், நல்ல கலைப் படைப்புக்களைப் பார்க்கவேண்டும். நல்ல இலக்கியப் படைப்புக்களை வாசிக்க வேண்டும். அவற்றின் வடிவங்களையும் நுணுக்க உத்திகளையும் புரிந்துகொள்ள வேண்டும். பின்னர் கருத்தாழமும், கலைத்துவமும் நிறையும்படி படைக்கவேண்டும்.**

"சாம்ராஜ்யியங்களின் தலைவிதி இளைஞர் கல்வியிலேயே தங்கியுள்ளது" என்றார் அரிஸ்டோட்டல். "உன்னால் எதைச் செய்யமுடியும் என்று நீ நம்புகின்றாயோ, அதைவிடக் கூடுதலாக உன்னால் எதையும் செய்யமுடியாது" என்பது ஒரு கூற்று. "தமிழீழத்தில் எமது பண்பாடுகளைப் பேணி, நல்ல கலைகளைப் படைக்க எம்மால் முடியும் என்ற நம்பிக்கையே மாணவரிடத்தில் முதலில் வேண்டப்படுவதாகும்.

நம்பிக்கை ஏற்பட்ட பின்னர், மாணவர் எமது கலை, பண்பாடு பற்றியும், உலகின் சமகாலப் படைப்புக்கள் பற்றியும் படிக்கவேண்டும். கற்பனாவாதம், இயற்பண்புவாதம், யதார்த்தவாதம், மீயதார்த்தவாதம், இருப்பியல் வாதம் போன்ற போக்குகள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். இசை, கவிதை, தத்துவம், உளவியல், விஞ்ஞானம் போன்ற துறைகளிலும் தன் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். தன் சொந்த உணர்வுகளைக் கூர்மைபெறச் செய்யவேண்டும். சமுதாயத்தை ஆழ்ந்து நோக்க வேண்டும். வாசகர் அல்லது பார்வையாளர் கூட்டத்தின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகத் தனது கலைத் திறமையை மலினப்படுத்திவிடக் கூடாது.

மாணவன் ஒரு குடும்பத்தினதும் பாடசாலையினதும் கண்ணாடி கொட்டுத் தண்ணீரில் சூரியன் பிரகாசிப்பது போல, மாணவனின் கலைப் படைப்பில் தாய், தந்தையரதும் ஆசிரியர்களதும் பண்பாடு பிரதிபலிக்கும். அந்தச் சூழல்! அது மிகமுக்கியமான ஒரு சொல்.

ஆசிரியர் பேசிக்கொண்டே போவார்; பிள்ளை கவனமாக உற்றுக் கேட்பதுபோல அவரைப் பார்த்துக்கொண்டே இருக்கும். விதிகளைப் பற்றியும் கணக்குகளைப் பற்றியும் சூட்சுமமாகச் சிந்தித்துச் சிந்தித்து அதன் மூளை களைப்படைந்தவுடன், பிள்ளை பின் தங்கிவிடுகின்றது. இயற்கையின் நடுவிலே குழந்தையின் மன ஆற்றல்களை மெதுவாக வளர்க்க முடிந்தால் தான், குழந்தை அற்புதமான கலைப் படைப்புக்களை ஆக்கும். ஐந்து, ஆறு மணிநேரப் பாடங்களுக்குப் பின்னர், விளையாடி ஓய்வெடுக்க அவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.



கோகிலா மகேந்திரன்

ஐந்து வயதில் இருந்து வாழ்க்கை முடிவுவரை ஒருவன் தனது பகுத்தறிவு, உணர்ச்சிகள், மன உறுதி, சுபாவம் ஆகியவை உருவாவதற்குச் சுற்றுச் சூழலில் இருந்து ஏற்றுக்கொள்ளுகின்ற விடயங்களைவிடப் பிறந்ததில் இருந்து, ஐந்து வயதிற்குள், குழந்தை பன்மடங்கு அதிகமான விசயங்களை ஏற்றுக்கொள்கின்றது என்பது உளவியலாளர் பலரின் கருத்தாகும். ஆகவே ஒரு மாணவன் எமது கலை, பண்பாட்டிற்கு என்ன பங்களிப்பைச் செய்யப் போகின்றான் என்பது, நாம் ஐந்து வயதுக்குள் அவனை எப்படி வளர்த்தோம் என்பதைப் பொறுத்தே இருக்கின்றது.

மாணவர்களைத் திறமைவாய்ந்தவர்கள், திறமை குறைந்தவர்கள் என்று பிரிக்காமல், பாடசாலைகளுக்கு இடையில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்காமல், எல்லாக் குழந்தைகளும் கற்றுக்கொள்ளுவதற்கான விருப்பத்தை எம்மால் ஏற்படுத்த முடிந்தால், அவர்களிடம் கலைத்திறனை வளர்க்க முடியும்.

**மாணவர்களுக்குக் கலையைக் கற்றுத்தர வேண்டுமானால், அவர்களை நேசிக்க வேண்டும். அப்போதுதான் நட்புணர்வு, மனிதநேயம் ஆகிய பண்புகளோடு அவர்கள் கலைகளைப் பயில்வர். ஒரு ஆசிரியர் கலைகள் மூலம் மாணவர் இதயத்தைத் தொடுவார் ஆயின், மாணவன் தனது குடும்பத்தை, பாடசாலையை, உழைப்பை, தாய் நாட்டை நேசிப்பவன் ஆவான்.**

சமுதாயத்தில் ஏற்படும் தீமையையும் அநியாயத்தையும் சற்றும் சகியாமல் இருக்கக் கற்றுத்தருவதே, பண்பாட்டுப் போக்கில் மிகவும் பயனுள்ள வேலையாகும்.

மாணவரிடமிருந்து அற்புதமான கலை பிறக்க வேண்டுமானால், மாணவ ஆசிரிய உறவு நெருக்கமானதாய் இருக்க வேண்டும். மாணவரின் அந்தரங்க அசைவுகளை ஆசிரியர் உணரவேண்டும். குழந்தையின் குதூகலத்தையும் வருத்தத்தையும் ஆசிரியர் அனுபவிக்க வேண்டும். ஆசிரியர், மாணவரை வகுப்பில் மட்டும் சந்திப்பதாய் இருக்கக் கூடாது; வாழ்வின் தொடுபுள்ளிகள் பலவற்றிலும் அவர் அவனைச் சந்திக்க வேண்டும்.

**தாய் நாட்டின்மீது அளவற்ற காதல்; அதன் மங்கலத்திற்காகவும் மகத்துவத்திற்காகவும், சொந்த நாட்டை எதிரிகளுக்கு விட்டுக்கொடுக்காமல் இருப்பதற்காகவும், எதையும் தியாகம் செய்யச் சித்தமாய் இருத்தல், போன்ற ஒழுக்கப் பண்புகளை அறியும் அறிவின் போக்குக் குழந்தைப் பருவத்திலேயே தொடங்கிவிடுகின்றது. கட்டிளமைப் பருவமோ, உடல் வலிமையானது என்பதை ஏற்றுக்கொள்ளும் பருவம் -சமூகப் பொறுப்புள்ள நடத்தைகளைத் திட்டமிடத் தொடங்கும் பருவம் -உணர்வு ரீதியாகப் பெற்றோரில் இருந்தும் மற்றவரில் இருந்தும் சுதந்திரமாக இருத்தலை விரும்பும் பருவம் -ஒழுக்கரீதியான ஒழுங்கமைப்புக்களையும் பெறுமதிகளையும் உருவாக்கவும் பின்பற்றவும் விரும்பும் பருவம் - எதையும் விரைவில் பின்பற்றக்கூடிய பருவம்.**

ஆகவே, இப்பருவத்தினரான மாணவர் எறும்புகளைப்போல் சிறந்த குடிகளாக இருப்பின், தம் இனநலனைச் சிறப்பாகப் போற்றுவர். தமிழீழத்தின் கலை, பண்பாடுகளைப் பேணவும் மேற்கொண்டு வளர்த்துச் செல்லவும் முன்னின்று உழைத்து வெற்றி காண்பர். ■

**நன்றி: 'ஈழநாதம்'**

## அவநம்பிக்கை...

தரப்பிலும் உச்ச அளவில் உள்ளது. குறிப்பாக இருபகுதியினருமே யெருசலேமை தமது புனிதத் தலைநகரமாகக் கொள்வதோடு, அது தொடர்பாகத் தீவிர நிலைப்பாடுகளை எடுக்கவும் தயங்கார். இப்போது யெருசலேம் பகுதிகளில் யூதக் குடியேற்றங்கள் விரிவாக்கப்பட்டு புதிய வதிவிடங்கள் அமைக்கப்படுவது பாலத்தீனியருக்கு பெரும் சினத்தையூட்டும் செயலாகின்றது. 1967ஆம் ஆண்டு போரின் போது கிழக்கு யெருசலேமை கைப்பற்றி, இசுரேல் தன்னோடு இணைத்துவிட்டது. ஆனால் பாலத்தீனிய முசுலீம்கட்கோ அது முகமது நபியின் புனிதத் தலமாக -பாலத்தீனிய கிறிஸ்தவர்க்கோ யேசு வாழ்ந்து சிலுவையில் அறையப்பட்ட இடமாக உள்ளது. ஆனால் யூதர்க்கோ யெருசலேம் 3000 ஆண்டுகட்கு முன் டேவிட் மன்னன் ஆண்ட தமது சொர்க்க நகரமாக, உயிர் மையமாக உள்ளது. இச் சிக்கல் எவ்வாறு தீர்க்கப்படும் என்பது எவரின் புத்திக்கும் எட்டாத விடயம்.

எனவே இத்தகைய நிலையில் செயலர் வாரன் கிறிஸ்தோபர், தென்னாபிரிக்க விடிவோடு பாலத்தீன விடிவை ஒப்பிட்டு சிலாகித்துப் பேசியதோ, நேற்று யோகனர்ஸ் பேர்க், நாளை யெரிக்கோ என அரபாத் ஆதரவாளர்கள் கூறுவதோ பொருத்தமற்றது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். முன்னர் தென்னாபிரிக்க வெள்ளை இனவாத அரசு கறுப்பின மக்களைப் பிரிப்பதற்காக, பண்டுஸ்தான்(Bantustan) என அழைக்கப்பட்ட அதிகாரம் அற்ற வெள்ளை இன அரசை நம்பியிருக்கத்தக்க முறையில் வழங்கிய கறுப்பினத் தாயகப் பகுதிகளை ஒத்ததே, இன்றைய பாலத்தீனிய தன்னாட்சிப் பகுதி என்பதே உண்மை. அதுவே தென்னாபிரிக்காவிற்கும், பாலத்தீனத்திற்கும் காணப்படும் ஒரேஒரு ஒற்றுமை என்கிறார் ஆய்வாளர் ஒருவர்.

எனவே இன்று எழுந்துள்ள கேள்வி என்னவென்றால், இவ்வுடன்பாடு பாலத்தீனிய தன்னாட்சியின் தொடக்கமா அல்லது அரபாத்தின் வீழ்ச்சியின் முடிவா அல்லது இசுரேலின் அடக்குமுறையின் முடிவா அல்லது பாலத்தீனியப் போராட்டத்தின் புதியதொரு பரிமாணத்தின் தொடக்கமா? என்பதேயாகும். இதற்கான விடையை நாம் காண பொறுத்திருக்க வேண்டும். என்றாலும் போராட்ட இலக்கில் மிக உறுதியாக இருத்தல் என்பதை மிகத் தெளிவாக உணர்ந்துள்ள எம்மக்கள், அரபாத் எங்கே தவறு விட்டார் என்பதை இலகுவில் புரிந்து கொள்வார்கள். ■

## ஐ.நா.உடன்படிக்கை..

ஜெனீவா உடன்படிக்கையின் மேலதிக மூலப்பிரதி பதினொன்று (11) கூறும் சர்வதேசரீதியில்லாத ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது சம்பந்தமான மூலப் பிரதியை சிறீலங்கா இன்னும் அங்கீகரிக்கவில்லை. இந்தவிடயம் வடக்கு -கிழக்கு யுத்தத்துடன் மிகத் தொடர்புடையதாகும். இதனை சிறீலங்கா அங்கீகரிக்க வேண்டும்.

புலம்பெயரும் எல்லாத் தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையையும் சிறீலங்கா அங்கீகரிக்க வேண்டும்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுக்கள், நீதிபதிகளின் நடத்தை பற்றி பரிசீலனை செய்ய முடியாதவாறு சிறீலங்கா தனது அரசியல் யாப்பைத் திருத்தி, நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

இலங்கை 'அசோசியேட்டட் பத்திரிகைகள்' என்ற நிறுவனத்தை, சிறீலங்கா அரசாங்கம் தனது கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்து, தொடக்கத்தில் அறிவிக்கப்பட்டிருந்தபடி உபயோக உரிமையின் பிரகாரம் சொந்தமாக்குதல் என்ற நோக்கத்தை அனுமதிக்க வேண்டும்.

சுதந்திரமான வானொலி, தொலைக்காட்சி அதிகார சபைகளை நிறுவி, இப்பொழுது அரச கட்டுப்பாட்டிலிருக்கும் அச்சேவைகளை அவற்றிடம் கையளிக்கவேண்டும்.

பாராளுமன்றமே முறைப்பாடு செய்பவராகவும், வழக்குத் தொடர்பவராகவும், நீதிபதியாகவும் செயற்படும் 1978 ஆம் ஆண்டுப் பாராளுமன்ற சிறப்புரிமைச் சட்டத் திருத்தங்களை நீக்கி, பேச்சுச் சுதந்திரம், நீதியான சுதந்திர விசாரணை ஆகியவற்றுக்கு வசதி செய்யவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, உயிர்வாழும் உரிமைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அடிப்படை உரிமைகளுக்கு எதிராக இருக்கும் நடைமுறையிலுள்ள சட்டங்களை மாற்ற, ஏற்பாடு செய்யவேண்டும்".

எனக்கோரும் அறிக்கை ஒன்றை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம், சிறீலங்காவில் வெளியிட்டுள்ளது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூநகரி வெற்றியின் உற்ற துணைவர்கள்



கப்டன் சிவலோகன்
(சி. அருளானந்தம்) மட்டு.



மேஜர் தொண்டமான்
(க. நல்லதம்பி) மட்டு.



மேஜர் கலையழகன்
(பொ. பேரின்பராசா) மட்டு.



கப்டன் மதிநிலவன்
(க. தவராசா) திருமலை



கப்டன் ஐயனார்
(செ. ராசசேகரம்) யாழ்.



தாய்ப் படைத்தளமாகிய பலாலிப் பெருந்தளத்துடன் பூநகரிக் கூட்டுத்தளத்தை இணைத்து வைத்திருந்த 'தொப்புள் கொடியை அறுத்தெறியும் பணி இவர்களுடையது. எதிரியின் நாடி நரம்புகளுக்குள் புகுந்து, அவனை உலுக்கி எடுத்தார்கள். பூநகரிக்குப் புது இரத்தம் பாயும் சாத்தியங்களைத் தடுத்தார்கள். அங்கு புயலை வீசச் செய்துகொண்டிருந்த புலிகளின் சேனைக்கு, தென்றலைப் பரிசாக அனுப்பிய இந்தக் கரும்புலிகள், எதிரி குந்தியிருந்த எமது நிலத்திலேயே விதையாகிப் போனார்கள்.



கப்டன் கரிகாலன்
(இ. பிரபாகரன்) திருமலை



கப்டன் சீராளன்
(ஞா. குணம்) மன்னார்



கப்டன் செந்தமிழ்நம்பி
(செ. ஜெகன்) யாழ்.



லெப். ஜீவரஞ்சன்
(கி. முருகுப்பிள்ளை) மட்டு.



லெப். வீரமணி
(தெ. சுதாகர்) யாழ்.



லெப். நல்லதம்பி
(த. கோகுலநாதன்) மட்டு.



லெப். செங்கண்ணன்
(த. செந்தூர்பாண்டியன்) யாழ்.



லெப். கண்ணன்
(ந. நேசகுலேந்திரன்) யாழ்.


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்